KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL



மலர்:- 32, 19 September 2025 இதழ்:- 30

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600



NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8


## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## தெருச்சண்டியர் போல் நடக்கும் தமிழ்க்காங்கிரஸ்! புலிகளின் அதிமூத்த முன்னாள் தளபதி மனோகர் வேதனை!

தியாக தீபம் திலீபனின் ஈகத்தின் பெறுமதியினையோ தமிழ்த் தேசியம் என்ற விடயத்தினையோ விளங்கிக் கொள்ளாமல் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் கோமாளிக் கூத்துகளை நடாத்துவதையும் எமது போராட்டத்தினை புரிந்து கொள்ளாமல் ஒட்டுமொத்த தமிழினத்தையும் தலை குனியும் வகையில் தெருச் சண்டியர்கள் போல் நடந்து கொள்வதையும் சகிக்க (24ம் பக்கம் பார்க்க)



ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
**eelanadu.ca**
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

## வடக்கில் தாதிய நியமனங்களில் இனவாதம் பேசும் தமிழ்த்தேசியவாதிகள் - வைத்திய அதிகாரி வினோதன் காட்டம்!

# தாயகத்தில் நினைவேந்தல் நிகழ்வுகளைக் குழப்புவதில் கஜேந்திரகுமார் அணி மும்முரம் - மணிவண்ணன் குற்றச்சாட்டு!

தாயகத்தில் இடம்பெறும் நினைவேந்தல் நிகழ்வுகளை கஜேந்திரகுமார் மற்றும் கஜேந்திரன் தலைமையிலான அணியினர் குழப்புவதில் மும்முரமாக ஈடுபட்டு வருவதாகவும் அவர்கள் தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்காது தமது எஜமானர்களுக்கு சேவகம் செய்வதாக ,யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் குற்றம் சாட்டியுள்ளார். யாழ் ஊடக அமையத்தில் கடந்தவாரம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே (4ம் பக்கம் பார்க்க)





## இடிந்து விழுந்தது சங்கிலியன் மந்திரிமனை! புனரமைக்க காணி உரிமையாளர் ஒருவர் தடை!

# இடிந்து விழுந்தது சங்கிலியன் மந்திரிமனை! புனரமைக்க காணி உரிமையாளர் ஒருவர் தடை!

யாழ்ப்பாணம் இராசதானியை ஆண்ட சங்கிலிய மன்னனது மந்திரிமனையை கடந்த 14 வருடங்களுக்கு மேலாக பாதுகாக்க நடவடிக்கை எடுத்தும் பயனளிக்கவில்லை என தொல்லியல் திணைக்களம் கைவிரித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் பெய்த மழை காரணமாக தொல்பொருள் சின்னமான மந்திரி மனையின் ஒரு பக்கம் இடிந்து விழுந்துள்ளது. அது தொடர்பில் தொல்லியல் திணைக்களத்தின் யாழ்ப்பாண பிராந்திய உதவிப்பணிப்பாளர் U.A.பந்துலஜீவவை தொடர்பு கொண்டு கேட்ட போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,



யாழ்ப்பாண இராசதானி காலத்திற்குரியதாக கருதப்படும் மந்திரி மனை, பாதுகாக்கப்பட வேண்டிய தொல்பொருள் சின்னமாக 2011ஆம் ஆண்டு வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து மந்திரிமனையை பாதுகாக்கவும் அதனை புனரமைக்கவும் பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனாலும் அவை எதனையும் செய்ய முடியவில்லை.

மந்திரிமனை அமைந்துள்ள காணியானது தனிநபருக்கு உரியது. அவருக்கு சொந்தமாதாகவே மந்திரி மனை காணப்படுகிறது. அதனால் அவரின் அனுமதியின்றி தொல்லியல் திணைக்களத்தால் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாது.

மந்திரி மனையை புனர்நிர்மாணம் செய்து பாதுகாப்பதற்காக 2011ஆம் ஆண்டு முதல் வடமாகாண ஆளுநர்கள் மாவட்ட செயலர்கள் தொல்லியல் பணிப்பாளர்கள் என மாறி மாறி வந்த அத்தனை பேரும் காணி உரிமையாளருடன் பல்வேறு கட்ட கலந்துரையாடல்களை முன்னெடுத்த போதிலும் அவர் எதற்கும் சம்மதம் தெரிவிக்கவில்லை. இந் நிலையில் குறித்த காணியை கொள்வனவு செய்வதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டது. அதற்கும் அவர் சம்மதிக்கவில்லை.

மந்திரிமனையை புனரமைக்க பல்வேறு தன்னார்வ கொடையாளிகள் , உலக வங்கி என பல்வேறு பட்ட தரப்பினரும், நிதியுதவிகளை வழங்க முன் வந்தார்கள். ஒரு கொடையாளி 50 இலட்ச ரூபாயை வழங்கியும் இருந்தார். அவர் நிதி வழங்கி இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் காணி உரிமையாளரின் சம்மதம் இல்லாதமையால் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள முடியாது போனமையால் , அந்த கொடையாளி தனது பணத்தினையும் மீள பெற்றுக்கொண்டார். இவ்வாறான நிலையில் மந்திரி மனை பல்வேறு சேதங்களை அடைந்திருப்பதால் அது இடிந்து விழாமல் இருக்கும் வகையில் எமது தற்துணிவின் அடிப்படையில், இடிந்து விழ கூடிய நிலைமையில் காணப்பட்ட பகுதிகளுக்கு 19 இரும்பு கம்பிகள் பொருத்தப்பட்டு அவற்றை பாதுகாத்தோம்.

அந்த கம்பிகளை திருடர்கள் திருடி சென்றுள்ளார்கள். இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தோம். பொலிஸார் அதனை ஒரு முறைப்பாடாக மாத்திரமே ஏற்றுக ' கொண்டார்களே தவிர , விசாரணைகளை முன்னெடுத்து திருடர்களை கைது செய்யவில்லை. இவ்வாறான நிலையில் தான் இன்றைய தினம் பெய்த மழை காரணமாக ஏற்கனவே இடிந்து விழ கூடும் என எதிர்பார்த்து இரும்பு கம்பிகள் பொருத்தி இருந்த பகுதி இரும்பு கம்பிகள் திருடப்பட்டமையால் இடிந்து விழுந்துள்ளது.

தொல்லியல் சின்னமாக 2011ஆம் ஆண்டு வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட மந்திரிமனை தனியார் ஒருவரின் சொத்தாக காணப்படுவதால் இது வரை காலமும் குறித்த தனியாருடன் தொல்லியல் திணைக்களம் கலந்துரையாடல்களை நடாத்தி வந்தது. அவை எதற்கும் அவர் தனது சம்மதத்தினை தெரிவிக்கவில்லை.

இவ்வாறான நிலையில் மந்திரி மனையின் ஒரு பாகம் இடிந்து விழுந்துள்ளது. அதனால் தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் இது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் பேசி அவர்களின் ஆலோசனைகளின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம் என தெரிவித்தார்.


கந்தன் துணை

வணக்கம் நமது தமிழ் சொந்தங்கள் அனைவருக்கும் நாங்கள் இலங்கையில் உள்ள நாவலர் பரம்பரை வழியில் வந்த தமிழர்களின் பரம்பரை ஜோதிடர் திரு.ஆறுமுக நாவலர் தமிழ்நாட்டிலிருந்து முதன்முறையாக கனடாவிற்கு வருகை தந்துள்ளார். நீங்கள் இதுவரை எத்தனையோ ஜோதிடர்களை சந்தித்து பலன் பெறாத நீங்கள் ஒருமுறை என்னை சந்தித்து உங்கள் ஜோதிட பிரச்சனைகளுக்கு பலன் பெற்று செல்லுங்கள்.




ஸ்ரீ கந்தன் ஜோதிட நிலையம்

ஜோதிடர். ஆறுமுக நாவலர்



1.ஜாதக குறிப்பு பலன்கள் 2.கைரேகை பலன்கள் 3.முக லக்ன பலன்கள் 4.சோழிப் பலன்கள் துல்லியமாக கணித்து கூறப்படும்.

1.உடல்நலம், 2.கல்வி, 3.வியாபாரம், 4.திருமணத்தடை, 5.காதல் பிரச்சனை, 6.குழந்தை பாக்கியம், 7.வாஸ்து சாஸ்திரம், 8.தாம்பத்திய கோளாறு, 9.வழக்கு விவகாரம், 10.வெளிநாட்டு பயணங்கள், 11.செய்வினை, தீயசக்தி தீர்வுகள், 12.கணவன், மனைவி ஒற்றுமை பிரச்சனை, 13.சொத்து பிரச்சனை, 14.செவ்வாய், நாகதோஷ பரிகாரம், 15.எதிரிகளின் பிரச்சனை, 16.குடும்பத்தில் திடீர் இழப்பு ஆகிய அனைத்து விதமான பிரச்சனைகளுக்கும் சிறந்த முறையில் தீர்வு கொடுக்கப்படும்

தொடர்புக்கு : 437 - 833 - 6651

OUR BRANCHES: TORONTO, SCARBOROUGH, MISSISSAUGA, BRAMPTON

உடனே அப்பாய்மெண்ட் எடுத்துக் கொள்ளுங்கள்

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!



என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தைகளின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நான் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய முகநூல்களில் இவர்களது புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# ஹரி ஆனந்தசங்கரியின் கடமை தொடர்பில் புதிய தீர்ப்பு

கனேடிய பொது பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரியின் கடமை தொடர்பில் அந்நாட்டின் நெறிமுறை ஆணையாளர் புதிய தீர்ப்பை வழங்கியுள்ளார். அதன்படி ஹரி ஆனந்தசங்கரியின் மனைவி கனேடிய சிவில் லிபர்ட்டிஸ் அசோசியேசன் என்ற அமைப்பின் பணிப்பாளராக இருந்தாலும் அதற்கும் அவரது கணவரான ஹரி ஆனந்தசங்கரியின் தேசிய பாதுகாப்பு கடமைகளுக்கும் எந்த நலன் முரண்பாடும் இல்லை என அந்த தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஹரி ஆனந்த சங்கரியினால் வலுவான எல்லைச் சட்டம் என்ற யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அவர் தமது கடமைகளை நிறைவேற்றும்போது நலன் மோதல் இருப்பதாக விமர்சனம் எழுந்துள்ளது.

இதனையடுத்து ஆனந்தசங்கரியின் கோரிக்கையின்படி கனடாவின் நெறிமுறை ஆணையாளர் தமது கருத்தை வெளியிட்டுள்ளார். இதன்படி அவருடைய மனைவியின் சேவைக்கும் அமைச்சின் கடமைகளுக்கும் எவ்வித நலன் முரண்பாடுகளும் இல்லையென்று அவர் தீர்ப்பளித்துள்ளார்.

இதேவேளை ஹரி ஆனந்தசங்கரியின் தமிழ் சமூகத்துடனான தொடர்புகள் தொடர்பிலும், நலன் மோதலை நிவர்த்தி செய்ய ஒரு முறையான திரையிடல் தேவையில்லை என்றும் கனடாவின் நெறிமுறை ஆணையாளர் வான் ஃபிங்கன்ஸ்டீனும் குறிப்பிட்டுள்ளார்.

# கேதீஸ்வரன் நியமனத்தில் அரசியல் தலையீடு இல்லை

சென்னைக்கான துணை உயர்ஸ்தானிகராக கேதீஸ்வரன் கணேசநாதன், நியமிக்கப்பட்டதில் எவ்வித அரசியல் தலையீடும் இல்லை என வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜே.வி.பி ஆதரவாளரான கேதீஸ்வரன் கணேசநாதன், சென்னைக்கான இலங்கையின் துணை உயர்ஸ்தானிகராக அண்மையில் நியமிக்கப்பட்டார். எனினும் இது இராஜதந்திர வட்டாரங்கள் மற்றும் வெளிவிவகார அமைச்சினுள் குறிப்பிடத்தக்க கவலையைத் தூண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்கூட்டிய இராஜதந்திர அல்லது வெளிநாட்டு சேவை அனுபவம் இல்லாத கேதீஸ்வரன், இலங்கையின் மிக மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வெளிநாட்டுப் பதவிகளில் ஒன்றுக்காக நியமிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்தன. இந்த நிலையில் இந்த நியமனம் குறித்து கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர், தூதுவர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே இருக்கின்றது எனவும்,அதற்கமைய உயர்ஸ்தனிகர்கள் மற்றும் தூதுவர்களை ஜனாதிபதி நியமித்து அனுப்புவார் என்றும் தெரிவித்தார்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பிரிக்க முடியாத உறவுக்கும், எதிர்கால ஒத்துழைப்புக்கும் அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்பை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை இந்திய அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்வதாக வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்தார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# தாயகத்தில் நினைவேந்தல் நிகழ்வுகளைக் குழப்புவதில் கஜேந்திரகுமார் அணி மும்முரம் - மணிவண்ணன் குற்றச்சாட்டு!



தாயகத்தில் இடம்பெறும் நினைவேந்தல் நிகழ்வுகளை கஜேந்திரகுமார் மற்றும் கஜேந்திரன் தலைமையிலான அணியினர் குழப்புவதில் மும்முரமாக ஈடுபட்டு வருவதாகவும் அவர்கள் தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்காது தமது எஜமானர்களுக்கு சேவகம் செய்வதாக ,யாழ் . மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் குற்றம் சாட்டியுள்ளார். யாழ் ஊடக அமையத்தில் கடந்தவாரம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நினைவு வாரத்தில் நல்லூர் பின் வீதியில் தியாக தீபம் தொடர்பிலும், அவர் உண்ணாவிரதம் இருந்த நாட்களில் அவர் பட்ட வேதனைகளையும் ஆவணப்படுத்தி , ஆவண காட்சி கூடத்தை கடந்த 02 வருடங்களாக நடாத்தி வருகிறோம்.

இம்முறை நாம் காட்சி கூடம் நடாத்தும் , மாநகர சபைக்கு சொந்தமான காணியை எம்மை காட்சி கூடம் நடாத்த விடாது தடுக்கும் முகமாக சைக்கிள் கட்சியினர் அவ்விடத்தை முன் பதிவு செய்துள்ளனர். அதனால் எமக்கான அனுமதி வழங்கப்படவில்லை.

எங்களுடைய நிகழ்வுகள் மிக உணர்வு பூர்வமாக அவ்விடத்தில் தியாக தீபத்தின் நினைவேந்தல் நிகழ்வுகளையும் மாவீரர் நிகழ்வுகளையும் குறித்த காணியில் நடத்தி வந்தோம். இந்நிலையிலையே அந்த காணியை தற்போது சைக்கிள் கட்சியினர் முன் பதிவு செய்துள்ளனர். இவர்கள் அரச தரப்புடன் இணைந்து நினைவேந்தல் நிகழ்வுகளை நீர்த்து போக செய்வதற்கு பல வருடங்களாக முயன்று வருகின்றனர். அதன் ஒரு அங்கமாகவே தியாக தீபத்தின் நினைவேந்தல் நிகழ்வுகளை நாங்கள் நடாத்த கூடாது எனவும் அவரது நினைவுகளை சுமந்த ஆவணப்படுத்தல்கள் காட்சி கூடத்தை நடாத்த விட கூடாது என்பதற்காக நாம் வழமையாக செய்யும் யாழ் மாநகர சபை காணியை அடாத்தாக தாமும் முன் பதிவு செய்துள்ளனர்.

மாநகர சபைக்கு சொல்லி இருக்கின்றனர். தமக்கு தராமல் விட்டால் யாருக்கும் அந்த காணியை கொடுக்க கூடாது என கூறியுள்ளனர். தியாக தீபத்தின் நினைவேந்தல் ஆரம்பமாகும் நிலையில். இவர்கள் இவ்வாறாக அடாத்தாக செயற்படுகின்றனர்.

இவர்கள் தற்போது முன்னாள் ஆயுத குழுக்களுடனும் தேசிய மக்கள் சக்தியுடனும் வெளிப்படையாக இணைந்து உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைத்துள்ளனர். ஏனெனில் அவர்கள் தமிழ் மக்களின் உணர்வுகளை மதிப்பவர்கள் அல்ல தியாக தீபத்தின் வீர சாவுக்கு காரணமானவர்கள் உடன் தான் இவர்கள் தற்போது கூட்டு வைத்துள்ளனர்.

தாயகத்தில் நடைபெறும் நினைவேந்தல்களை கஜேந்திரகுமார் மற்றும் கஜேந்திரன் தலைமையிலான அணியினர் குழப்பும் விதமாகவே கடந்த காலம் தொட்டு செயற்பட்டு வருகின்றனர். முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தினை மிக உணர்வு பூர்வமாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழு முன்னெடுத்து வரும் போது அதனை குழப்பினர். மட்டக்களப்பில் அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வுகளை குழப்பினர், நல்லூரில் தியாக தீபத்தின் நிகழ்வுகளை குழம்பினார், மாவீரர் துயிலுமில்லங்களில் குழப்பங்களை ஏற்படுத்தினார். இவ்வாறாக அவர்கள் தமிழ் மக்களின் உணர்வு பூர்வமான நினைவேந்தல் நிகழ்வுகளை காலகாலமாக குழப்பி வருகின்றனர். (8ம் பக்கம் பார்க்க)

ஈஸ்வரன் திருமண சேவை

பதிவு இல. V110 1990 இல் பிறந்த மணமகன் Canada Cityzen - Engineer லக்னத்தில் செவ்வாய். கனடாவில் அல்லது ஊரில் மணமகளை எதிர்பார்க்கின்றனர்

தொடர்புகளுக்கு:-1416 771 6013 Canada

கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# அரசியல் கைதிகளை உறவுகள் சந்தித்த பின் கனத்த நெஞ்சத்துடன் பிரிந்து வந்த சோகம்



அரசியல் கைதிகளுக்கும் அவர்களது உறவினர்களுக்குமிடையே சந்திப்பு ஒன்று இடம் பெற்றது. இதன்போது உணர்வுபூர்வமான சந்திப்பு ஒன்று அங்கே நடந்தது. அரசியல் கைதிகளை சந்தித்து விட்டு கனத்த இதயத்துடனும் கண்களில் கண்ணீருடனும் அரசியல் கைதிகளின் உறவுகளும் நாங்களும் வெளியே வந்தோம் என குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் செயற்பாட்டாளர் முருகையா கோமகன் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளை போகம்பரை சிறையில் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறுகிய நேரத்தில் நடந்த இந்த சந்திப்பின் போது அரசியல் கைதியான ஆனந்தசுதாகரனின் மகளை தந்தையான ஆனந்தசுதாகரன் தொட்டு உணவு ஊட்டிய அந்த நிகழ்ச்சி சம்பவம் மனதை ரணமாக்கியது. இந்த சந்திப்பானது நிரந்தரமாக இந்த பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டுமென இந்த நாட்டின் ஜனாதிபதியை கேட்டுக் கொள்கின்றோம்.

தேசிய கைதிகள் தினத்தை முன்னிட்டு கைதிகள் பொதுமன்னிப்பின்கீழ் விடுதலை செய்யப்படுவது வழமை. ஆனால் இந்த ஆண்டு கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை.

தமது விடுதலை இடம் பெறும் என கைதிகள் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர். மீதமாக உள்ள பத்து அரசியல் கைதிகளும் நல்லிணக்கத்தின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட வேண்டும் என வினயமாக ஜனாதிபதியை கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

## வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் வாக்குரிமை குறித்து ஆய்வு செய்யக் குழு?

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் தேர்தல்களில் வாக்களிக்க ஏதுவாக சட்டங்களைத் திருத்துதல் மற்றும் உருவாக்குதல் தொடர்பான விவரங்களை ஆய்வு செய்வதற்காக ஒரு குழுவை நியமிப்பதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இலங்கை அரசியலமைப்பின்படி இலங்கையில் வசிக்கும் குடிமக்களுக்கும், தேர்தல் சட்டத்தின்படி வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளவர்களுக்கும் மட்டுமே வாக்களிக்கும் உரிமை ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய தேர்தல் சட்டத்தின்படி, வெளிநாடுகளில் வசிக்கும் குடிமக்கள் வாக்களிக்க அனுமதிக்கும் எந்தவொரு முறையையும் பாதுகாக்க எந்த ஏற்பாடும் இல்லை, மேலும் இது தொடர்பாக ஒரு சட்டமும் வகுக்கப்படவில்லை.

இந்தியா, பங்களாதேஷ் மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற பல ஆசிய நாடுகள், வெளிநாடுகளில் வசிக்கும் தங்கள் குடிமக்கள் வாக்களிக்க உதவும் சட்ட உத்திகளை வகுத்துள்ளன. மேலும் இலங்கைக்கும் அத்தகைய சட்டங்களைத் திருத்துவது சரியான நேரத்தில் தேவையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி வெளிநாடுகளில் வசிக்கும் குடிமக்களின் வாக்களிக்கும் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சட்டங்களைத் திருத்துவதற்கும் புதிய சட்டங்களை உருவாக்குவதற்கும் தொடர்புடைய விவரங்களை ஆய்வு செய்ய ஒரு குழுவை நியமிக்க பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் நடவடிக்கை எடுக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இந்தக் குழுவில் தேர்தல் ஆணையம், வெளிவிவகார வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சகம், பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சகம் மற்றும் பிற அமைச்சகங்கள் மற்றும் நிறுவனங்களின் அதிகாரிகள் இருப்பார்கள் எனவும் தெரிய வருகின்றது.

# மஹிந்தா யுத்தத்திற்கு தலைமை தாங்கியதைப் போன்று நாடு வங்குரோத்து அடைவதற்கும் தலைமை தாங்கினார்

ஜனாதிபதிகளின் உரித்துரிமைகளை நீக்கும் சட்டத்துக்கு மக்கள் மத்தியில் நல்லதொரு வரவேற்பு உள்ளது. தனது தந்தை மஹிந்த ராஜபக்ஷவுக்காக பொதுமக்களை ஒன்றிணைக்கும் நாமல் ராஜபக்ஷ இந்த சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிக்கவில்லை. யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு தலைமை தாங்கிய மஹிந்த ராஜபக்ஷ நாடு வங்குரோத்து நிலையடைவதற்கும் தலைமை தாங்கினார் என்பதை நாட்டு மக்கள் மறக்க போவதில்லை என தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தேவானந்த சுரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இல்லாதொழித்தவர்கள் தான் இன்று ஜனாதிபதி உரித்துரிமைகளை நீக்கும் சட்டத்துக்கு எதிராக பேசுகிறார்கள். இந்த சட்டம் தொடர்பில் நாட்டு மக்கள் மத்தியில் நல்லதொரு வரவேற்பு காணப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதிகளாக சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மைத்திரிபால சிறிபால ஆகியோர் அரச உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வெளியேறினார்கள். அவர்கள் ஆதரவாளர்களை அழைத்து ஊடக கண்காட்சி நடத்தவில்லை. ஏனெனில் அவர்களுக்கு எதிர்கால அரசியலுக்கான எவ்வித தேவையும் கிடையாது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நாமல் ராஜபக்ஷ உட்பட பொதுஜன பெரமுனவினர் அரசியல் வெற்றிக்கான ஒரு நாமமாகவே கருதுகிறார்கள்.

தனது தந்தைக்காக விஜேராம இல்லத்துக்கு ஆட்களை கொண்டு வந்த நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதி உரித்துரிமைகளை நீக்கும் சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிக்கவில்லை. நாட்டு மக்களை போலியாகவே ஏமாற்றுகிறார்கள்.

இயற்றப்பட்ட இந்த சட்டம் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் எதிர்காலத்தில் செல்லுபடியாகும். ஆகவே இது அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிடுவது முறையற்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யுத்தத்துக்கு தலைமை தாங்கினார் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் யுத்த வெற்றியை குறிப்பிட்டுக் கொண்டு மக்களின் வரிப் பணத்தின் ஊடாக முழு குடும்பத்தையும் வளப்படுத்திக் கொள்ள முயற்சிப்பது எந்தளவுக்கு நியாயமானது.இவர் யுத்தத்துக்கு தலைமை தாங்கியதை போன்று நாடு வங்குரோத்து நிலையடைவதற்கும் தலைமை தாங்கினார் என்பதை நாட்டு மக்கள் மறக்க போவதில்லை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் அரச ஆதரவுடன் ஊழல் மோசடிகள் இடம் பெற்றன.எவ்வித நடவடிக்கைகளையும் அவர் மேற்கொள்ளவில்லை. ஊழல்வாதிகள் செல்வந்தர்களாயினார்கள். நாட்டு மக்கள் ஏழையாகினார்கள். நாடு வங்குரோத்து நிலையடைவதற்கு ராஜபக்ஷர்கள் பொறுப்புக்கூற வேண்டும்



என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என்பதை ஒருபோதும் மறுக்க முடியாது என்றார்.

இதுஇவ்வாறிருக்க நாட்டில் அதிகார துஸ்பிரயோகம் செய்தோர் இன்று தண்டிக்கப்படுகின்றார்கள். பொது. மக்களுக்கு நாங்கள் செய்த சத்தியத்தை இன்று செய்து காட்டி வருகின்றோம் என பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார். பாராளுமன்ற அமர்வில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறும் போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை சந்திக்க அவரின் ஆதரவாளர்கள் அணிதிரண்டு சென்றார்கள். அப்போது அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருப்பதை பார்த்தால் வியப்பாக இருக்கின்றது. காரணம் எங்களை போகசொல்லி விட்டார்கள். போவதற்கு இடமில்லை. மனைவியுடன் செல்கின்றேன் என பரிதாபகரமாக கூறுகின்றார். சரியாக பார்த்தால் அவர் வெட்கமடைய வேண்டும்.

காரணம் மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஹேமா பிரேமதாச இதே பாராளுமன்றத்தில் இருந்து விரட்டியடிக்கப்பட்டவர்கள். இவர்கள் வெளியில் விரட்டியடிக்க முன் சென்றிருக்க வேண்டும். அவர்களின் பாதுகாப்பு குறைக்கப்பட வில்லை, அவர்களுக்கான சலுகைகளே குறைக்கப்பட்டுள்ளன.

ரணில் தான் இந்த நாட்டை மிகவும் மோசமானநிலைக்குதள்ளியவர் என்றார்.

# நாட்டைச் சூறையாடி தின்று கொழுத்த பெருஞ்சாலிகள்



2017 முதல் 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்கள் வரையான காலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோத்தாபய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மனைவி ஹேமா பிரேமதாச ஆகியோருக்கு ஓய்வுதியம் , கட்டிடங்கள் கட்டுமான மற்றும் வாகன வசதிகளுக்காக ரூ.490 மில்லியனுக்கும் அதிகமாக செலவிடப்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இரண்டாவது நிறைவேற்று ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மனைவி திருமதி ஹேமா பிரேமதாச, ரூ. 65,000 ஓய்வுதியத்தையும் ரூ. 23,000 செயலாளர் கொடுப்பனவையும் பெற்றுள்ளார் (முன்னாள் ஜனாதிபதிகளின் வரபிரசாதங்களை நீக்குவதற்கான சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பிறகு செயலாளர் கொடுப்பனவு இழக்கப்பட்டது).

அவருக்கு வழங்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை இரண்டு. KW 1218 மற்றும் KY 5787 ஆகியவை அந்த வாகனங்கள்.

நான்காவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு கொழும்பு, நிதாஸ் மாவத்தை, எண் 7 இல் ஒரு உத்தியோகபூர்வ வீடு வழங்கப்பட்டுள்ளது, மேலும் அவருக்கு வழங்கப்படும் ஓய்வுதியம் ரூ. 97,500 ஆகும். அவரது செயலாளருக்கு வழங்கப்படும் கொடுப்பனவு 100,000. ரூபாவாகும்.

அவருக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை இரண்டு. KV 6807 மற்றும் KW 0461 ஆகியவை அந்த இரண்டு வாகனங்கள். அந்த உத்தியோகபூர்வ வீட்டின் புதுப்பிப்புக்காக இந்த ஆண்டு ரூ. 33,105.00 செலவிடப்பட்டுள்ளது.

ஐந்தாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கொழும்பு 7, விஜேராம மாவத்தையில் ஒரு உத்தியோகபூர்வ வீடு வழங்கப்பட்டது, மேலும் அவரது ஓய்வுதியம் ரூ. 97,500 ஆகும். அவரது செயலாளரின் கொடுப்பனவாக 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. A 295414 மற்றும் CAX 0559 ஆகிய இரண்டு வாகனங்கள் உத்தியோகபூர்வ வாகனங்களாக வழங்கப்பட்டன.

ஆறாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கொழும்பு 7, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் ஒரு உத்தியோகபூர்வ வீடு வழங்கப்பட்டது (அவர் பின்னர் வெளியேறினார்) மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கப்பட்ட ஓய்வுதியத்தின் மதிப்பு ரூ. 97,500. அவரது செயலாளருக்கு ரூ. 100,000 கொடுப்பனவு வழங்கப்பட்டது.

அவரது பயன்பாட்டிற்காக CAR 8775 மற்றும் CBH 7597 என்ற இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டன.

ஏழாவது நிறைவேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மாதம் எதுவும் ஒதுக்கப்படவில்லை, அவரது ஓய்வுதியம் ரூ. 97,500. அவரது செயலாளருக்கு ரூ. 100,000 கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. அவர் CBO 7521 மற்றும் PK 7090 என்ற இரண்டு வாகனங்களையும் பெற்றார்.

எட்டாவது நிறைவேற்று ஜனாதிபதி ரணில் விமசிங்கவும் உத்தியோகபூர்வ வீட்டைப் பெறவில்லை, மேலும் அவரது செயலாளர் பெற்ற கொடுப்பனவு ரூ.100,000. அவர் இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்களையும் பெற்றார். CAV 8103 மற்றும் KX 5301 ஆகிய இரண்டு வாகனங்கள் ஆகும்.

இதற்கிடையில் ஐந்தாவது நிறைவேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தை புதுப்பிப்பதற்காக ரூ. 510 மில்லியனுக்கும் அதிகமான தொகை செலவிடப்பட்டுள்ளதாக வட்டாரங்கள் தெரிவித்தன.

உத்தியோகபூர்வ இல்லத்தில் உள்ள ஜெனரேட்டர்களுக்கு 210 லீற்றர் டீசல் எரிபொருளையும் ஜனாதிபதி செயலகம் வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# 21 மாதங்களில் 27 கோடி ரூபா சொத்தை ஈட்டிய கெஹெலியவின் மகன்

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் மகன் ரமித் ரம்புக்வெல்லவுக்கு எதிராக இலஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு நேற்று (12) கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

சுகாதார அமைச்சராக கெஹெலிய ரம்புக்வெல்ல பதவி வகித்த 21 மாத காலத்தில் ரமித் ரம்புக்வெல்ல 27 கோடி ரூபாய்க்கும் அதிகமான சொத்துக்களை ஈட்டியுள்ள நிலையில், அதனை ஈட்டிய விதம் குறித்த தகவலை வெளிப்படுத்த தவறிய மைக்காகவே அவருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு ஈட்டப்பட்ட விபரங்களை வெளிப்படுத்த தவறிய சொத்துக்களில் சொகுசு வீடு மற்றும் ஜீப் ரக வாகனம் உள்ளிட்ட மேலும் பல சொத்துக்கள் இருப்பதாக கூறப்படுகின்றது.

கெஹெலிய ரம்புக்வெல்ல சுகாதார அமைச்சராக இருந்த காலத்தில் அவரது தனிப்பட்ட செயலாளராகவும் ரமித் ரம்புக்வெல்ல பணியாற்றியிருந்தார். இதன்படி 2022 ஜனவரி 1 ஆம் திகதியில் இருந்து 2023 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் திகதி



வரையான 21 மாத காலத்தில் அவர் 296,566,444.76 ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை ஈட்டியுள்ளார்.

அவற்றில் 275,302,616.06 ரூபாய் மதிப்புள்ள சொத்து எவ்வாறு ஈட்டப்பட்டமை தொடர்பில் அவர் வெளிப்படுத்த தவறியுள்ளார். அதன்படி, இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

மேலும் கையகப்படுத்திய விதத்தை வெளியிட முடியாத சொத்துக்களில், கொழும்பு 07, தர்மபால மாவத்தையில் அமைந்துள்ள ஒரு சொகுசு வீட்டு வளாகத்தில் ரூ. 80 மில்லியன் மற்றும் ரூ. 65 மில்லியன் மதிப்புள்ள இரண்டு வீடுகள் உள்ளன. ரமித்தின் பெயரில் 4 வங்கிக் கணக்குகள், அவரது மனைவிக்கு சொந்தமான 4 வங்கிக் கணக்குகள் மற்றும் 18 மில்லியன் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள டிஸ்கவரி ஜீப் மற்றும் பல சொத்துக்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் அவரது மனைவியின் பெயரில் வங்கிக் கணக்குகளில் நிலையான வைப்புத்தொகைகள் திறக்கப்பட்டுள்ளதாகவும் லஞ்ச ஒழிப்பு ஆணையம் வெளிப்படுத்தியுள்ளது.

இதேவேளை கொழும்பில் அமைந்துள்ள சினமன் லைஃப் என்ற சொகுசு வீட்டு வளாகத்தில் வீடு வாங்கியதாக தவறான தகவலை பரப்பும் நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதி பொது பாதுகாப்பு அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார். தனது பேஸ்புக் பக்கத்தில் விடுத்துள்ள பதிவொன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது போன்ற தவறான தகவல்களை பரப்பும் நபர்கள் குறித்து குற்றப் புலனாய்வுத் துறையிடம் முறைப்பாடு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சினமன் லைஃப்' என்ற வீட்டு வளாகத்தில் நான் ஒரு வீட்டை வாங்கியதாக சமூக ஊடகங்கள் மூலம் என்னைப் பற்றி தவறான மற்றும் அவதூறான பிரச்சாரத்தை பரப்ப ஒரு குறிப்பிட்ட குழு செயல்பட்டு வருவது தெரியவந்துள்ளது.'

இந்தப் பிரச்சாரங்களில் எந்த உண்மையும் இல்லை, மேலும் எனது கட்சியும் பொதுமக்களும் என் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை சேதப்படுத்தும் எதையும் நான் செய்யவில்லை என்று அறிவிக்கிறேன்.

# வடக்கில் தாதிய நியமனங்களில்

(8ம் பக்கத் தொடர்ச்சி) அவரும் 'தம்பி நீர் சின்ன ஆள் இவ்வளவு சிரேஷ்ட அதிகாரிகளும் மௌனமாக இருக்க நீர் இப்படிக்கதைக்கூடாது' என்றார். அதனை சுகாதார அமைச்சரும் ஆமோதித்தார். நான் சிரிப்புடன் 'நான் அப்படித் தான் கதைப்பேன்' என்று கூறினேன்.

பிரச்சனை என்னவென்றால் இந்த நிலைமை இன்றுவரை மாற்றமடைய பொறுப்பு வாய்ந்த அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் எந்த முன்மாதிரியான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இதனால் இன்றும் தாதியர்கள் பெருமளவில் தென்பகுதியிலிருந்து தான் நியமிக்கப்பட வேண்டிய சூழ்நிலையுள்ளது.

தென்பகுதியில் இருந்து இங்கு நியமனம் பெற்று வரும் சகோதர மொழி பேசும் தாதியர்கள் தமது குடும்பங்கள், அன்புக்குரியர்களினை பிரிந்து, திருமணங்கள் தள்ளிப் போய், வயோதிபத்தாய் தந்தையர்களினை பராமரிக்க முடியாமல் பெரும் துன்பத்தின் மத்தியில் தான் வடக்கில் கடமையாற்றுகின்றனர். அவர்களின் தியாகங்கள் அளப்பரியது.

அவர்களின் சேவையினை பாராட்ட முடியாது விடினும் அற்ப அரசியல் நலன்களுக்காக அவர்களினை இனவாத கத்தியினால் கீறிக்கிழிக்காமல் சம்பந்தப்பட்டோர் இருக்க பழகிக் கொள்ள வேண்டும். இல்லாது விட்டால் அதற்கான பதிலடியினை அடுத்து வரும் தேர்தல்களில் மக்கள் வழங்குவார்கள்.என வைத்தியகலாநிதி த.வினோதன் தெரிவித்துள்ளார்.

# தாயகத்தில் நினைவேந்தல் நிகழ்வுகளைக்..

(4ம் பக்கத் தொடர்ச்சி) இந்நிலையிலையே தியாக தீபத்தின் ஆவண காட்சி கூடத்தை குழப்பும் விதமாக அக் காணியை தாம் முன் பதிவு செய்து அந்த காணியில் நிகழ்வுகளை நடாத்த விடாது தடுத்துள்ளனர். தியாக தீபத்தின் தியாகத்தை அடுத்த தலைமுறைகளுக்கு எடுத்து கூறும் முகமாகவே அக் காட்சி கூடத்தை அமைத்து அவற்றின் ஊடாக நாம் வரலாற்றை கடத்தி வந்தோம். அதனை பொறுக்க முடியாதவர்கள் தமது ஏவலாளிகளாக இவர்களை பயன்படுத்தி அதனை தடுத்துள்ளனர்.

தமது சொத்துக்களையும் , தமது சுயலாபத்திற்காகவும் தமிழ் மக்களை பகடை காய்களாக்கும் செயற்பாட்டை கஜேந்திரகுமார் அணியினர் கைவிட வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார்.

# அரசியல் பலம் இல்லா விடினும் மக்கள் என்னுடன் இருக்கின்றார்கள் - மஹிந்தா



அரசியல் பலம் இருந்தாலும் இல்லாவிடினும் மக்கள் என்னுடன் இருக்கிறார்கள் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது முகநூல் பக்கத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

நான் எனது வாழ் நாளில் அதிகளவான நேரத்தை மக்களுக்காக செலவிட்டேன். காலம் சென்றாலும் மக்கள் அன்பு குறையாது. அரசியல் பலம் இருந்தாலும் இல்லாவிடினும் மக்கள் என்னுடன் இருக்கிறார்கள். மக்களும் குழந்தைகளும் என்னை சூழ்ந்திருந்திருக்கிறார்கள். மக்களின் மனதில் நான் இடம் பிடித்திருக்கிறேன். மக்கள் மனதில் இடம் பிடிக்காத ஒருவர் தலைவன் ஆக முடியாது. நான் அரச வாசஸ்தலத்திலிருந்து வெளியேறி, அம்பாந்தோட்டையில் உள்ள கால்டன் இல்லத்திற்கு குடி பெயர்ந்த போது என்னை பார்வையிட பல மக்கள் ஒன்று திரண்டனர். அரசியல் பலத்தை விட என்னிடம் மக்கள் பலம் உண்டு. இது குறித்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

# உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேறும் நான் மக்களை அழைத்து வரவில்லை - மைத்திரி

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறும் போது அப்பகுதியில் பெரும்பாலான மக்கள் ஒன்று திரண்டதை குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வினவிய போது நான் மக்களை அழைத்துவருவதில்லை என அவர் கூறினார்.

ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனை தெரிவித்தார்.

ஊடகவியலாளர்: முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செப்டெம்பர் 11 ஆம் திகதி கொழும்பு விஜேராம வீதியில் அமைந்துள்ள அரச உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறும் போது அப்பகுதியில் பெரும்பாலான மக்கள் ஒன்று திரண்டதை கண்டோம். உங்களைப் பார்க்க யாரும் வரவில்லையா?

மைத்திரிபால சிறிசேன: இல்லை, இல்லை. நான் மக்களை அழைத்துவருவதில்லை.

ஊடகவியலாளர்: அதாவது, மக்கள் ஏற்பாடு செய்யப்படுகிறார்களா?



மைத்திரிபால சிறிசேன: நான் மக்களை அழைத்து வருவதில்லை. முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்து செய்வதற்காக அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலத்தை நான் மதிக்கிறேன். என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

# மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த யாழ்.மாநகரசபையிடம் பணம் இல்லை? மின்சாரத் துண்டிப்பால் மீனவர்கள் அவதி



யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட மீன் சந்தையின் மின்சாரமானது 16 செப்டம்பர் 2025 துண்டிக்கப்பட்டதால் மீன் வியாபாரிகள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கினர். இது குறித்து மேலும் தெரியவருகையில்,

மாநகர சபையினர் மின்சார சபைக்கு மின்சார கட்டணத்தை செலுத்த தவறியதால் அன்று மதியம் மீன் சந்தையின் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதனால் மீனவர்கள் தமது மீன்களை விற்பனை செய்வதில் சிரமத்தை எதிர்நோக்கினர்.

இரவு மீன்களை விற்பனை செய்ய முடியாமல், இலக்கமுறை நிறுவை தராசுகள் பயன்படுத்த முடியாமல், மோட்டார் மூலம் தண்ணீர் பாய்ச்சி சந்தையை கழுவ முடியாமல் மீன் வியாபாரிகள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கினர்.

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனின் கவனத்துக்கு கொண்டு சென்ற நிலையில் குறித்த இடத்திற்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் மின்சார சபையினருடன் தொடர்பு கொண்டு மின்சார இணைப்பை மீளவும் பெற்றுக் கொடுத்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு நல்லூர் திருவிழாவில் அமைக்கப்பட்ட கடைகள் உட்பட பல்வேறு வகையிலும் வருமானம் கிடைத்தும் மாநகர சபையானது சந்தையின் அடிப்படை வசதிகளை சீர் செய்வதிலும், மின்சார கட்டணத்தை செலுத்துவதிலும் தவறிழைத்துள்ளதாக மீனவர்கள் குற்றம் சாட்டினர்.

இதேபோன்று பல கோடி ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட ஆரியகுளம் தற்போது மாநகரசபையின் அக்கறையின்மையால் அதன் பொலிவு இழந்து பழைய நிலைமையில உள்ளது தெரிந்ததே.

# தொடர்ந்து முயற்சி செய்யுங்கள் நவநீதம்பிள்ளையின் குரல்!



ஆப்பிரிக்காவில் நிறவெறி முடிவுக்கு வரும் என்று ஒரு நாளும் சிந்திக்க முடிந்ததில்லை. ஆனால் தொடர் முயற்சிகளால் அது முடிவுக்கு வந்தது!

`நானும் தமிழச்சி தான்` ஈழத் தமிழர்கள் தொடர் முயற்சிகளை ஒரு போதும் விட்டு விடாதீர்கள். தொடர்ந்து போராடுங்கள்! நெகிழ வைத்த நவநீதம் பிள்ளை! இவர் தமிழ்நாட்டைப் பூர்விகமாகக் கொண்ட ஆப்பிரிக்க வாழ் நீதிபதி. 1967ம் ஆண்டே வழக்கறிஞராகத் தமது பணியைத் தொடங்கியவர்.

தென்னாப்பிரிக்க விடுதலைப் போராளிகளுக்கான சட்டப் பாதுகாவலராக இருந்தவர். சிறையில் இருந்த நெல்சன் மண்டேலாவை வழக்கறிஞர்கள் சந்திப்பதற்கான சட்டப்போராட்டம் நடத்தி அதில் வெற்றி பெற்றவர்.

பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தின் நீதிபதியாக பணியாற்றியவர்.மேலும், ஐநா மனித உரிமைகள் ஆணையத்தின் ஆணையாரகவும் செயலாற்றியவர்.

தற்போது சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனிவா நகரில் நடைபெற்று வரும் ஐநா மனித உரிமைகள் ஆணையத்தின் 60வது கூட்டத்தில் பங்கேற்றுள்ள நவிபிள்ளை, பாலஸ்தீனம் தொடர்பான உப கூட்டம் ஒன்றுக்குத் தலைமை வகித்தார். அப்போது அவரிடம் மனித உரிமை செயற்பாட்டாளர் நிஷாந்தி பெரிஸ், `2009 ம் ஆண்டு தமிழர்களை பாதுகாக்க ஐநா அமைப்புத் தவறி விட்டது. லட்சக்கணக்கானோர் கொல்லப்பட்டு, 1 லட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் காணாமல் அடிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தோல்விகளில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடமாக நீங்கள் என்ன கருதுகிறீர்கள் தமிழர்களும், பாலஸ்தீனியர்களும் இப்படி கைவிடப்பட்டுள்ள நிலையில் நீங்கள் பொறுப்பில் இருந்திருந்தால் என்ன நடவடிக்கை எடுத்து இருப்பீர்கள்? என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதில் அளித்த நவநீதம் பிள்ளை, `நான் ஐநா மனித உரிமைப் பேரவையின் ஆணையராக இருக்கும் போது தமிழர்களுக்காக என்னால் என்னென்ன நன்மைகள் செய்ய முடியுமோ அத்தனையையும் செய்தேன். ஆனால், உறுப்பு நாடுகள் தான் நடவடிக்கைகளை முன்னெடுத்து இருக்க வேண்டும்.

ஆப்பிரிக்காவில் நிறவெறி முடிவுக்கு வரும் என்று ஒருநாளும் சிந்தித்தது இல்லை. ஆனால், தொடர் முயற்சிகளால் அது முடிவுக்கு வந்தது.

எனவே, நாம் தொடர்ந்து முன்னோக்கிச் சென்று கொண்டே இருக்க வேண்டும். நான் அதிகாரத்தில் இருந்தபோது என்னால் இயன்ற அனைத்தையும் செய்தேன். இனி நீங்கள்தான் அரசுகளுக்கு அழுத்தம் தந்து நடவடிக்கை எடுக்க வைக்க வேண்டும்.

மேலும், இலங்கையில் என்ன நடந்தது என்று அனைவருக்குமே தெரியும். இனி நீங்கள் தான் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். ஒன்றை மறந்து விடாதீர்கள்...நாம் இருவரும் தமிழர்களே. எனவே ஒருநாளும் உங்கள் முயற்சிகளை நீங்கள் கைவிட்டுவிட முடியாது! என்று நவநீதம்பிள்ளை பதில் அளித்தார். இதைக் கேட்டு கண்களில் நீர் மல்க அழுதுகொண்டே நவநீதம்பிள்ளையின் கால்களைத் தொட்டு வணங்கி அவரை கட்டி அணைத்துக் கொண்டார் நிஷாந்தி பெரிஸ்.

# வடக்கில் தாதிய நியமனங்களில் இனவாதம் பேசும் தமிழ்த்தேசியவாதிகள் - வைத்திய அதிகாரி வினோதன் காட்டம்!



கடந்த மாதம் நாடளாவிய ரீதியில் 3,147 தாதியர்களுக்கு முதல் நியமனம் வழங்கிவைக்கப்பட்டது. இலங்கை சுகாதாரத்துறை வரலாற்றில் மிகவும் அதிகளவு தாதியர்கள் ஒரே தடவையில் அரச சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட வரலாற்று நிகழ்வாக இது பதிவு செய்யப்பட்டது. அதற்காக தேசிய மக்கள் சக்தி அரசு பாராட்டப்படவேண்டும்.

இதற்கு முன்னர் 2023இல் 2500 வரையானோருக்கு ஒரே தடவையில் நியமனம் வழங்கப்பட்டது. வடக்கிலும் புதிய நியமனம் பெற்ற சுமார் 500 வரையான தாதியர்கள் நியமனம் செய்யபட்டனர். இவர்களில் சுமார் அரைவாசிப்பேர் மத்திய அரசின் ஆளுகையின் கீழ் உள்ள யாழ் போதனா வைத்தியசாலைக்கு நியமனம் செய்யப்பட்டனர்.

அந்த வைத்தியசாலையில் இருந்து சுமார் 200 பேர் வரையில் இடம் மாற்றம் பெற்றுச் செல்கின்றனர். எவ்வாறாயினும் சுமார் 75 வரையிலான தாதியர்களின் எண்ணிக்கை அந்த வைத்தியசாலையில் அதிகரித்துள்ளது.

வட மாகாணசபை வைத்தியசாலைகளின் பொறுத்த வரையில் சுமார் 280 பேர் வரையில் நியமிக்கப்பட்டு அவர்களில் சுமார் 263 பேர் வரையில் அறிக்கையிட்டனர். ஆனால் 265 பேர் இடமாற்றம் பெற்றுச்செல்லவுள்ளனர்.

வடமாகாண வைத்தியசாலைகளுக்கு அரசினால் இதனை விட அதிகளவில் தாதிய நியமனங்களை வழங்கியிருக்க முடியுமாயினும் 2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் இரண்டு வைத்தியசாலைகளினைத் தவிர ஏனைய வைத்தியசாலைகளில் ஆளணியை அதிகரிக்க எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமையினால் தாதியர்களினை நியமிக்க போதிய ஆளணி காணப்படாமை ஒரு தடையாக அமைந்தது.

நிலைமை இவ்வாறிருக்க நியமிக்கப்பட்ட தாதியர்களினையும் ஊக்கமிழக்கச் செய்யும் செயற்பாடுகளில் வழமையான வங்குரோத்து தமிழ்த் தேசியவாதிகளும் அவர்களின் சில ஆதரவாளர்களும் சமூக ஊடகங்கள் வாயிலாக விஷமத்தனமான பிரச்சாரங்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

வடக்கிற்கு அதிகளவில் சகோதர இனத்தினைச் சேர்ந்த தாதியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் முனகுகின்றனர். அதற்கான அடிப்படைக்காரணங்கள் தொடர்பில் அவர்கள் நன்கு அறிந்திருந்தாலும் அதனை மாற்றியமைக்கவோ அல்லது வெளிப்படுத்தவோ அவர்கள் முன் வருவதில்லை.

பெரும் ஆரவாரத்துடன் அமைக்கப்பட்ட வட மாகாண சபையின் அரசியல் தலைமையின் சுகாதாரத் துறைக்கு பொறுப்பாக இருந்த அமைச்சரினால் 2014 ஆம் ஆண்டு சகல மாகாணசபை உறுப்பினர்களினையும் ஒன்றுக்கூட்டி கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த கூட்டத்தில் மாகாண சுகாதார அமைச்சின் அடைவுகள் தொடர்பிலான தரவுகள் சமர்பிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து கலந்துரையாடலுக்கான நேரம் வந்தது. அப்பொழுது மாகாணசபையின் கல்விக்கு பொறுப்பாக இருந்த அமைச்சர் திடீரென 'என்னை கொஞ்சம் அரசியல் கதைக்க விடுங்கள்' என்று ஆரம்பித்தார்.

'வடக்கு வைத்தியசாலைகளுக்கு மகிந்த அரசு சிங்கள தாதியர்களை அதிகளவில் நியமிக்கின்றது. இதன் மூலம் இனக்கலப்பு ஏற்படும் அபாயமுள்ளது. அதன் மூலம் வடக்கில் தமிழர்களின் இருப்பு எதிர்காலத்தில் கேள்விக்குரியதாகும்' என்றார்.

வழமை போலவே உயர் அதிகாரிகள் தலைகளினை கவிழ்ந்து தங்களுக்கும் அதற்கும் எதுவித சம்பந்தமும் இல்லாதது போல் மௌனமாக இருந்தனர்.

அந்த சந்தர்ப்பத்தில் ஒரு இளநிலை அதிகாரியாக 38 வயதில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அத்தியட்சகராக இருந்த நான் ஐயா எங்கள் தாதியர்கள் நாளொன்றுக்கு 18 மணிநேரம் கடமையாற்றித்தான் வைத்தியாசாலைகளை சீராக இயக்குகின்றனர். எஞ்சிய ஆறு மணி நேரம் தான் அவர்கள் குளித்து, சாப்பிட்டு, நித்திரை செய்கின்றனர். அதனால் நீங்கள் அஞ்சுவது போல எதுவும் கலந்து விடாது. தவிர வடக்கில் உயர்தரத்தில் உயிரியல் பிரிவில் கற்பவர்கள் குறைவு, அவ்வாறு கற்று உரிய தகமைகளினை பெறுபவர்களும் தாதிய, குடும்பநல உத்தியோத்தர் பயிற்சிகளுக்கு வரவிரும்புவது குறைவு. அதனால் மகிந்த அரசு வேறு வழியின்றி தென்பகுதியிலிருந்து தாதியர்களினை இங்கு நியமிக்கிறது. இந்த நிலைமையை நீங்கள் மாற்றியமைத்தால் இந்த பிரச்சனை தீரும்' என்று கூறினேன். (6ம் பக்கம் பார்க்க)


Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- Vistation
- Funeral & Memorial Service
- Reception
- Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# ஜனாதிபதிகள் சலுகை நீக்கம் அரசியல் பயங்கரவாதமா? அரசியல் கலாசார மாற்றமா?

நாமல் ராஜபக்சவின் எதிர்கால உயர்ச்சியை மையப்படுத்தி மகிந்த ராஜபக்ச அறிவித்துள்ள அரசியல் பயங்கரவாதமும், இதனை மறுதலிக்கும் வகையிலான அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ள அரசியல் கலாசார மாற்றமும், சில வருடங்களுக்கு தொடரப் போவதாக எதிர்பார்க்கப்படும் ஒற்றை ஆட்சி முறையைத் தீர்மானிக்கும் கருக்களாக அமையக் கூடும்.

இலங்கை அரசியலில் இரண்டு விடயங்கள் கடந்த வாரம் முக்கியமானவையாக அமைந்தன. ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் நீதிப்பொறிமுறை மறுப்பும், முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை நீக்கும் சட்டம் நடைமுறைக்கு வந்திருப்பதும் இவை.

ஜெனிவாவிலும் கொழும்பிலும் என்னென்ன நடைபெறுமென்று எதிர்பார்க்கப்பட்டனவோ அதுவே நடைபெற்றுள்ளது. ஜே.வி.பி.யின் மறுவடிவமான தேசிய மக்கள் சக்தி (என்.பி.பி.)யின் ஆட்சியில் முதல் வருட பூர்த்தி மாதத்தில் இந்த விடயங்கள் இடம் பெற்றுள்ளது வரலாற்றில் இடம்பெறப் போகிறது.

போர்க்கால மனித உரிமை மீறல்களுக்கு நீதியான தீர்வு கிடைக்க வேண்டுமானால்(?) அதற்கு சர்வதேச நீதிப் பொறிமுறை கலந்த பொறுப்புக்கூறல் விசாரணையே தேவையென்பது பாதிக்கப்பட்ட தரப்பின் ஏகோபித்த நிலைப்பாடு. தமிழ் அரசியல் தரப்புகள் தமக்குள் எப்போதும் மோதிக்கொண்டிருந்தாலும், ஜெனிவா விடயத்தில் இப்போது ஒரே கோட்டுக்கு வந்துள்ளன.

அதேபோன்று சிங்கள அரசியல் தலைமைகளும் அவர்களின் அரசாட்சித் தரப்புகளும் தேர்தல்களின் போது மாறி மாறி கதிரை ஏறினாலும், அரச பயங்கரவாதத்துக்கு துணையாக நிற்கும் தங்கள் இராணுவத்தைக் காட்டிக் கொடுக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டில் தங்களுக்கான நேர்க் கோட்டில் நின்றே வருகின்றன. இதில் அநுர குமர ஆட்சியும் மாறுபாடில்லை.

மனித உரிமைப் பேரவையின் தொழில்நுட்ப உதவியுடன் உள்நாட்டுப் பொறிமுறை மூலம் மனித உரிமை மீறலுக்கு பொறுப்புக்கூறல் செயல்வழியில் ஈடுபட தாங்கள் தயாராக இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் (தமிழரசுக் கட்சி தனது அறிக்கையில் குறிப்பிட்டது போல வெளிநாட்டு அமைச்சர் அல்ல) விஜித ஹேரத் ஜெனிவாவில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

பேரவையின் அறுபதாவது கூட்டத் தொடர் கடந்த எட்டாம் திகதி ஆரம்பமான போது மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தமது உரையில், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் குறித்து இலங்கை அரசாங்கம் தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டதோடு, பல தசாப்தங்களாக ஆதிக்கம் செலுத்தி வந்த வன்முறை மற்றும் தண்டனையின்மை சுழற்சிகளிலிருந்து மீள்வதற்கான சிறப்பு மிக்க வாய்ப்பை இலங்கை இப்போது பெற்றுள்ளது என்று சுட்டியிருந்தார்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க வாய்ப்பு என்று மனித உரிமைகள் ஆணையாளர் குறிப்பிட்ட சொற்பதம் உட்பொருளில் பல அர்த்தங்களை உள்ளடக்கியது. இலங்கையில் முன்னெப்போதும் ஆட்சி புரியாத ஒரு தரப்பு, போர்க்காலத்தில் நேரடியாக சம்பந்தப்படாத ஒரு கட்சி, அரச கெடுபிடிகளாலும் வன்முறைகளாலும் ஏற்கனவே பாதிக்கப்பட்ட ஓர் அணி, மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்துள்ளதால் நீதிக்கான பொறிமுறைகளால் தீர்க்கமான முடிவுக்கு வர முடியுமென்ற எதிர்பார்ப்பை இது அர்த்தப்படுத்துகிறது.

என்ன தான் ஜெனிவாவில் சொன்னாலும், எவ்வகைத் தீர்மானங்களை நிறைவேற்றினாலும் அவைகளை ஏற்று செயற்படுத்தினால் சிங்கள பௌத்தத்தின் ஆதரவை தாங்களும் இழந்து விடுவோம் என்ற மனப்போக்கு அநுர குமர அரசுக்கும் இருக்கிறது. அதனால் எவ்வாறான வாக்கியங்களோடு அறிக்கைகளையும் தீர்மானங்களையும் முன் வைத்தாலும் அவைகளை தாங்கள் பயன்படுத்தத் தயாரில்லை என்பதை அமைச்சர் விஜித ஹேரத்தின் அறிவிப்பு அப்பட்டமாகத் தெரிவிக்கிறது. பேரவையின் கூட்டத்தில் மட்டுமன்றி மனித உரிமைகள் ஆணையாளருடனான தனிச் சந்திப்பிலும் தமது அரசின் நிலைப்பாட்டை அமைச்சர் ஹேரத் தெரிவித்திருப்பதைக் கவனிக்க வேண்டும். முன்னைய காலங்களைப் போன்று இம்முறையும் பேரவையின் உறுப்பு நாடுகள் இலங்கைக்கான ஆதரவையும், நீதி கோரலையும் பிரிந்து நின்று தெரிவித்துள்ளன. இலங்கையின் மனிதப் புதைகுழிகளுக்கு சர்வதேச விசாரணை அவசியம் என்று பிரித்தானியா கோரியது. ரஷ்யா, பாகிஸ்தான் உட்பட்ட நாடுகள் இலங்கையின் பக்கம் தங்கள் குரலை வெளிப்படுத்தின.

இந்தியா வழமை போன்று பதின்மூன்றாம் திருத்தத்தை நடைமுறைப் படுத்த வேண்டியது, அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு, மாகாண சபைகளுக்கான தேர்தல் என்ற கோரிக்கைகளை இங்கு முன் வைத்தது. இது தொடர்பான ஒரு சந்திப்பை இலங்கையிலுள்ள இந்திய ஸ்தானிகர் தமிழர் தரப்புடன் ஆரம்பித்திருப்பதையும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இலங்கை அரசுடன் பேசிக் கொண்டிருப்பதை விட பெற வேண்டியவைகளை பெற்று நடைமுறைப்படுத்த வேண்டுமென இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெயசங்கர் சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் தம்மைச் சந்தித்த தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் கூறியதை இப்போது நினைவில் கொள்ள வேண்டியுள்ளது.

ஜெனிவாவில் தற்போதைய கூட்டத் தொடரில் இறுதிப் பகுதியில் இலங்கை தொடர்பான புதிய தீர்மானமொன்றை பிரித்தானியா, கனடா, மலாவி, மொன்டிநீக்ரோ, வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகள் முன்வைக்கவுள்ளன. வழமையாக இவ்வகையான தீர்மானங்களின் வாக்கெடுப்பின் போது அதில் வாக்குரிமை பெற்ற நாடுகளில் கூடுதலானவை தீர்மானத்தை ஆதரிப்பதுண்டு. ஆனால் இலங்கை அரசு, வாக்களிப்பில் பங்கு பற்றாத நாடுகளின் எண்ணிக்கையையும் எதிர்த்து வாக்களிக்கும் நாடுகளின் எண்ணிக்கையோடு சேர்த்து தீர்மானத்தை ஏற்காத நாடுகள் அதிகமென்று அறிவிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளது. இதனைத் தவிர்ப்பதற்காகப் போலும் இம்முறை வாக்களிப்பிலிருந்து இலங்கை விலகக் கூடுமென எதிர்வு கூறப்படுகிறது.

ஜெனிவா திருவிழா இவ்வாறு போய்க் கொண்டிருக்கையில், உள்நாட்டில் அநுரகுமர ஆட்சியின் முதலாவதாண்டு பூர்த்தியை இந்த மாதத்தில் ஜே.வி.பி.யினர் கொண்டாடுகின்றனர். கடந்த இரண்டாம் மூன்றாம் திகதிகளில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்ட அநுர குமர பல நிகழ்வுகளில் பங்கு பற்றி உரையாற்றினார். கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல் காலங்களில் காணப்பட்ட பொதுமக்களின் ஆரவாரமோ அக்கறையோ இம்முறை காணப்படவில்லை.

இதனை நிவர்த்தி செய்வது போன்று தெற்கில் அரசியல் சமாசாரங்கள் சூடு கண்டன. முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகளை நீக்கும் சட்டம் ஒரே நாளில் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. வாழ்ந்து கொண்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, கோதபாய ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க மற்றும் ரணசிங்க பிரேமதாசவின் விதவை மனைவி ஆகியோருக்கு, அரச குடியிருப்பு உட்பட பல சலுகைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த பல மாதங்களாக விஜேராம மாவத்த பங்களாவிலிருந்து வெளியேற மறுத்து வந்த மகிந்த ராஜபக்ச புதிய சட்டம் நிறைவேற்றப்பட்ட மறுநாளே அங்கிருந்து வெளியேறி தமது சொந்த ஊரான தங்காலையிலுள்ள இல்லத்துக்குச் சென்றுள்ளார். அமெரிக்காவின் இரட்டை கோபுர தாக்குதல் நாளான செப்டம்பர் 11ல் இந்த வெளியேற்றம் இடம்பெற்றது தற்செயலானது. ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் அரசியலை ஆரம்பித்த தமது சொந்த ஊருக்கு மகிந்த திரும்பியுள்ளார். சற்று ஓய்வின் பின்னர் மீண்டும் கொழும்பு திரும்பி அரசியலில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளார்.

கட்டுரையாளர்:-
பனங்காட்டான்

இலங்கையின் ஒவ்வொரு தொகுதியிலும் ஒவ்வொருவர் தமது வீடுகளை மகிந்தவுக்கு வழங்கத் தயாராகவுள்ளனர் என இவரது பொதுஜன பெரமுன சில வாரங்களுக்கு முன்னர் பகிரங்கமாக அறிவித்து இவரை தேசிய மகாபுருசராக்க முனைந்தது. ஆனால் அப்படியெதுவும் இடம்பெறவில்லை. ஆனாலும் விஜேராம மாளிகை வெளியேற்றத்தை தமக்கான ஆதரவு அலையாக மாற்றுவதில் பெரமுன காரர்கள் அக்கறை காட்டினர். தங்காலை வீட்டில் அவர் குடியேறுவதையும் அவ்வாறே மாற்ற முனைந்தனர். ஆனால் எல்லாம் ஒரு நாள் நாடகமாக முடிந்தேறியது.

ஜனாதிபதிகள் சலுகைகள் நீக்கச் சட்டம் ஒருவருக்காக கொண்டு வரப்பட்டதல்ல. முன்னர் ஜனாதிபதிகள் அனைவருக்குமானது. மைத்திரிபால சிறிசேன அமைதியாக தமது வீட்டுக்குச் சென்று விட்டார். ரணிலும் கோதபாயவும் தங்கள் சொந்த வீட்டில் இருந்ததால் அவர்கள் வெளியேற வேண்டியிருக்கவில்லை. சந்திரிக குமாரதுங்க நிலைமை சற்று வித்தியாசமானது. புதிய சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே தொடர்ந்து அரச வீட்டில் தாம் இருப்பதற்கு முழு வாடகை செலுத்த தயாராக இருப்பதாக ஜனாதிபதி அநுரவுக்கு கடிதம் எழுதியதாகவும், அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கறுவாக்காட்டிலுள்ள றோஸ் மீட் பிளேஸ் இல்லத்தை விற்று கிடைத்த பணத்திலேயே தாம் வாழ்ந்து வருவதாகவும், அதில் பதினான்கு மில்லியன் ரூபாவை தற்போது குடியிருக்கும் அரசாங்க வீட்டுக்கு செலவிட்டதாகவும், தமக்கு இரு தடவை புற்றுநோய் சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும், அண்மையில் இடறி விழுந்ததால் இடுப்பு அறுவைச் சிகிச்சை மேற்கொண்டு அசைவதில் சிரமப்படுவதாகவும் தமது கடிதத்தில் தெரிவித்துள்ள சந்திரிக குமாரதுங்க, புதிய வாடகை வீட்டில் குடியேற இரண்டு மாதங்கள் தவணை தருமாறும் அரசாங்கத்திடம் கோரியுள்ளார். சந்திரிகா ஆட்சியில் ஜே.வி.பி. 39 (22ம் பக்கம் பார்க்க)



# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

13 செப்டம்பர் 2025 முதல் 19 செப்டம்பர் 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இராஜதுரை ஈஸ்வரபாதம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் அஞ்சல் நிலைய உத்தியோகத்தர் திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 13 செப்டம்பர் 2025 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்தி க்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகம் முத்துலிங்கம்

யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 15 செப்டம்பர் 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது மனைவி பிள்ளைகளுடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## மஹாலய விரத உபயம்



### திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம்

மண்டைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களதும் அவரது முன்னோர்களது நினைவாகவும் 22 செப்டம்பர் 2025 திங்கட்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.



# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




04 செப்டம்பர் 2025 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கார்த்திகேயனின் 14வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கார்த்திகேயன் தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




04 செப்டம்பர் 2025 வியாழக்கிழமை நோர்வேயில் வசிக்கும் செல்வன் பிரசாந்தன் அவர்களும் செல்வி கோபிதா அவர்களும் இனிய இரு மனம் இணையும் நன்நாளாகும். அன்றைய தினம் இருவரும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள். வாழ்க வளமுடன் என்று பாரதி இல்லக் குழந்தைகள் வாழ்த்தி மகிழ்கின்றார்கள்




13 செப்டம்பர் 2025 சனிக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




11 செப்டம்பர் 2025 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் சாயி பக்தரும் ஆன்மீகப் பற்றாளருமான திரு திருமதி மகேந்திரா பிரபா இணையர்களது 30வது திருமண நன்நாளாகும். அன்றைய நாளுக்காக இணையர்கள் 14 செப்டம்பர் 2025 ஞாயிற்றுக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்புணவும் இனிப்பும் வழங்கி மகிழ்ந்தார்கள்.




15 செப்டம்பர் 2025 திங்கட்கிழமை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




17 செப்டம்பர் 2025 புதன்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.


SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# அகவை 90 காணும் வேலணை சிவலோகநாதன் (சிவம் மாஸ்ரர்)

**சி.இளஞ்செழியன் - பழைய மாணவன் வேலணை மத்திய கல்லூரி**

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் வேலணைக் கிராமத்தின் மேற்குப் பகுதியில் வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு முடிப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் இராமநாதர் சின்னத்தங்கம் தம்பதிகளின் புதல்வி வள்ளியம்மை சேதுபதி என்பவரை மணந்து வெல்லப்பிட்டி என்ற வளவில் வாழ்ந்து வருகையில் நாகலிங்கம் (சே.நா) கந்தையா(சே.க)பொன்னையா (சே.பொ) செல்லத்துரை (சே.செ) முத்துப்பிள்ளை நாகப்பிள்ளை என்ற அறுவரைப் பிள்ளைகளாகப் பெற்றனர். மூத்தவரான நாகலிங்கம் அவர்களது மகன் சரவணமுத்து (போசர்) இரத்தினம் தம்பதியினருக்கு இளைய மகனாக 1935-09-23 அன்று சிவலோகநாதன் அவர்கள் பிறந்தார். ,ஷ

அவரது சகோதரர்கள் நல்லைநாதன் தனஞ்செயன் செந்தில்நாதன் ஆவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் உயர் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும் பயின்று பின்னர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் பயின்று ஆசிரியர் பணியில் சேர்ந்தார். வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் வேலணை மத்திய கல்லூரி சுருவில் மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் பலநூறு மாணவர்களுக்கு அருங் கல்வி எனும் அக்கினிக் கணையைப் பரிசாக வழங்கிய மகத்தான ஆசிரியர் மட்டுமல்ல யாரையும் புண்படுத்தாத பண்பட்ட உள்ளம் கொண்டவர். படிக்கும் காலத்தில் கல்லூரி மைதானத்தில் துடுப்பாட்டத்திலும் பின்னர் வேலணைக்கிராம சபை வளாகத்தில் கைப்பந்து விளையாட்டிலும் பெரும் ஈடுபாட்டுடன் பங்கு பற்றியதுடன் நல்ல நண்பர்களையும் தனதாக்கினார். வாழ்க்கைத் துணையாக இராஜேஸ்வரி என்ற நல்லாசிரியையை மணந்து இன் புறவே இல்லறம் நடத்தி வருவதோடு 2025-09-23 அன்று தனது தொண்ணூறாவது அகவையை அடைகின்றார். பெருமதிப்புக்கும் பேரன்புக்கும் உரிய சிவம் மாஸ்ரர் அவர்கள் நூறாண்டுகள் வாழ வேண்டும் என்று வாழ்த்துப் பூக்களைக் காணிக்கை ஆக்குகின்றேன்.

வாழ்க்கைக்கு அழகு சேர்ப்பது சொல் அல்ல செயல் என்பதை உண ர்ந்து அதன்படி வாழ்ந்து வரும் உயர் நெறியாளர். வளையாத முதுகெலும்பும் நிலையான கொள்கையும் சலியாத உழைப்பும் சரியாத தமிழ்ப் பற்றும் கொண்டவர் என்றால் அது மிகையல்ல. தலையில் கர்வம் சேராத மனதிற்குச் சொந்தக்காரர். கனிச்சொல் கொண்டவர் மட்டுமல்ல நுண்மான் நுழைபுலம் மிக்கவர். இவரது அன்பான கண்டிப்பு




கருங்கல்லின் மேல் விழுந்த உளி போன்றது. இவரது தந்தையார் சரவணமுத்து அவர்கள் தீவகத்தின் முதலாவது தபாலதிபராகவும் பெருஞ் செல்வந்தராகவும் இருந்த போதும் எளிய வாழ்வே எப்போதும் ஏற்றம் கொடுக்கும் என்றுணர்ந்து உதாரண புருசராக வாழ்ந்து வரும் ஒழுக்கசீலர். அதிகம் வாசிப்பதையும் வாசித்ததைச் சிந்திப்பதையும் வழக்கமாகக் கொண்டவர். கல்வியுலகில் ஆசிரியத் தொண்டை இடைவிடாமலும் நிறைவாகவும் திறமையாகவும் கையாண்ட பெருமைக்குரியவர். கல்வித் துறையில் மட்டுமல்ல பொது வாழ்விலும் மின்னிய நட்சத்திரமாக உயர்ந்தவர். மக்கள் நலத்தில் தீவிர ஈடுபாடு கொண்ட இவர் எப்போதும் புன்னகை தவழும் அழகான முகத்துடன் காணப்படுவதுடன் மக்களையும் மாணவர்களையும் கையாளும் வித்தை தெரிந்த வித்தகர். கமத் தொழிலும் ஈடுபட்டு புகையிலை மிளகாய் வெங்காயம் போன்ற காசுப் பயிர்ச் செய்கையிலும் நெற்பயிர்ச் செய்கையிலும் இமைப் பொழுதும் ஓய்வின்றி உழைத்து வெற்றி கண்டவர். கனடாவிலும் பொழுது போக்காக வீட்டுத் தோட்டம் செய்வதிலும் விரும்பி வரும் சிறுவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதிலும் தன்னை ஈடுபடுத்தி மகிழ்ச்சி காண்பவர்.



பொதுவாழ்வில் வேலணைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர்சபை உறுப்பினராகவும் இணக்கசபை உறுப்பினராகவும் சேவையாற்றியவர். புலம் பெயர்ந்த கனடா மண்ணில் வேலணை முடிப்பிள்ளையார் ஆலய வழிபடுனர் சங்கத்தின் தலைவராக இருந்து குல தெய்வமான விநாயகர் ஆலய வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வருபவர். வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் - கனடாவின் போசகர்களில் ஒருவராகவிருந்து தக்க ஆலோசனைகளை வழங்கி வருபவர். என்னைப் பொறுத்தவரை இவர் எனது அயலவர் மட்டுமன்றி குடும்ப நண்பர். எனது தந்தையாருடன் நீண்ட காலமாக நல்லுறவைப் பேணி வருபவர். தொலைபேசி எடுக்கும் போதும் நேரில் காணும் போதும் முதலில் எனது தந்தையாரின் நலத்தை விசாரிப்பதையே வழக்கமாகக் கொண்டிருப்பவர்.

கடிகாரம் பாராத உரையாடல் சில பேரோடு தான் வாய்க்கும். அவர்களுள் ஒருவர் என் பேரன்பிற்கும் பெருமதிப்புக்குமுரிய சிவம் மாஸ்ரர். இந்த உரையாடல் இருவருக்கும் அறிவையும் சுவையையும் தந்து கொண்டே இருக்கிறது. ஆசிரியப் பெருந்தகையின் இனிய பிறந்த நாளில் பல்லா ண்டு காலம் தேகாரோக்கியத்துடன் இன்பமாக வாழவேண்டுமென வாழ்த்தி வணங்குகின்றேன்.





வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

Suren Sornalingam BBA

Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# காலஅவசாகம் கோரும் ஏமாற்றுத் தந்திரம்

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
- கேணல் ஹரிகரன் -



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரின் தொடக்க நாளன்று இலங்கை குறித்த விவாதம் இடம்பெற்றது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் சமர்ப்பித்த அறிக்கை மீது நடந்த விவாதத்தின் போது, 43 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக கருத்துக்களை வெளியிட்டதாக வெளிவிவகார அமைச்சு கூறியிருந்தது.

தற்போதைய அரசாங்கம் முன்வைத்த கருத்துக்களை எந்த நாடும் எதிர் மறையாக எதிர்கொள்ளவில்லை. அரசாங்கத்தின் கருத்தை நிராகரிப்பதாகவோ, அரசாங்கம் முன்மொழிந்த உள்நாட்டுப் பொறிமுறைகளை ஏற்க முடியாது என்றோ, சர்வதேச விசாரணை தான் தீர்வு என்றோ அடித்துக் கூறுகின்ற நிலையில் எந்த நாடும் இருக்கவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை, அவ்வாறான நோக்கில் செயற்படுகின்ற அமைப்பும் இல்லை. ஏனென்றால், இலங்கையில் போர் முடிவுக்கு வந்து 16 ஆண்டுகள் ஆகியும், சரியான பொறுப்புக்கூறல் பொறிமுறை ஒன்றை உருவாக்க முடியாத நிலை உள்ளது.

உள்ளகப் பொறிமுறைக்கான வாய்ப்பு கொடுக்கப்பட்டது. கலப்பு பொறிமுறைக்கான வாய்ப்பும் கொடுக்கப்பட்டது. சர்வதேச விசாரணைக்கான கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. ஆனால் இதுவரை எந்த ஒரு பொறிமுறையும் உருவாக்கப்படவில்லை.

இது இலங்கையின் தோல்வி மாத்திரமல்ல, சர்வதேச சமூகத்தின் தோல்வியும் கூட. இவ்வாறான நிலையில், இலங்கை அரசாங்கம் உள்ளகப் பொறிமுறை மூலம் தீர்வு ஒன்றைக் காணுவதாக கூறுகின்ற போது அதனை எதிர்மறையாக அணுகி நிராகரிக்கின்ற முடிவை எந்த நாட்டினாலும் எடுக்க முடியாது.

சம்பந்தப்பட்ட நாடு அதற்கு முன்வருகின்ற போது அதனை நிராகரிக்கக் கூடிய வகையில் செயற்பட முடியாது. அவ்வாறு மோதல் போக்கில் செயற்படுவது பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது.

அரசாங்கம் ஒன்று, தனது பிரச்சினைகளை தானே தீர்த்துக் கொள்வதாக கூறினால், அதற்கு நம்பகமான சூழலை உருவாக்கி இடைவெளி ஒன்றை கொடுப்பதற்கு சர்வதேச சமூகம் முன்வரும்.

அது தான் சர்வதேச இராஜதந்திர அணுகுமுறை. ஐ.நா. என்பது நாடுகளின் அரங்கமே தவிர, இனக்குழுக்களின் நலன்களை பேணுகின்ற இடம் அல்ல.

எந்த ஓர் இனத்துக்கு எதிராகவும் மேற்கொள்ளப்படுகின்ற அநீதிகளுக்கு, அங்கு குரல் கொடுக்கப்பட்டாலும், நாடுகளின் சார்பிலேயே தீர்மானங்கள் எடுக்கப்படும், தீர்மானங்கள் முன்மொழியப்படும், நாடுகளே அவற்றை தீர்மானிக்கும்.

அந்த வகையில், இலங்கை ஒரு நாடு என்ற வகையில், ஒரு பொறிமுறையை தான் உருவாக்குவதாக கூறுகின்ற போது எந்த நாட்டினாலும் அதனை நிராகரிக்கக் கூடிய நிலை இல்லை. ஆனால் இலங்கை அரசாங்கம் இதுவரையில் ஒரு நம்பகமான உள்ளகப் பொறிமுறையை உருவாக்கவும் இல்லை, அதற்கான அறிவிப்புகளை வெளியிடவும் இல்லை.

ஜெனிவாவில் உரையாற்றிய இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத், உள்ளகப் பொறிமுறை மூலம், நாங்கள் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்கிறோம், சர்வதேச தலையீடுகளை ஏற்றுக் கொள்ள முடியாது எனக் கூறியிருந்தார். அவரது அந்தக் கருத்தை உறுப்பு நாடுகள் ஏற்றுக் கொண்டன.

ஆனால், அந்த உள்ளகப் பொறி-முறை என்ன, அந்த பொறிமுறை எப்படிப்பட்டது, அதை எப்போது உருவாக்குவீர்கள், எப்போது பொறுப்புக் கூறல் பிரச்சினையை தீர்ப்பீர்கள், அதற்கான காலவரையறை என்ன என்ற கேள்விகளை உறுப்பு நாடுகள் எழுப்பவில்லை.

இந்த இடத்தில் தான் சர்வதேச சமூகம் தவறிழைக்கிறது. பிரச்சினையை




தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு பல வாய்ப்புகள் கொடுக்கப்பட்டன.

2011ஆம் ஆண்டில் இருந்து அதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. ஆனால், அவை ஒரு போதும் பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை. 2015 ஆம் ஆண்டு கலப்பு விசாரணைப் பொறிமுறைக்கு இலங்கை அரசாங்கம் இணங்கியது.

பின்னர் அதே அரசாங்கமே, கலப்பு விசாரணை பொறிமுறையை தாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் நிராகரித்தது.

அந்தத் தீர்மானத்துக்கு வழங்கிய இணை அனுசரணையில் இருந்து விலகிக் கொள்வதாகவும் அறிவித்தது.

இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த எந்த ஓர் அரசாங்கமும், பொறுப்புக்கூறலை அர்த்தபூர்வமாகவோ அர்ப்பணிப்புடனோ முன்னெடுக்க முயற்சிக்கவும் இல்லை, விரும்பவும் இல்லை. அவ்வாறு விரும்புவதாக மட்டும் காட்டிக் கொண்டது, அதனை வைத்து சர்வதேசத்தையும் பாதிக்கப்பட்ட மக்களையும் நம்ப வைத்து கழுத்தறுத்தது தான் வரலாறு.

சர்வ தேசத்தை ஏமாற்றுவதற்கான ஒரு வழியாக இணங்கிப் போகும் வழிமுறையை அல்லது உள்ளக விசாரணை வாக்குறுதியை பயன் ப டுத்திக் கொண்டது. காலத்துக்கு காலம் இலங்கையின் ஆட்சியாளர்கள் இதனை செய்து வந்திருக்கிறார்கள்.

தற்போதைய அரசாங்கம் அதே போன்ற உத்தியையே மீண்டும் கையாளுகிறது. தற்போதைய அரசாங்கம் தன்னை மாறுபாடானது என்றும், வேறுபட்ட ஒன்று என்றும் கூறிக் கொள்கிறது.

ஆனால் அது, இதுவரையில் முன்னைய ஆட்சியாளர்களிடம் இருந்து வேறுபட்ட ஒன்று என்ற நம்பிக்கையை, தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்த முடியவில்லை.

அதில் அரசாங்கம் தோல்வியை தழுவியிருக்கிறது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் அறிக்கையில், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாக வாக்குறுதி கொடுத்த அரசாங்கம், அதனை நிறைவேற்ற வேண்டும் எனக் கூறப்பட்டிருக்கிறது.

ஐ.நாவுக்கான பிரித்தானிய பிரதிநிதி உரையாற்றிய போது, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்காத அரசாங்கம், அதனைத் தொடர்ந்து பயன்படுத்துவது கவலை அளிப்பதாக கூறியிருக்கிறார்.

அரசாங்கம் செப்டெம்பர் மாதத்திற்கு முன்னர் பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒழிப்பதாக வாக்குறுதி கொடுத்தது.

ஆனால் ஜெனிவா கூட்டத்தொடர் நடக்கப் போகிறது என தெரிந்திருந்தும் கூட அதற்கான நடவடிக்கையை எடுக்கவில்லை. ஏனென்றால் வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற நிலையில் அரசாங்கம் இல்லை. வாக்குறுதிகளை காப்பாற்ற வேண்டும் என்ற அர்ப்பணிப்பு எந்த ஒரு ஆட்சியாளர்களிடமும் இருக்கவில்லை.

அதனால் தான் திரும்பத் திரும்ப சர்வதேச சமூகம் பாதிக்கப்பட்ட தரப்பும் ஏமாற்றப்படுகின்ற நிலை நீடிக்கிறது. இப்போதும் கூட சர்வதேச சமூகத்தை நம்ப வைக்கின்ற முயற்சியில் தான் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறதே தவிர, பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை பெற வேண்டும் என்ற ரீதியாக செயல்படவில்லை.

பாதிக்கப்பட்ட மக்கள் நம்பக்கூடிய ஒரு பொறிமுறையை அரசாங்கம் உருவாக்கியிருந்தால் அல்லது உருவாக்குவதற்கான முயற்சிகளை எடுத்திருந்தால், அது ஏற்றுக் கொள்ளக் கூடியது.

ஒரு வருட ஆட்சியில் அரசாங்கம் அதனை செய்ய முடியாத நிலையில், இன்னும் நான்கு வருடங்களில் அதனைச் செய்து முடிக்குமா என்ற கேள்வி எழுகிறது. ஏனென்றால் எந்த ஓர் உள்ளக பொறிமுறையும் குறிப்பிட்ட வரையறைக்குள் முடியக் கூடிய விடயம் அல்ல.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற பொறுப்புகூறல் செயற்றிட்டத்தில் நான்கு ஆண்டுகளாக சாட்சியங்கள், சான்றுகளை சேகரிக்கப்படுகின்றன. ஆனால், இன்னமும் அது பூர்த்தியாகவில்லை.

அவற்றை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கும், குற்றம் இழைத்தவர்களை கண்டறிவதற்கும், அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி, தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கும் நீண்டகாலம் தேவைப்படும்.

ஆனால் தற்போதைய அரசாங்கம் ஆட்சியில் இருக்கப் போவது, இன்னும் நான்கு ஆண்டுகள் தான்.

இந்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் பொறுப்புக்கூறல் பொறிமுறையை உருவாக்கும் எண்ணத்துடன் இருந்திருக்குமேயானால், அதனை நேர காலத்துடனே முன்னெடுத்திருக்க வேண்டும்.

ஆனால் பொறுப்புக்கூறலை அல்லது அதற்கான முயற்சிகளை இழுத்தடிப்பதில் அல்லது இடை நடுவில் கைவிடுவதற்கான வழி முறைகளையே இப்போதைய அரசாங்கமும் முன்னெடுக்கிறது.

ஜெனிவாவில் கால அவகாசத்தை கோருவதன் மூலம் சர்வதேச தலையீடுகளை அது தவிர்க்கப் பார்க்கிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் நல்லாட்சி அரசாங்கத்துக்கு இவ்வாறான ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

அந்த வாய்ப்பு பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை. அதனால் 10 ஆண்டுகள் வீணடிக்கப்பட்டிருக்கிறது. நீதி இழுத்தடிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில், மீண்டும் தற்போதைய அரசாங்கம் காலஅவகாசம் கேட்கிறது.

இந்த அரசாங்கத்தின் பதவிக்காலம் முடிகின்ற போது இன்னொரு அரசாங்கம் வந்தும் கால அவகாசம் கேட்கும். ஆக, இந்தச் சுழற்சி நீடித்துக் கொண்டே போகப் போகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இந்த விடயத்தில் தீர்க்கமான நடவடிக்கையை எடுக்காவிட்டால், காட்டமான ஒரு தீர்மானத்தை கொண்டு வந்து அடுத்த கட்டத்துக்கு நகராது விட்டால், தொடர்ச்சயாக ஏமாற்றி வரும் இலங்கையின் ஆட்சியாளர்கள், இதே தந்திரத்தையே அடுத்தடுத்த தசாப்தங்களிலும் கையாளுவார்கள். அப்போது, நீதியை கோருவதற்கு, பாதிக்கப்பட்டவர்கள் உயிரோடு இருப்பார்களா என்பது தான் சந்தேகம்.

# பூகோள அரசியல் வலையில் இலங்கை அரசாங்கம்!

கட்டுரையாளர்:
- அழகு.குணசீலன் -

வேடன் விரித்த வலையில் சிக்கிய புறாக்கள் கூட்டாக வலையை தூக்கிக் கொண்டு பறந்து, எலியின் உதவியுடன் வலையின் பிடியில் இருந்து தப்பிக் கொண்டன இந்த பூகோள அரசியல் வலையில் சிக்காது பாதுகாக்கும் சக்தி என்.பி.பி. அரசாங்கத்திற்கு இருக்கின்றதா.....? ஆட்சிக்கு வந்து இந்த ஒரு ஆண்டு காலத்தில் தேவையான அரசியல் ஸ்திரத்தன்மையை உள்நாட்டில் காணமுடியவில்லை என்பதையே பூகோள அரசியல் தலையீடுகள் காட்டுகின்றன. மறுபக்கத்தில் அரசாங்கத்திற்குள் ஜே.வி.பி - என்.பி.பி — பங்காளி குழுவாதம் அதிகரித்திருக்கிறது. அதனை பூகோள அரசியல் சக்திகள் பயன்படுத்துகின்றனவா? என்ற சந்தேகம் அதிகரித்துள்ளது.

இலங்கையில் உள்நாட்டு அரசியலில் ஜே.வி.பி - என்.பி.பி. அரசாங்கம், தான் வாக்குறுதியளித்த முறைமை மாற்றத்தை செய்யா விட்டாலும் அநுர அரசாங்கம் ஒரு வருடத்தை எட்டுகின்ற இந்த காலப்பகுதியில் சில விடயங்களை செய்ய துணிந்திருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. முக்கியமாக கல்விச்சீர்திருத்த முன்மொழிவு, ஊழல் - இலஞ்ச ஒழிப்பு செயற்பாடுகள், நிர்வாக சீர்திருத்தம், முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சிறப்புரிமைகள் நீக்கம் என்பனவற்றுடன் தேர்தல் காலத்தில் ஜே.வி.பி.யினால் விமர்சிக்கப்பட்ட, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதாரக் கொள்கை, அதனூடாக ஐ.எம்.எப். அனுசரணை என்பனவும் தொடர்கின்றன. பொருளாதார அபிவிருத்தி சார் உறுதி இன்னும் இல்லை என்றாலும் சற்று புள்ளிவிபர ரீதியிலான பொருளாதார வளர்ச்சி வெளிப்படுகிறது.

ஆனால் மாகாணசபை தேர்தல், அதிகாரபரவலாக்கம், இனப்பிரச்சினைக்கான தீர்வு, பயங்கரவாத தடைச்சட்ட நீக்கம், ஈஸ்டர் படுகொலை விசாரணை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு எல்லாம் இன்னும் கிடப்பிலேயே கிடக்கின்றன. சரியாக நோக்கினால் சிறுபான்மை தேசிய இனங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை இழுத்தடித்து, அரசாங்கம் தென்னிலங்கையை திருப்திப்படுத்தும் தனது அரசியலை முன்னெடுக்கிறது. ஆனால் தென்னிலங்கையையும் திருப்திப்படுத்த முடியவில்லை என்பதை அங்கு நாளுக்கு நாள் தொடரும் போராட்டங்கள் பேசுகின்றன.

இதனால் இலங்கை அரசாங்கத்தின் அண்மைக்கால அரசியல், பொருளாதார முடிவுகளும், செயற்பாடுகளும் அநுரகுமார திசாநாயக்க அரசாங்கத்தை சர்வதேச, பிராந்திய பூகோள அரசியல் வலையில் மாட்டி விடுமா என்ற கேள்வியையும், அச்சத்தையும் ஒரே நேரத்தில் ஏற்படுத்துகிறது.

1.ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டிருந்த நிலையில் அமெரிக்க தூதுவர் ரணிலின் வீடு தேடிச் சென்று விக்கிரமசிங்க சிங்கவை சந்தித்தார். அரசாங்கத்தின் பிரதம அமைச்சர் ஹருணி அமர சூரிய வைத்தியசாலைக்கு சென்று ரணிலை பார்த்தாரா? இல்லயா? என்ற சந்தேகம் எதிர்கட்சிகளை விடவும் அரசாங்கத்திற்கு அதிகமாக இருக்கிறது.



2. பிரதமர் ஹருணி அமரசூரிய கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் அவரை நேர்கண்ட ஊடகவியலாளர் இந்திய புலனாய்வு அமைப்பான றோவின் முகவரா? என்ற சந்தேகம் அரசாங்கத்திற்குள் வலுத்துள்ளது. இந்த சந்தேகம் ஹருணியையும் துரத்துகிறது.

3. 2025. செப்டம்பர். 9 ம் திகதி வெளியான இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி இலங்கை பிரதமர் ஹருணி அமரசூரியாவுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்க டெல்லி பல்கலைக் கழகம் ஒன்று தீர்மானித்து இருப்பதாக கூறியது. ஆனால் அந்த முடிவு பல்கலைக்கழகம் சுயாதீனமாக எடுக்கவில்லை என்றும், இந்திய வெளியுறவு அமைச்சு கடிதம் மூலம் பல்கலைக்கழகத்தை நெருக்கியதாகவும் தெரிய வருகிறது. இதற்கு பின்னணியில் ஆளும் பாரதீய ஜனதா கட்சியும், அதன் மூளையாக செயற்படும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

4.அநுர ஆட்சிக்கு வந்ததில் இருந்து கடந்த ஒரு வருடமாக அதிகாரப்பகிர்வு தொடர்பாக மௌனம் சாதித்து வந்த மோடி அரசாங்கம், ஜெனிவாவில் மாகாண சபை தேர்தலை நடாத்தி அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்தை கோரியுள்ளது. மறு பாதி மனித உரிமைகள் விவகாரத்தில் ரஷ்யா இலங்கையில் மனித உரிமைகள் குறித்து கவலைப்பட எதுவும் இல்லை என சீனப் பாணியில் கூறியுள்ளது. இது அமெரிக்க, ஐரோப்பிய நிலைப்பாடுகளுக்கு முரணான கருத்தாகும்.

5.கொழும்பில் நடைபெறவிருந்த இஸ்ரேல் — பாலஸ்தீன பாராளுமன்ற நட்புறவு குழுக்கூட்டம் நாள் குறித்த வேகத்தில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அழைப்பு விடுத்த அரசியல்வாதி தவறுதலாக விடுக்கப்பட்ட அழைப்பு என்று கூறுகிறார்.

6. முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சிறப்புரிமைகளை நீக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் மகிந்த ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க இருவரையும் சீனத் தூதுவர் செங் சூயுவான் பூக்கொத்துடன் சென்று சந்தித்துள்ளார். மகிந்தவுக்கு கொழும்பில் வீடு ஒன்றை வழங்கவும் சீனத்தூதரகம் முன் வந்துள்ளது. அப்படியானால் அநுர அரசாங்கத்தால் குற்றக் கூண்டில் நிறுத்திய-நிறுத்தப்படவுள்ள (?), ரணிலையும், மகிந்தவையும் சீனா எந்த அந்தஸ்த்தில் வைத்து பார்க்கிறது?

7.தமிழரசு எம்.பி.சாணக்கியன் ஜனாதிபதியை பாராளுமன்றத்தில் தனியாக சந்தித்து பேசியுள்ளார். சாணக்கியன் பேசியிருந்த விடயங்கள் ஊடகங்களில் வெளிவந்தன. வெளிவராதவை என்ன? தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த்தேசிய கட்சிகள் முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை நீக்கும் சட்டத்திற்கான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் சறுக்கியது ஏன்? இதற்காக சாணக்கியன் ஜனாதிபதியை தனியாகச்சந்தித்து தடவினாரா? இந்த தடவலுக்கும் ஜெனிவாவில் இந்தியாவின் நிலைப்பாட்டிற்கும் தொடர்புண்டா? இது இந்திய ஏற்பாடா.....? இன்னும் ஒன்று சட்டத்திற்கு முரணாக சொத்து சேர்த்த சந்தேகப்பட்டியலில் சாணக்கியனும் இருக்கிறார்.

8.ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவில் 700 படையினர் உள்ளடக்கப்பட இருப்பதாகவும், விசேட பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும் என்றும் கூறப்படுகிறது. அப்படியானால் இது அரசாங்கத்தின் முன்னாள் ஜனாதிபதிகள் மீதான விமர்சனந்தை காற்றில் பறக்க விடுகிறது. இந்த பாதுகாப்பு பலப்படுத்தலுக்கு பின்னணி ஒன்று இருக்காமல் இருக்கமுடியாது.

9.ஜனாதிபதியின் யாழ்ப்பாண விஜயம் திங்கட்கிழமை என்று நிகழ்ச்சியிடப்பட்டது. ஜனாதிபதி இரவோடிரவாக ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு யாழ்ப்பாணம் போனார். முப்படைகளின் தளபதியான அவரின் விஜயம் குறித்து ஆனையிறவு முகாமுக்கு கூட அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. போகின்ற வழியில் ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் முகாமுக்கு செய்தி வந்ததாகவும், படையினர் நித்திரையில் தட்டி எழுப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது. ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவு சொந்த படையினர் மீது இழந்துள்ள நம்பிக்கையையே இது காட்டுகிறது.

10.அமைச்சர் இராமலிங்கம் ஜனாதிபதி செம்மணி போகலாம் என்றார். ஆனால் சொன்ன இடத்தை விட்டு சொல்லாத இடமான கச்சதீவுக்கு ஜனாதிபதி போனார். இதன் மூலம் ஜனாதிபதி யாரைத் திருப்திப்படுத்த விரும்புகிறார்? தென்னிலங்கை பௌத்த, சிங்கள தீவிர சக்திகளையா? போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு தமிழ், முஸ்லீம் மக்களையா?

இந்த நிகழ்வுகளின் பட்டியல் என்.பி.பி. அரசாங்கத்திற்கு பொருளாதார சவால்களுக்கு அப்பால் உள்ள பூகோள அரசியல் சிக்கல்களையும், உள்நாட்டு அரசியல் சிக்கல்களையும் காட்டுகின்றன.

இவற்றிற்கும் மேலாக அரசாங்கத்திற்குள் இரண்டு அதிகார மையங்கள் இருக்கின்றனவா? என்ற கேள்வி எழுந்துள்ளது. ரில்வின் சில்வா அணியே தீர்மானங்களை எடுக்கிறது, அறிவிக்கிறது. இதனால் அமைச்சரவை முடிவுகளுக்கும், பெலியத்தை முடிவுகளுக்கும் இடையே அடிக்கடி முரண்பாடுகள் வருவதும் அது திருத்தம் செய்யப்படுவதும் இடம் பெறுகிறது. இதை சாணக்கியன் ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளார். பலாலி விமான நிலைய அபிவிருத்தியில் ரில்வின் - பிமல் இரத்நாயக்க அணியே தடை போடுகிறது என்றும், இவர்கள் இது இந்திய மேலாலிக்கத்திற்கு வழி வகுக்கும் என்ற ஜே.வி.பி.யின் ஐந்தாவது விரிவுரையை நினைவுபடுத்துவதாகவும் வடக்கு தமிழரசு அரசியல்வாதிகள் கருதுகின்றனர்.

அரசாங்கத்திற்குள் ஏற்பட்டுள்ள ரில்வின் சில்வா ஹருணி வெடிப்பில், ஹருணியின் பலவீனங்களை அம்பலப்படுத்தி அவரை பதவியில் இருந்து அகற்றும் 'பைல்' இன்னும் மூடப்படவில்லை என்பது தெரிகிறது. இந்திய பல்கலைக் கழகம், இந்திய வெளியுறவு அமைச்சின் சிபார்சில் வழங்கவுள்ள கௌரவ கலாநிதிப்பட்டம், கொழும்பு பத்திரிகைக்கு அவரை பேட்டி கண்ட பத்திரிகையாளரின் 'றோ' தொடர்பு விசாரணை எல்லாம் பிரதமர் ஹருணி அமரசூரியாவை பலிக்களத்திற்குள் இழுக்கின்ற முயற்சிகளா?

இது விடயமாக த ஐலன்ட் பத்திரிகையில் கருத்திட்டுள்ள சம்பத். என்.எதிரிசூரிய இவ்வாறு குறிப்பிடுகிறார்.

பிரதமர் அலுவலகமும், இலங்கை கல்வி அமைச்சும் துரதிர்ஷ்டவசமாக புத்திசாலித்தனமும், பொது அறிவும் இல்லாத ஆலோசகர்களால் நிரம்பியிருப்பதும், இந்திய மற்றும் பிராந்திய அரசியலின் குறியீட்டு தாக்கங்களை நிச்சயமாக உணராததும் துரதிஷ்டமானது. பிரதமருக்கு நல்ல ஆலோசகர்களோ, அல்லது ஆலோசனைக்கு தகுதியான தனிப்பட்ட நண்பர்களோ கூட இல்லை என்றும், சுயாதீனமாக சிந்திக்க இயலாது என்றும்'' குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தை கல்வியாளர்களால் நிரப்புவோம் என்ற என்.பி.பி.க்கு இந்த நிலையா? அல்லது இதற்கு பின்னால் படிப்படியாக ஹருணி பிரதமர் பதவியை இழக்கிறாரா? காலிமுகத்திடலில் வானத்தை பார்த்த ஜனாதிபதியை படம் எடுத்து சமூக ஊடகங்களில் வெளியிட்டவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார், பாலஸ்தீன ஆதரவு ஸ்டிக்கர் ஒட்டியவர் பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார், பிரபாகரனின (22ம் பக்கம் பார்க்க)

# செம்மணியின் பின்னணியில் 60வது ஐ.நா. கூட்டத் தொடர்

நாட்டின் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துதல், மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடாத்துதல் மற்றும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளுங்கள்… .சகலரையும் உள்ளடக்கிய அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மற்றும் நியாயமான நல்லிணக்க செயன்முறை என்பன நிலையான அமைதிக்கு வழிகோலும்.

இவ்வாறு ஐநாவின் 60ஆவது கூட்டத் தொடரில் இந்தியப் பிரதிநிதி உரையாற்றி உள்ளார்.நாட்டின் அரசியலமைப்பை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்று இந்தியா கேட்பது அதன் நடைமுறை அர்த்தத்தில் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துங்கள் என்பது தான்.

இந்தியாவின் நிலைப்பாடு புதியது அல்ல.இந்தியா கடந்த 16ஆண்டுகளுக்கு மேலாக ஐநாவில் இந்த நிலைப்பாட்டைத் தான் வலியுறுத்தி வருகிறது. ஐநாவில் ஒருமுறை இந்தியா வாக்கெடுப்பில் கலந்து கொள்வதில்லை. மற்றும்படி இலங்கையின் யாப்பை முழுமையாக நிறைவேற்று என்று கூறுவதன் மூலம் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்து என்பதைத் தான் இந்தியா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது. அது இந்தியாவின் தொடர்ச்சியான நிலைப்பாடு.

இந்தியா மட்டுமல்ல ஐநாவிடமும் மேற்கு நாடுகளிடமும் சில மாறாத நிலைப்பாடுகள் உண்டு. அவற்றைத் தமிழ்த் தரப்பு உற்றுக் கவனிக்க வேண்டும். முதலாவதாக ஐநாவின் எல்லா அறிக்கைகளிலும் இலங்கை அரசுத் தரப்பை மட்டுமல்ல விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் விசாரிக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. கடந்த வாரம் மனித உரிமைகள் ஆணையாளர் வாசித்து அளித்த அறிக்கையிலும் அது தொடர்பான ஒரு சிறு பந்தி உண்டு. இரண்டாவதாக, இலங்கைத் தீவில் நடந்தது இனப்படுகொலை என்பதனை இன்றுவரை ஐநா உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை.ஐநா மட்டுமல்ல பெரும்பாலான மேற்கு நாடுகளிலும் அதுதான் நிலைமை.

அன்பின் அடிப்படையிலோ அல்லது நீதி நியாயத்தின் அடிப்படையிலோ அல்ல. அரசுகளின் அரங்காகிய ஐநாவிலும் அரசுகளின் உத்தியோகபூர்வ தீர்மானங்களின் அடிப்படையில்தான் நிலைப்பாடுகள் எடுக்கப்படும். இதில் அரசுகளை எப்படி அசைப்பது என்று தமிழ் தரப்புத்தான் சிந்தித்து செயல்பட வேண்டும். கடந்த 16 ஆண்டுகளாக அவ்வாறு அரசுகளை நோக்கி லொபி செய்வதில் தமிழ்த் தரப்பு எதுவரை முன்னேறியிருக்கிறது?

ஐநாவுக்கு கூட்டுக் கடிதங்களை அனுப்பினால் மட்டும் தீர்வு கிடைத்து விடும் என்று நம்புவது அப்பாவித்தனமானது. அதற்கு கடந்த நான்கு ஆண்டுகளே சாட்சி.இம்முறை கட்சிகள் மட்டுமல்ல





சிவில் சமூகங்களும் இரண்டு கடிதங்களை அனுப்பியுள்ளன.இப்படிச் சிதறிப் போயிருக்கும் ஒரு மக்கள் கூட்டம் கடிதங்களை எழுதி விட்டு வாளாயிருக்க முடியாது. அதற்குமப்பால் கடுமையாக உழைக்க வேண்டும். லொபி செய்ய வேண்டும்.எல்லாவற்றிக்கும் முதலில் ஈழத் தமிழர்கள் வெளி உலகத்தை அணுகுவதற்கு என்று ஒரு வெளி

அதுதான் இப்பொழுது நடக்கிறது. இவ்வாறு தமிழ் மக்கள் மத்தியில் ஒரு மையமான கட்டமைப்பு இல்லாதபோது கட்சிகளைப் பிரித்துக் கையாள்வது நாடுகளுக்கும் ஐநா போன்ற பொது அமைப்புகளுக்கும் இலகுவாக இருக்கும். அதுதான் இப்பொழுது நடக்கிறது.

அரசுகள் எப்பொழுதும் அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்புச் சார்ந்துதான் முடிவு எடுக்கும். அறநெறிகளின் அடிப்படையில் முடிவெடுப்பது மிகக்குறைவு. அப்படி முடிவு எடுத்தாலும் இறுதியிலும் இறுதியாக என்ன செய்ய வேண்டும் என்பதை தீர்மானிக்கப் போவது புவிசார் அரசியலும் பூகோள மற்றும் பிராந்திய

அரசியலும் தான். எனவே கடந்த 16 ஆண்டுகளாக நீதிக்கான போராட்டத்தில் தமிழ் மக்களின் முன்னேற்றம் திருப்தியாக இல்லை என்று சொன்னால் அதற்குக் காரணம் நாடுகளை நோக்கிய தமிழ் மக்களின் லொபி ஒருமுகப் படுத்தப்பட்டதாக இல்லை என்பது தான். தமிழ் மக்கள் ஓர் அரசு போல ஒரு மையத்திலிருந்து முடிவு எடுத்து

வாய்க்கால் மேற்காசியாவில் அரங்கேறிக் கொண்டிருக்கிறது. உலக அரசியலானது அறநெறிகளின் அடிப்படையிலானது அல்ல.நீதி நியாயங்களின் அடிப்படையிலானது அல்ல என்பதனை அது மீண்டும் மீண்டும் நிரூபித்துக் கொண்டேயிருக்கிறது.

எனவே தர்மம் வெல்லும் நீதி வெல்லும்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



என்றெல்லாம் அப்பாவித்தனமாக நம்பிக் கொண்டிருக்காமல் உலகின் தலை நகரங்களில் எப்படி லொபி செய்யலாம் என்று தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும். அரசல்லாத மனிதநேய அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புகள்,சில சமயங்களில் மத நிறுவனங்கள் போன்றவற்றிடம் தான் தர்மமும் நீதியும் எடுபடும். நிச்சயமாக அரசுகளிடம் அல்ல. பலஸ்தீனர்களின் விடயத்தில் தென்னாபிரிக்கா அவ்வாறு அறம் சார்ந்து ஒரு முடிவை எடுத்தது. ஆனால் அதனால் காசாவில் நடக்கும் இன அழிப்பை தடுத்து நிறுத்த முடியவில்லை. நிகழும் அறுபதாவது ஐநா கூட்டத் தொடரை செம்மணிக்கு ஊடாக தமிழ் மக்கள் பார்க்கலாம். ஆனால் ஐநாவோ இந்தியாவோ அமெரிக்காவோ அல்லது பிரித்தானியாவோ ஐரோப்பிய சமூகமோ அதை செம்மணிக்கூடாகத்தான் பார்க்கும் என்று எதிர்பார்ப்பது அப்பாவித்தனமானது. மாறாக அவை தங்களுடைய ராணுவ பொருளாதார ராஜிய நலன்களின் அடிப்படையில் தான் பார்க்கும். எனவே தமிழ் மக்கள் வேலை செய்ய வேண்டிய இடம் அது.

காசாவுக்கு கிடைக்காத நீதி செம்மணிக்கு கிடைக்கும் என்று எந்த அடிப்படையில் எதிர்பார்க்கிறோம்? இந்த கேள்விக்கு அறம் சார்ந்து அரசியலை நோக்கும் தமிழர்கள் பதில் சொல்ல வேண்டும். நீதி பொதுவானது என்றால் தமிழ் மக்களுக்கு கிடைக்கும் அதே நீதி காசாவுக்கும் கிடைக்க வேண்டும். எனவே காசாவுக்கு ஏன் நீதி கிடைக்கவில்லை என்ற கேள்வியில் இருந்தே தமிழ் மக்கள் தங்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும் என்ற விடையைத் தேட வேண்டும்.

உத்தேச ஐநா தீர்மான வரைபு என்ற ஓர் ஆவணம் கடந்த ஒன்பதாந் திகதி வெளிவந்தது. இது உட்சுற்றுக்கானது. இறுதியானது அல்ல.இந்த ஆவணத்திலும் இலங்கை அரச படைகளோடு விடுதலைப் புலிகள் அமைப்பும் பொறுப்புக் கூற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல அந்த ஆவணத்திலும் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது, மாகாண சபைத் தேர்தல்களை வைப்பது போன்ற விடயங்கள் கூறப்படுகின்றன.

கனடாவில் இந்த அழிப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கலாம். ஆனால் அங்கேயும் அது கனடாவின் உத்தியோகபூர்வ வெளியுறவுக் கொள்கையாக இல்லை. கனடா ராஜபக்சங்களுக்கும் சில படைப்பிரதானிகளுக்கும் பயணத் தடையும் உட்பட ஏனைய தடைகளை விதித்து இருக்கிறது. ஆனால் அதே கனடா தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட ஒரு தொகுதி அரசியல்வாதிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் விசா வழங்குவதில்லை. குறிப்பாக பொங்கு தமிழை முன்னெடுத்த முன்னாள் பல்கலைக்கழக விரிவுரையாளருக்குக் கூட விசா இல்லை.

எனவே ஐநாவிலும் மேற்கு நாடுகள் மத்தியிலும் சில மாறாத நிலைப்பாடுகள் தொடந்தும் உண்டு. அப்படித்தான் இந்தியாவிலும். அரசுகள் தங்கள் தங்கள் ராணுவப் பொருளாதார அரசியல் நோக்கு நிலையில் இருந்து சில தீர்மானங்களை எடுக்கும்.

யுறவுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். அக்கட்டமைப்பு கட்சிசாராத ஒன்றாகவும் அந்த கட்டமைப்பு எடுக்கும் முடிவுகளுக்கு சம்பந்தப்பட்ட எல்லா கட்சிகளும் கட்டுப்படக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

இரண்டாவதாக அந்த கட்டமைப்பானது அரசியல்வாதிகளோடு சேர்த்து தாயகத்திலும் டயஸ்போராவிலும் உள்ள குடிமக்கள் சமூகங்களைச் சேர்ந்தவர்களையும் துறைசார் புத்திஜீவிகளையும் உள்ளடக்கியதாக விரிவு படுத்தப்பட வேண்டும்.

அந்த வெளியுறவுக் கட்டமைப்பானது ஒரு வெளியுறவுக் கொள்கையை, வெளியுறவு அணுகுமுறையை வகுத்துக் கொள்ள வேண்டும். இந்தியாவை எப்படி அணுகுவது? மேற்கு நாடுகளை எப்படி அணுகுவது? சீனாவை எப்படி அணுகு வது? ஏனைய ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளை எப்படி அணுகுவது? போன்ற விடயங்களில் தெளிவான வெளியுறவு நிலைப்பாடுகளை எடுத்து, அந்த அடிப்படையில் செயற்பட வேண்டும்.

ஆனால் கடந்த 16 ஆண்டுகளாக அவ்வாறான அனைத்துக் கட்சி கட்டமைப்பு ஒன்றை உருவாக்க முடியவில்லை. அப்படி ஒரு கட்டமைப்பு இல்லாத வெற்றிடத்தில் வெளிவிவகார அணுகுமுறை என்பது ஒவ்வொரு கட்சியினுடைய அல்லது கட்சி பிரமுகருடைய தனி ஓட்டமாகத் தான் அமையும்.

செயல்படவில்லை என்பதுதான்.

செம்மணி மனிதப் புதைகுழி திறந்து வைத்திருக்கும் புதிய வாய்ப்புகளின் பின்னணியில் ஐநாவில், புதுடில்லியில், நியூயோர்க்கில் ஈழத்தமிழர்கள் தொடர்பான முடிவுகளில் பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை என்பதைத் தான் அறுபதாவது ஐநா கூட்டத்தொடரில் இது வரையிலுமான நடப்புகள் நமக்கு உணர்த்துகின்றன.

தமிழ் மக்கள் தமது கோரிக்கைகள் நியாயமானவை நீதியானவை என்பதனால் உலக சமூகம் தங்களை அங்கீகரிக்க வேண்டும், தங்களைப் பாதுகாக்க வேண்டும், தங்களுக்கு உரிய தீர்வை பெற்றுத்தர வேண்டும் என்று நம்புவது அப்பாவித்தனமானது. அரசியலில் நீதி நியாயங்களை நலன்சார் உறவுகள் தான் தீர்மானிக்கின்றன. 16 ஆண்டுகளின் பின் மீண்டும் ஒரு முள்ளி

## ஈஸ்வரன் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன்/ மணமகள் தேவை யெனில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவு இல K505 1987இல் பிறந்த மணமகள் பட்டதாரி CANADA Cityzen கனடாவிலுள்ள மணமகனை எதிர்பார்க்கின்றார்

தொடர்புகளுக்கு:-
1416 771 6013 Canada

# ட்ரம்பின் உத்தியை இப்போது மோடி கையில் எடுத்துள்ளாரா?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– க.அருந்தவபாலன் –

தனது நாட்டின் இறக்குமதிப் பண்டங்கள் மீதான சுங்கத் தீர்வைகள் தொடர்பான அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் அதிரடி அறிவிப்புகளால் கலக்கமடைந்த அந்நாட்டின் பிரதான வர்த்தகப் பங்காளி நாடுகள் பலவும் ட்ரம்புடன் ஏதோவொரு வகையில் தற்காலிகமாகச் சமரச உடன்பாட்டுக்கு வந்துள்ளதைக் காணமுடிகிறது.

எனினும் சீனா, இந்தியா போன்ற சில நாடுகள் ட்ரம்பின் நோக்கங்களுக்கு வளைந்து கொடுக்க மறுத்து வருவதுடன் நின்று விடாது அவை ட்ரம்பின் உத்தியை தமது கையிலெடுத்துத் திருப்பியடிக்கத் தொடங்கி விட்டதை அவதானிக்க முடிகிறது.

நீண்டகாலமாகவே தன்னாட்டில் நிலவி வரும் வெளிநாட்டு வர்த்தகப்பற்றாக் குறையை மட்டுப்படுப்படுத்துவதுடன் உள்நாட்டு உற்பத்தியாளரை பாதுகாப்பதற்காகவுமே சுங்கத் தீர்வையைத் தான் அதிகரிப்பதாக ட்ரம்ப் கூறிய போதும் அது ஒருபகுதி உண்மை மட்டுமே என்பது உலகறிந்த விடயம். அதற்கு மேலாக சர்வதேச ரீதியாக தனது அரசியல் ஆதிக்கத்தைத் தொடர்ந்து தக்க வைப்பதுடன் அதற்குச் சவாலாக மேலெழும்பக்கூடிய நாடுகளை மட்டந்தட்டி வைப்பதற்குமான ஒரு உத்தியாக சுங்கத்தீர்வையைக் கையாள்வதே ட்ரம்பின் நோக்கமாகும் என்பதை அஅந்நாடுகளின் மீது விதிக்கப்பட்ட சுங்கத்தீர்வையின் அளவுகள் மட்டுமன்றி அவரது அறிவிப்புகளிலிருந்தும் அறியமுடியும்.

வர்த்தக நோக்கத்தை விட ஏனைய நாடுகளின் தன்னாதிக்கத்தின் மீது தனது ஆதிக்கத்தை சுங்கவரி என்ற பெயரில் அமெரிக்கா திணிக்க முயல்வதை இன்று அதன் நேச நாடுகள் உட்பட உலகில் எந்தவொரு நாடும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்பதை இது தொடர்பான அந்நாடுகளின் நாளாந்தப் பிரதிபலிப்புகளிலிருந்து காணமுடிகிறது.

இதில் ஒருபடி மேலே சென்று இந்தியா சீனாவைப் போன்று அமெரிக்காவுக்குப் பதிலடி கொடுங்கத் தொடங்கி விட்டதற்கான வெளிப்பாடுகள் வேகமாக அரங்கேறுவதைக் காண முடிகிறது. ட்ரம்ப் எந்த வர்த்தகத்தை கருவியாகப் பயன்படுத்தி இந்தியாவைத் தனது வழிக்குக் கொண்டு வர எண்ணினாரோ அதே கருவியை வைத்து மோடி அமெரிக்காவைத் தனது வழிக்குக் கொண்டு வர தற்போது முயற்சிப்பது போலத்தெரிகிறது. அதுமட்டுமன்றி இந்தியாவை வைத்து எந்த நாடுகளைப் பலவீனப்படுத்துவதற்கு ட்ரம்ப் நினைத்தாரோ அதற்கு மாறாக அந்த நாடுகளுடானன நெருக்கத்தையே அவரது அணுகுமுறை ஏற்படுத்தி விட்டுள்ளதையும் காண முடிகிறது.

தொடக்கத்தில் ஏனைய நாடுகளுக்கான சுங்கத்தீர்வை போலவே இந்தியாவிலிருந்தான முக்கிய இறக்குமதிப் பொருட்களுக்கும் 25வீத சுங்கத்தீர்வை டரம்பால் விதிக்கப்பட்டிருந்தது. அமெரிக்காவின் இந்தியாவுக்கான ஏற்றுமதிப் பெறுமதியை விட இந்தியாவிலிருந்தான அந்நாட்டின் இறக்குமதிப் பெறுமதி ஒரு மடங்கு அதிகமானது என்பதனால் இதனை ஓரளவு நியாயப்படுத்த முடியும். இது தொடர்பாக ஓர் இணக்கப்பாட்டை எட்டுவதற்கான பேச்சுவார்த்தைகள் இரு நாட்டு அதிகாரிகளுக்குமிடையில் நடைபெற்றுக் கொண்டு இருக்கும் போதே ட்ரம்ப் மேலும் 25வீதத் தண்டத் தீர்வையாக அறிவித்து இந்தியப் பொருட்கள் மீது மொத்தமாக 50வீத தீர்வையை விதித்தமை இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவில் பெரிய வெடிப்பைத் தோற்றுவித்தது. ட்ரம்ப் விதித்த தீர்வைத் தண்டம் என்பது இந்தியா ரஷ்யாவிடம் இருந்து குறைந்த விலையில் மசகு எண்ணெய் வாங்குதற்கானது. இதனை மறுவார்த்தையில் கூறினால் இந்தியா ரஷ்யாவிடமிருந்து மசகு எண்ணெய் வாங்குவதை நிறுத்தினால் இந்த 25வீத மேலதிகத் தீர்வை விதிக்கப்பட மாட்டாது என்பதாகும்.



இதற்கு ட்ரம்ப் தரப்புக் கூறும் காரணம் இந்தியா ரஷ்யாவிடமிருந்து மசகு எண்ணெய் வாங்குவதால்தான் ரஷ்யாவால் தொடர்ந்து உக்ரைனுடன் யுத்தம் செய்ய முடிகிறது என்பதாகும். ஆனால் இதுவொரு பலவீனமான குற்றச்சாட்டு. ரஷ்யாவிடமிருந்து இந்தியா மட்டுமன்றி சீனா உட்பட பல நாடுகள் மசகு எண்ணெய் மற்றும் எரிவாயு போன்றவற்றைக் கொள்வனவு செய்கின்றன. இவற்றுள் பல ஐரோப்பிய நாடுகளும் அடங்குவதுடன் வெளிநாடுகளிலுள்ள சில அமெரிக்க நிறுவனங்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு மேலாக அமெரிக்காவின் வர்த்தகப் பற்றாக்குறைக்கும் இந்தியா ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்குவதற்கும் என்ன தொடர்பு? அல்லது பெண்கள், குழந்தைகள், வைத்தியசாலை, பள்ளிக்கூடம் என எதுவும் பாராது காசாவில் கொன்று குவிக்கும் இஸ்ரேலுக்குத் துணை நிற்கும் ட்ரம்ப் யுத்தம் அமைதி எனக் காரணம் கூறுவதை எவ்வாறு ஏற்றுக் கொள்வது? இவற்றுக்கு மேலாக ட்ரம்பின் இந்த நிபந்தனை இந்தியாவின் தன்னாதிக்கத்தின் மீதான ஒரு சவாலாகும். குறித்தவொரு நாட்டின் வர்த்தகத் தீர்மானத்தின் மீது இன்னொருநாடு தலையிடுவதற்கு எந்த உரிமையுமில்லை.

இந்தியா தொடர்பான ட்ரம்பின் தற்போதைய தீர்மானமும் எதிர்பார்ப்புகளும் ஐம்பது வருடங்களுக்கு முன்னைய இந்திய நாட்டின் தரவுகளை அல்லது நிலைமைகளை கருத்திற் கொண்டு எடுக்கப்பட்டதோ என்ற ஐயம் ஏற்படுகிறது. மிகவும் பின்தங்கிய பொருளாதாரம், தொழில்நுட்ப வளரச்சியின்மை,வறுமை, உள்நாட்டுப் பிணக்குகள், பிறநாடுகளில் அதிகம் தங்கியிருக்கும் தன்மை கொண்ட ஒரு நாடு அது, அந்நாட்டைத் தான் நினைத்தவாறு கையாளலாம் என்று ட்ரம்ப் எண்ணியிருப்பார் போலத் தெரிகிறது. ஆனால் அவரது எண்ணம் தவறானது என்பதை இந்தியா நிரூபிக்கத் தொடங்கியுள்ளது. உண்மையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உலகில் நான்காவது இடத்தில் இருக்கும் இந்தியப் பொருளாதாரத்தின் ஆண்டு வளர்ச்சி வீதமும் சராசரி ஏழாகக் காணப்படுகிறது. மொத்த உற்பத்தியில் முதலீடானது சரரசரி 30வீத இலும் உயர்வாக உள்ளது. ஏற்றுமதி வணிகத்திலும் உலகின் முதல் பத்து நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சியிலும் வேகமான முன்னேற்றத்தைக் கண்டு வருகிறது. மிகப் பிந்திய செய்தியாக இந்தியா முற்று முழுதாக சுயமாக ஆனால் முன்னேற்றமான ‘குறைக்கடத்தியை’ தயாரித்துள்ளமை அதன் தொழில்நுட்ப வளர்சிக்குச் சான்றாக உள்ளது.

உலகின் சனத்தொகையில் 18வீதத்தைக் கொண்டுள்ள இந்தியா மனித வளத்தில் மட்டுமன்றி பாரியளவில் உளநாட்டு, வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பையும் தன்னகத்தே கொண்டுள்ளது. 2030 ஆம் ஆண்டில் இந்தியா உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறும் என்று எதிர்வு கூறப்படுகிறது. இவற்றுக்கு மேலாக ஒப்பீட்டுரீதியில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக உறுதியான அரசியல் நிலைமையும் அங்கு காணப்பட்டு வருகிறது. இந்தவகையில் பொருளாதார ரீதியாக மட்டுமன்றி அரசியல்ரீதியாகவும் உலக அரங்கில் தவிர்க்க முடியாத சக்தியாக இந்தியா முகிழ்ந்துள்ளது. இந்நிலையைக் கவனத்திற் கொள்ளாது ட்ரம்ப் இந்தியாவைக் கிள்ளுக் கீரையாக மதிப்பிட்டது தவறு என இன்று ட்ரம்பின் சகபாடிகளே அவரைக் கடிந்து கொள்ளும் நிலை தோன்றியுள்ளது.

ட்ரம்பின் அடாவடிக்கு எதிராக இந்தியாவின் அணுகுமுறை இரண்டு தளத்தில் நகர்த்தப்படுகிறது. ஒன்று பொருளாதார ரீதியான அணுகுமுறை. இரண்டாவது அரசியல்ரீதியான அணுகுமுறை. பொருளாதார ரீதியான அணுகுமுறையில் முக்கியம் பெறுவது அமெரிக்காவுடனான வர்த்தகக் கதவை மூடிவிட்டு அதற்குப் பதிலாகப் புதிய கதவுகளைத் திறப்பது. வர்த்தகம் தொடர்பாக அமெரிக்காவுடன் மேலும் பேச்சு வார்த்தைகளுக்கு இந்தியா தயாரில்லை என்பதை மோடி பல வழிகளிலும் வெளிப்படுத்தியுள்ளதைக் காணமுடியும். இது தொடர்பாக ட்ரம்ப் மோடியுடன் நான்கு முறை தொடர்பு கொள்ள முயற்சித்தும் பயனளிக்கவில்லை என ஜெர்மனியின் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவுக்கான இந்திய ஏற்றுமதிகளின் தடை உண்மையில் அமெரிக்காவை விட இந்தியாவுக்கே அதிகளவு பாதிப்பைத் தரக் கூடியது. அதனை நிவர்த்தி செய்யும் முகமாக இந்தியா சீனா, பிரேசில் இந்தோனேசியா போன்ற பிரதான பிரிக்ஸ் அமைப்பு நாடுகளுடன் மட்டுமன்றி ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் போன்ற நாடுகளுடனும் புதிய வர்த்தக ஒப்பந்தங்களில் ஈடுபட்டுள்ளது. இந்தவகையில் தற்போது 25 நாடுகளுடன் புதிதாக வர்த்தக உடன்பாடுகளை இந்தியா எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றுள் பல நாடுகளுடனான வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களை அமெரிக்க டொலருக்குப் பதிலாக அந்நாடுகளின் சொந்த நாணயங்களில் மேற்கொள்வதற்கும் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. மறுபுறத்தில் இறக்குமதிகளுக்குப் பதிலாக உள்நாட்டு உற்பத்திகளை மக்கள் வாங்குவதை ஊக்குவிக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. உள்நாட்டு நுகர்வோர் நலன் கருதி பொருட்கள் சேவைகள் வரியும் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இந்தியாவில் இயங்கி வரும் அமெரிக்கப் பல்தேசிய நிறுவனங்களின் உற்பத்திகள் மீது கூடிய வரி அல்லது தடைகள் விதிப்பது தொடர்பாகவும் ஆராயப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக ‘கொக்க கோலா’, ‘பெப்சி’ ‘ஆப்பிள்’போன்ற பல நிறுவனங்கள் இதனுள் அடங்கக் கூடும் என எதிர்வு கூறப்படுகிறது.

மறுபுறத்தில் சமகாலத்தில் இந்தியா அமெரிக்காவுக்கு எதிரான அணிகளுடன் இறுக்கமான பிணைப்பை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. ஏலவே அமெரிக்க ஏகபோகத்துக்கு மாற்றீடான நோக்கங்களுக்காகப் பிரிக்ஸ் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. அதில் இந்தியாவும் உறுப்பு நாடாக இணைந்திருக்கிறது.

கூட்டமைப்பைப் பலவீனப்படுத்துவதும் ட்ரம்பின் சுங்கத் தீர்வைக்கான நோக்கங்களுள் பிரதானமானதொன்று. ஆனால் ட்ரம்பின் எதிர்பார்ப்புக்கு மாறாக அது ரஷ்ய, சீனா, பிரேசில், போன்ற அமெரிக்க எதிரணி நாடுகளுடன் இந்தியாவை மேலும் இறுக்கமடையச் செய்து விட்டது. அண்மையில் சீனாவில் நடைபெற்ற ஷங்காய் கூட்டுறவு அமைப்பு(SCO) மாநாடு இதனை மேலும் வலுவாக் உதவியது எனலாம். இந்தியா சரியான நேரத்தில் இதனைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டது எனலாம். இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையில் பல உள்முரண்பாடுகள் நிலவிய போதும் இந்தியா அவற்றைப் புறமொதுக்கி சீனாவுடன் இறுக்கமாகக் கைகோர்க்க விரும்புவதன் நோக்கம் அமெரிக்கச் சவாலை வெற்றி கொள்வதற்கான ஒரு உத்தி என்று கருதமுடியும்.

இந்தியாவின் இந்த அதிரடி நடவடிக்கைகள் ட்ரம்ப் எதிர்பாரத்திராத ஒன்றாகும். தனது சுங்கத் தீரவைமூலம் இந்தியாவைப் பணிய வைக்க முடியுமென்றே ட்ரம்ப் நம்பியிருந்தார். தொடக்கத்தில் இந்தியாவும் அமெரிக்காவுடன் சமரசம் செய்யவே விரும்பியிருந்தது. தான்தான் அண்மைய இந்திய பாகிஸதான் சண்டையை நிறுத்தியதாகச் சொல்லி (20ம் பக்கம் பார்க்க)

# மூன்று வருட இடைவெளியில் மூன்று ஆட்சியாளர்களை விரட்டிய தெற்காசிய மக்கள் கிளர்ச்சிகள்!

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
– வீ.தனபாலசிங்கம் –

தெற்காசியாவில் மூன்று வருடங்களில் மூன்று அரசாங்கங்களை மக்கள் கிளர்ச்சிகள் பதவி கவிழ்த்திருக்கின்றன. முதலாவதாக 2022ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இலங்கையின் 'அறகலய' மக்கள் கிளர்ச்சி ராஜபக்ச ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்தது.

இரண்டாவதாக, 2024 ஆகஸ்டில் பங்களாதேஷ் மக்கள் கிளர்ச்சி பிரதமர் ஷேய்க் ஹசீனாவின் அரசாங்கத்தை பதவி கவிழ்த்தது.

மூன்றாவதாக, கடந்த வாரம் அதே போன்ற மக்கள் கிளர்ச்சி நேபாளத்தில் பிரதமர் கே.பி. சர்மா ஒலியின் அரசாங்கத்தை வீழ்த்தியிருக்கிறது.

இலங்கையினதும் பங்களாதேஷினதும் கிளர்ச்சிகளின் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் ஷேய்க் ஹசீனாவும் நாட்டை விட்டு தப்பியோடினார்கள். ஆனால், கடந்த வாரம் பதவியில் இருந்து விலகிய நேபாளப் பிரதமர் இராணுவத்திடம் பாதுகாப்பைத் தேடிக் கொண்டார். நாட்டை விட்டு வெளியேறிய கோட்டாபய சில வாரங்களில் நாடு திரும்பிய அதே வேளை, ஷேய்க் ஹசீனா இந்தியாவில் தஞ்சமடைந்திருக்கிறார். அவரை பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் விசாரணைக்கு உட்படுத்துவதற்காக நாடு கடத்துமாறு பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கம் கோரிக்கை விடுத்திருக்கின்ற போதிலும், இந்தியா அதற்கு இணங்குவதற்கான சாத்தியங்கள் இல்லை.

இலங்கையில் மக்கள் கிளர்ச்சிக்கு இரு வருடங்களுக்கு பிறகு நடைபெற்ற தேசிய தேர்தல்களில் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி மக்களின் பேராதரவுடன் பதவிக்கு வந்ததன் மூலம் அதிகார மாற்றம் அமைதியான முறையில் இடம் பெற்றது. அந்த மாற்றம் இலங்கையின் அரசியல் வரலாற்றில் இடதுசாரிக்கட்சி ஒன்று ஜனநாயக தேர்தல்கள் மூலம் முதன் முதலாக அதிகாரத்தைக் கைப்பற்றிய 'சாதனையாக' பதிவாகியிருக்கிறது.

பங்களாதேஷில் நோபல் சமாதானப் பரிசாளரான முஹம்மது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசாங்கம் அடுத்த வருடம் பாராளுமன்ற தேர்தலை நடத்தவிருக்கிறது. கடந்த வாரத்தைய கிளர்ச்சியை அடுத்து நேபாளத்திலும் இடைக்கால அரசாங்கம் ஒன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறது.

தெற்காசியாவின் இந்த மூன்று மக்கள் கிளர்ச்சிகளையும் பொறுத்தவரை, பங்களாதேஷிலோ அல்லது நேபாளத்திலோ இடம் பெற்ற படுமோசமான வன்முறைகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் கிளர்ச்சி பெருமளவுக்கு அமைதியான முறையிலேயே முன்னெடுக்கப்பட்டது. ஆனால் தெற்காசியப் பிராந்தியத்தில் மக்கள் கிளர்ச்சி மூலம் அரசாங்கத்தை கவிழ்த்த முதல் நாடாக இலங்கை வரலாற்று முக்கியத்துவம் ஒன்றைக் கொண்டிருக்கிறது.

சகல கிளர்ச்சிகளிலும் மாணவர்களும் இளைஞர்களுமே முன்னரங்கத்தில் நிற்பது இயல்பு. ஆனால், கடந்த வாரத்தைய நேபாளக் கிளர்ச்சியில் இளைஞர்களின் பங்கேற்பு முன்னென்றும் இல்லாத வகையில் ஒரு குறிப்பிட்ட தலைமுறை இளைஞர்களின் போராட்டமாகவே முதலில் அடையாளப் படுத்தப்பட்டது. 1900களின் பிற்பகுதிக்கும் 2010களின் முற்பகுதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்த இளைஞர்கள் 'இஸற்' தலைமுறையினர் என்று வர்ணிக்கப்படுகின்றனர் .



குறிப்பாக 1997 ஆம் ஆண்டுக்கும் 2012 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்குதியில் பிறந்த இவர்கள் 13 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

நேபாளத்தில் இடம் பெற்ற கிளர்ச்சி 'ஜென் இஸற் இயக்கம்' (Gen. Z movement) என்றே பிரபல்யமாக அழைக்கப்படுகிறது. அந்த தலைமுறையினரின் சார்பில் பரந்தளவிலான அரசியல் சீர்திருத்தங்களை வேண்டி நிற்கும் 'ஹமி நேபாள்' (நாங்கள் நேபாளியர்கள்) என்ற இயக்கமே போராட்டத்துக்கு தலைமை வகித்தது. நேபாளம் ஆர்ப்பாட்டங்களுக்கும் போராட்டங்களுக்கும் புதிய நாடு அல்ல. கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒரு தசாப்தத்திற்கும் அதிகமான காலமாக மாவோவாத கம்யூனிஸ்டுகளின் ஆயுதப் புரட்சியினால் பெரும் இழப்புக்களையும் அழிவுகளையும் நேபாளம் சந்தித்தது.

ஆனால், குறிப்பிட்ட வயதைச் சேர்ந்த இளைய தலைமுறையினர் நேபாளத்தின் வீதிகளில் தற்போது எதற்காக இறங்கினார்கள்?

நேபாள கம்யுனிஸ்ட் கட்சி (ஐக்கிய மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) தலைமையிலான அரசாங்கம் சகல சமூக ஊடகங்களையும் (2023 சமூக ஊடக பயன்பாட்டு ஒழுங்கு விதிகளின் கீழ்) ரெலிகோம் அதிகார சபையில் பதிவு செய்ய வேண்டும் என்று ஒருவார காலக்கெடு விதித்து ஆகஸ்ட் 28ஆம் திகதி அறிவித்தது. முக்கியமான சமூக ஊடகங்களில் எதுவும் அந்த அறிவிப்பை கருத்தில் எடுக்காத நிலையில் செப்டெம்பர் 4 ஆம் திகதி அரசாங்கம் (முகநூல், எக்ஸ், வட்ஸ்அப் உட்பட) 26 சமூக ஊடகங்களை தடை செய்தது. சுமார் மூன்று கோடி சனத்தொகையை கொண்ட நேபாளத்தில் ஒரு கோடியே 65 இலட்சம் பேர் இணையத்தை பயன்படுத்துகிறார்கள் என்று கூறப்படுகிறது.

சமூக ஊடகங்கள் மீது அரசாங்கம் விதித்த தடையை மக்கள் குறிப்பாக இளைய தலைமுறையினர் ஒரு தணிக்கையாகவும் தகவல்களைப் பெறுவதற்கான ஒரு கட்டுப்பாடாகவுமே பார்த்தார்கள். சனத்தொகையில் அரைவாசிக்கும் அதிகமானவர்கள் இணையத்தை பெருமளவுக்கு பயன்படுத்துகின்ற ஒரு நாட்டில் இத்தகைய தடைவிதிப்பு எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அரசாங்கம் முன்கூட்டியே சிந்தித்துப் பார்க்கவில்லை. செப்டெம்பர் 8 ஆம் திகதி வீதிக்கு இறங்கிய இளைஞர்களின் ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்துவதற்கு பொலிசார் எடுத்த நடவடிக்கைகளில் 19 பேர் பலியானதுடன் நூறுக்கும் அதிகமானவர்கள் காயமடைந்தார்கள். அதையடுத்து தலைநகர் காத்மாண்டுவில் மாத்திரமல்ல, நாட்டின் பல பாகங்களிலும் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் இறங்கினார்கள்.

செப்டெம்பர் 9ஆம் திகதி சமூக ஊடகங்கள் மீதான தடையை அரசாங்கம் நீக்கிய போதிலும் போராட்டங்கள் தணியவில்லை. நேபாளத்தில் கடந்த காலப் போராட்டங்களின் போது இடம்பெறாத அளவுக்கு படுமோசமான வன்முறைகள் கடந்த வாரம் இடம் பெற்றன.



அரசியல் தலைவர்கள் தாக்கப்பட்டார்கள். அவர்களின் வீடுகள் எரிக்கப்பட்டன. பாரளுமன்றம், ஜனாதிபதி மாளிகை, உயர்நீதிமன்றம் உட்பட பெருவாரியான அரசாங்கச் சொத்துக்களுக்கு போராட்டக்காரர்கள் தீவைத்தார்கள். சமூக ஊடகங்கள் மீதான தடைக்கு எதிராக இளைய தலைமுறையினர் அமைதியான முறையில் முன்னெடுத்த போராட்டம் இறுதியில் அரசாங்கத்தை கவிழ்த்த மாபெரும் மக்கள் வன்முறைக் கிளர்ச்சியாக மாறியது.

வன்முறைகள் தீவிரமடைந்து சிறையுடைப்புச் சம்பவங்களும் இடம்பெற்றன. ஆனால், நேபாள இராணுவம் ஓரிரு நாட்களில் அராஜக நிலைவரத்தை கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தது. கடந்த வார வன்முறைகளில் குறைந்தது 51 பேர் பலியானதாகவும் பல நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்தாகவும் செய்திகள் தெரிவித்தன. முன்னாள் பிரதமர் ஒருவரின் மனைவி உயிருடன் எரிக்கப்பட்ட கொடூரச் சம்பவமும் இடம்பெற்றது.

அரசாங்கத்தின் முக்கிய தலைவர்களான நேபாள கம்யூ னிஸ்ட் (ஐக்கிய மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) கட்சியின் தலைவர் (பிரதமர்) கே.பி. சர்மா ஒலி, நேபாள காங்கிரஸ் கட்சி தலைவர் ஷெர் பகதூர் டியூ பா மற்றும் நேபாள கம்யூனிஸ்ட் (மாவோவாத நிலையம்) கட்சியின் தலைவர் பிரசண்டா ஆகியோருக்கு எதிராக ஏற்கெனவே கடுமையாக ஊழல் குற்றச்சாட்டுக்கள் இருந்தன.

கோட்பாடுகளை பொறுத்தவரை, பெருமளவுக்கு ஒத்துப் போகாத இந்த தலைவர்களை ஊழலே பிணைத்து வைத்திருந்தது என்று கூட விமர்சனங்கள் வெளியாகின.

ஆட்சியாளர்களின் குடும்பங்கள் ஆபாசத்தனமான ஆடம்பரத்தில் வாழ்வதைக் கண்டு கொதித்துக் கொண்டிருந்த இளைஞர்களும் மக்களும் அரசாங்கத்தை விரட்டுவதற்கு எடுத்த முடிவை எவராலும் தடுக்க முடியவில்லை. முடியாட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அரசியல் தலைவர்கள் ஜனநாயகத்தை குடும்ப அதிகாரமாகவும் ஆட்சிமுறையை தனிப்பட்ட நலன்களுக்கான சாதனமாகவும் மாற்றியதைக் கண்டு சீற்றமடைந்த ஒரு தலைமுறையின் முழக்கம் நேபாளத்தை உலுக்கியிருக்கிறது.

நேபாள அரசியல் தலைமைத்துவம் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றத் தவறி விட்டது. 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட புதிய அரசியலமைப்பின் மூலமாக அறிமுகப் படுத்தப்பட்ட கூட்டாட்சி (சமஷ்டி) ஜனநாயக குடியரசின் புதிய அரசியல் முறைமை மக்கள் மத்தியில் பெருமளவு எதிர்பார்ப்புக்களை தோற்றுவித்தது. ஆனால், இறுதியில் மக்கள் அரசியல் உறுதிப்பாடின்மை, மந்தமான பொருளாதார வளர்ச்சி மற்றும் ஊழலையே சந்தித்தார்கள். கடந்த 15 வருட காலப்பகுதியில் நேபாளத்தில் 17 அரசாங்கங்கள் பதவியில் இருந்தன. மாவோவாத ஆயுதக் கிளர்ச்சிக்கு தலைமைதாங்கிய தலைவர்களும் மற்றைய கம்யூனிஸ்ட் தலைவர்களும் கூட பிரதமர்களாக பதவி வகித்திருக்கிறார்கள். ஆனால், அரசியல் தலைவர்களுக்கும் மக்களுக்கும் இடையில் பெரிய வெளி இருந்தது.

முடியாட்சியை முடிவுக்கு கொண்டு வந்த மக்கள் போராட்டங்களுக்கு தலைமை தாங்கிய கம்யூனிஸ்ட் தலைவர்களின் (20ம் பக்ம் பார்க்க)

# வாசலிலே கிரிசாந்தி




யாழ்ப்பாணத்து வெளிகள் யாவும் போர்க்காலத்துப் படை நடவடிக்கைகளோடு தொடர்புடையவை. போர்க்கால வியூகங்களின் ஒரு பகுதியாகக் காணப்பட்டவை. சில சமயம் வெளிகளே கவசங்கள்.சில சமயம் வெளிகளே பொறிகள். ராங்கிகளையும் விமானங்களையும் வைத்திருந்த அரச தரப்பு வெளிகளை எப்பொழுதும் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயற்சிக்கும். ஆனாலும் அது இலகுவானதாக இருந்ததில்லை.

மறைப்பில்லாத வெளிகளில் சிந்தப்பட்ட குருதியை படிந்த சாம்பலை புதைந்த ரவைக் கோதுகளை பருவ மழை கழுவிச் சென்றிருக்கலாம். ஆனால் பெரும்பாலான வெளிகள் போர்க்காலத்தின் நினைவு களால்.காயங்களால், மரணங்களால், புதிர்களால் மர்மங்களால் இன்னமும் வெளியில் வராத ரகசியங்களால் நிரப்பப்பட்டவை. தேற்றப்படவியலாத் தாய்மாரின் துக்கத்தால் கண்ணீரால் நிரப்பப்பட்டவை.

அவற்றுள் ஒன்றுத ான் செம்மணி வெளியும். அதன் ஒருபகுதி பருவ காலக் கடலேரி. பயிர் பச்சை வளராத தரவை. இன்னொருபுறம் வயல்வெளி. நடுவே அனாதை போல செல்லும் கண்டி வீதி. உப்பும் ஊரியும் விளையும் பருவ கால கடலேரியிலிருந்தும் வயல்வெளிகளில் இருந்தும் குடிமனை தொலைவில் உள்ளது. ஒரு குறுகிய இடைவெளிக்குள் இரண்டு சுடுகாடுகளும் ஓர் இடுகாடும் அங்கே உண்டு.

யாழ் நகரத்துக்கும் தென்மராட்சிக்கும் இடையிலான கழுத்துப் பகுதியில் அமைந்திருக்கும் அதன் புவியியல் அமைவிடம் தான் இன்று அது பெற்றிருக்கும் அரசியல் கவனக் குவிப்புக்குக் காரணம். யாழ் நகரப் பகுதியின் ஏறக்குறைய தலைவாசல் பகுதியில் அது அமைந்திருக்கிறது. நகரத்தின் நுழைவாயில் என்பதனால் அதற்கு ஒரு கேந்திர முக்கியத்துவம் உண்டு.எனவே யாழ் நகரப் பகுதியின் கழுத்தை இறுக்கும் ஆக்கிரமிப்பாளர்கள் அங்கே சோதனைச் சாவடிகளைப் பேணுவார்கள். அதன் அமைவிடம் காரணமாக செம்மணி வெளிக்கு ஒரு படைத் துறைக் கேந்திர முக்கியத்துவம் உண்டு.

அது மட்டுமல்ல அது பெருமளவுக்கு ஆளரவம் குறைந்த ஒரு வெளி. ஊரடங்குச் சட்டத்தின் மூலம் கண்டி வீதியில் போக்குவரத்தை நிறுத்தினால் அங்கே பார்வையாளர்கள் சாட்சிகள் இருக்க மாட்டார்கள். இது தான் அது பின்னர் புதை குழியாக மாற ஒரு காரணம்.

கிருஷாந்திக்கு முன்பு வரை செம்மணி ஒரு புவியியல் பதம். கிருஷாந்திக்கு பிறகு அது ஓர் அரசியல் பதம். முள்ளிவாய்க்காலைப் போல. அங்குள்ள வயல்வெளிகளில் விளைந்த ஒரு நெல்லினத்தின் பெயர் தான் செம்மணி என்று ஒரு தகவல் உண்டு. இப்பொழுது பாவனையில் இல்லாத ஒரு நெல் இனம் விளைந்த வெளியில் போர்க்காலத்தில் சா விளைந்தது .

செம்மணிக்குள் தமிழர்கள் புதைக்கப்பட்டார்கள் என்ற தகவலை முதலில் வெளியே சொன்னது. அரச படைத் தரப்பைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் சோமரத்ன தான். கிருஷாந்தி குமாரசுவாமியின் வழக்கில் தன் மேலதிகாரிகள் தன்னைப் பலியிட்டு விட்டார்கள் என்ற கோபத்தில் அவர் தான் சார்ந்த படைக் கட்டமைப்பைக் காட்டிக் கொடுத்தார். அங்கிருந்து தான் செம்மணிக்குள் நூற்றுக் கணக்கானவர்கள் புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற ரகசியம் வெளியே வந்தது. அதை இன்னொரு விதமாகச் சொன்னால் அமைதியுறாத கிருஷாந்தியின் ஆன்மா புதைக்கப்பட்ட உண்மையை வெளியே கொண்டு வந்தது என்றும் சொல்லலாம்.

அது திருமதி சந்திரிக்காவின் ஆட்சிக் காலம். சமாதான தேவதையாக வேடம் பூண்டு அவர் ஆட்சிக்கு வந்தார். அவருடைய ஆட்சி காலத்தில்தான் குடா நாட்டுக்கான சமரில் படைத் தரப்பு முதல் குறிப்பிட்டுச் செல்லக் கூடிய வெற்றியைப் பெற்றது. அந்த வெற்றியை சந்திரிகாவின் மாமனார் ரத்வத்த தங்கத்தட்டில் வைத்து சந்திரிகாவுக்கு பரிசளித்தார்.

அதாவது வேறொரு நாட்டை வெற்றி கொண்டு அந்த வெற்றிச் செய்தியை பரிசளிப்பதைப் போல. மாமனும் மருமகளும் அதனை வெற்றியாகக் கொண்டாடியிருக்கலாம். ஆனால் அந்த வெற்றிப் பிரகடன நிகழ்வானது ஒரு விதத்தில் உபயோகபூர்வமாக இந்த சிறிய தீவில் இரண்டு நாடுகள் இருக்கின்றது என்பதனை ஒப்புக் கொண்டது.

வெற்றி கொள்ளப்பட்ட யாழ்ப்பாணத்தை சந்திரிக்கா அமைதி நகரம் என்று பெயரிட்டார். ஆனால் அது அமைதி நகரமாக இருக்கவில்லை. அந்த வெற்றி முழுமையற்றது என்பதனை விடுதலைப்புலிகள் இயக்கம் பின்னர் நிரூபித்தது. தொடர்ச்சியாக படைத் தரப்பின் மீது தாக்குதல்கள் அதிகரித்த பொழுது அவற்றை எதிர் கொள்ள முடியாத சந்திரிகாவின் அரசாங்கம் பொதுமக்களை பழிவாங்க தொடங்கியது. கைது மற்றும் காணாமல் போதல்கள் தொடங்கின. இவ்வாறு காணாமல் போனவர்களைப் புதைத்த இடங்களில் ஒன்றாகவே செம்மணி இப்பொழுது பார்க்கப்படுகிறது.

அதை வெளியே கொண்டு வந்தது கிருஷாந்தியின் வழக்கு. கிருஷாந்தி படித்தது யாழ்ப்பாணத்தின் முன்னணி புரொடஸ்தாந்து மகளிர் கல்லூரியில். அவர் படித்த நடுத்தர வர்க்கக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய உறவினர்கள் செல்வாக்கு மிக்க பொறுப்புகளில் இருந்தார்கள். எனவே அவருடைய விவகாரம் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டதற்கு அவருடைய குடும்பப் பின்னணி ஒரு காரணம். அதை விட சந்திரிக்கா தன்னை சமாதான தேவதையாக நிரூபிப்பதற்கு. குறிப்பாக உள்நாட்டு நீதியின் நம்பகத் தன்மையை வெளியுலகத்துக்கு நிரூபிப்பதற்கு கிரிசாந்தியின் வழக்கில் சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிக்க வேண்டிய ஒரு நிரப்பந்தம் இருந்தது.

அவ்வாறு தண்டிக்கப்பட்ட சோமரட்ன, அரசாங்கத்துக்கு எதிராக வழங்கிய வாக்குமூலத்தில் இருந்து தான் செம்மணிக்குள் மனிதப் புதைகுழி இருப்பது தெரியவந்தது. எனவே செம்மணி முதலில் வெளிவந்ததற்கு காரணம் கிருஷாந்தியின் வழக்கு. அதில் துணிந்து போராடிய அவருடைய உறவினர்கள் அரசியல்வாதிகள். இப்படிப் பார்த்தால் செம்மணிக்குள் புதைகுழி இருப்பதை முதலில் வெளியே கொண்டு வந்தது அவர்களுடைய உழைப்புத் தான். இது முதலாவது சந்தர்ப்பம்.

இரண்டாவது சந்தர்ப்பமும் எதிர்பாராமல் கிடைத்தது சித்துப்பாத்தி மயானத்தில் மின் தகன மேடை அமைப்பதற்காக நிலத்தை அகழ்ந்த பொழுது எலும்புக்கூடுகள் வெளிப்பட்டன. 29 ஆண்டுகளாக புதைக்கப்பட்டிருந்த உண்மை மீண்டும் வெளிவர தொடங்கியுள்ளது. எனவே தொகுத்துப் பார்த்தால் செம்மணி ஒரு புதைகுழி மட்டுமல்ல. தமிழ் அரசியலில் புதிய வாய்ப்புகளைத் திறக்கும் ஓர் அரசியல் வெளியாகவும் காணப்படுகிறது.

தனக்கு மட்டுமல்ல தன்னோடு சேர்த்து புதைக்கப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல, தமிழ் மக்களுக்குமான நீதியைத் தேடி கிருஷாந்தியின் ஆன்மா அமைதியுறாது அந்த வெளியெங்கும் அலைந்து திரிகிறது.

96ஆம் ஆண்டு நான் எழுதிய கவிதையில் அவளை அமைதி நகரின் மணம்பேரி என்று அழைத்தேன். மணம்பேரி ஒரு சிங்கள அழகு ராணி. கதிர்காமத்து அழகி. அவருக்கு ஜேவிபியோடு தொடர்பு இருந்தது. ஜேவிபியின் முதலாவது போராட்டத்தின் போது அவர் கைது செய்யப்பட்டு பாலியல் ரீதியாகச் சிதைக்கப்பட்டு குறை உயிரோடு எரிக்கப்பட்டார். அது இலங்கைத் தீவின் முதலாவது பெண் பிரதமராகிய சிறீமாவோ பண்டாரநாயக்காவின் காலம்.

அழகு ராணி மணம்பேரியின் குரூரமான சாவை அடுத்த தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன சிறீமாவோவுக்கு எதிரான பிரச்சாரத்தில் பயன்படுத்தினார். பிரச்சார மேடைகளில் மணம் பேரியின் ஆவி மீண்டும் மீண்டும் எழுப்பப் பட்டது. அது சிறீமாவுக்கு எதிராகத் திருப்பப்பட்டது. சிறீமாவோ தோற்கடிக்கப்பட்டார். சிறிமாவோவின் மகள் சந்திரிகாவின் காலத்தில் கிருஷாந்தி சிதைக்கப்பட்டு கொன்று புதைக்கப் பட்டார். மணம்பேரியைப் போலவே கிருஷாந்தியும் இலங்கைத்தீவின் அரசியலில் புதிய சாத்திய வழிகளைத் திறந்து விட்டுள்ளார்.

இத்தொகுப்பில் உள்ள பெரும்பாலான கவிதைகள் அவற்றின் அரசியல் உள்ளடக்கம் காரணமாகவே சேகரிக் கப்பட்டவை. இங்கு அரசியல் உள்ளடக்கத்துக்குத் தான் முதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கவிதைகளின் அழகியல் பெறுமதிக்கு அல்ல. இதில் பல கவிதைகள் கவிதைகளாக முழுமையுறாதவை. அந்த அடிப்படையில் பார்த்தால் இத் தொகுப்பு ஓர் அரசியல் ஆவணமாகவே முக்கியத்துவம் பெறுகிறது. அதன் அழகியல் பெறுமதியைத் தனியாக ஆராயப்பட வேண்டும்.

கிருஷாந்தி கொல்லப்பட்ட பின் முதலாவது செம்மணித் தொகுப்பு 1998 இல் வெளிவந்தது. இப்பொழுது இரண்டாவது தொகுப்பு 27 ஆண்டுகளின் பின் வெளி வருகின்றது.



இங்குள்ள தொடர்ச்சி என்னவென்றால், 29 ஆண்டுகளுக்குப் பின்னரும் அமைதியுறாத கிரிசாந்தியின் ஆன்மா மீண்டும் மீண்டும் செம்மணியை ஒரு பாடு பொருளாக வைத்திருக்கிறது.

செம்மணி வெளி மீண்டும் மீண்டும் தமிழ் அரசியலில் புதிய வாய்ப்புகளைத் திறந்து கொண்டேயிருக்கிறது. சிதைத்துக் கொல்லப்பட்ட கிரிசாந்தியின் அமைதியுறாத ஆன்மா அவளைக் கொன்றவர்களை விடாது துரத்திக் கொண்டேயிருக்கிறது.

வாசலில் நிற்கிறாள் கிருஷாந்தி. செம்மணி வெளியெலாமாகி கைதடி வெளியெலாமாகி.

செம்மணிப் புதைகுழி தொடர்பாக கடந்த 29ஆண்டுகளில் எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்புக்கு எழுதிய முன்னுரை இது.

**– நிலாந்தன் –**

# நிஷ்டையில் இருக்கும் புத்தரும் நிஷ்டையில் இருக்காத எலும்புக்கூடும்

இலங்கைத்தீவு தேரவாத பௌத்தத்தின் சேமிப்பிடம் என்று கருதப்படுகிறது. இச்சிறு தீவில் பரவலாக புத்தர் சிலைகளை வெவ்வேறு நிலைகளில் காணலாம். இருக்கின்ற, நிற்கின்ற, நிஸ்டையில் இருக்கின்ற, உறங்குகின்ற புத்தர் சிலைகள். இவ்வாறு நிஸ்டையில் இருக்கின்ற புத்தருடைய சிலைகளை வழிபடும் ஒரு நாட்டில் நிஸ்டையில் இருப்பதுபோன்ற தோற்றத்தைக் கொண்ட ஒரு எலும்புக்கூடு அண்மையில் செம்மணியில் அகழ்ந்தெடுக்கப்பட்டது.



அந்த எலும்பு கூட்டோடு காணப்பட்ட ஏனைய எலும்புக்கூடுகளில் இருந்து அதன் தலை சற்று தூக்கலாக மேலே தெரிந்தது என்றும் அதன் வாய் வழமைக்கு மாறாக கெழித்துப் போய்க் காணப்பட்டது என்றும் ஊடகவியலாளர்கள் கூறுகிறார்கள். அந்த எலும்புக்கூடு நிஸ்டையில் இருப்பது போன்ற ஒரு தோற்றத்தை தருவதனால் அதற்கு ஏதும் மத அல்லது ஆன்மீகப் பரிமாணம் இருக்கக் கூடுமா என்று சட்ட மருத்துவ அதிகாரி சந்தேகித்த காரணத்தால் யாழ்.பல்கலைக் கழகத்தின் இந்து நாகரிக துறையைச் சேர்ந்த விரிவுரையாளர் ஒருவர் செம்மணிக்கு அழைக்கப்பட்டார். அந்த எலும்பு கூட்டுக்கு ஆன்மீகப் பரிமாணம் எதுவும் இல்லை என்று கூறப்படுகிறது.

தேரவாத பௌத்தத்தின் ஒரே சேமிப்பிடம் என்று கூறிக் கொள்ளும் ஒரு நாட்டில் ஒரு புதை குழிக்குள் அப்படி ஒரு எலும்புக்கூடு. இச்சிறிய தீவை ஆட்சி செய்த சிங்கள பௌத்த ஆட்சியாளர்கள் மெய்யாகவே புத்த பகவானின் உபதேசங்களைப் பின்பற்றி நடந்திருந்தால் அப்படி எலும்புக் கூட்டை வைத்து ஆராய்ச்சி செய்ய வேண்டி வந்திருக்காது.

அந்த எலும்புக்கூடு அகழ்ந்து எடுக்கப்பட்ட கொஞ்ச நாட்களுக்குப் பின்,செம்மணிப் புதை குழியிலிருந்து நடந்து போகும் தூரத்தில் செம்மணி வளைவில், கடந்த ஏழாந் திகதி கிருசாந்தி நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டது. அங்கே செம்மணி தொடர்பாக வெளிவந்த கவிதைகளின் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வில் கிருசாந்தியோடு கொன்று புதைக்கப்பட்ட அவருடைய சகோதரர் பிரணவனின் நண்பர் ஒருவர் உரையாற்றினார். அவர் கிருசாந்தியின் தாயாருடைய இளைய சகோதரியின் மகளுடைய கணவர் ஆகும். கொல்லப்பட்ட பிரணவனின் வயதுக்காரராகிய அவர் தனது உரையில் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

கிருசாந்தியின் மூத்த சகோதரி இப்பொழுது புலம் பெயர்ந்து வாழ்கிறார். தனது குடும்பத்தவர்கள் சம்பந்தப்பட்ட நினைவு நிகழ்வுகளில் பங்கு பற்றுவதற்கு அவர் தயாரில்லை என்று கூறப்படுகிறது. 29 ஆண்டுகளுக்கு முன்பு தனது குடும்பத்துக்கு நடந்த கொடுமையை இரைமீட்டக் கூடிய நிகழ்வுகளில் கலந்து கொள்வதை அவர் விரும்பவில்லையாம். ஊருக்கு வந்து தாங்கள் வாழ்ந்த வீட்டைப் பார்ப்பதற்கோ தன் குடும்பத்துக்கு நடந்த கொடுமை தொடர்பாக யாரோடும் உரையாடுவதற்கோ அவர் தயாரில்லை என்றும் அங்கே கூறப்பட்டது. 29 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த கொடுமையை நினைவு கூர்வதன் மூலம் அவர் தன் மன நிம்மதியை இழக்கலாம் என்று அஞ்சுவதாகவும் அவர் அந்த கொடுமையான நினைவுகளில் இருந்து இன்னும் விடுபடாதவராகக் காணப்படுவதாகவும் இந்த நாடு தான் வாழ்வதற்குப் பாதுகாப்பான ஓரிடம் அல்ல என்று கருதி அவர் நாட்டை விட்டு வெளியேறி விட்டதாகவும், மீண்டும் இந்த நாட்டுக்குள் வர அவர் விரும்பவில்லையென்றும் அவருடைய உறவினர் செம்மணி வளைவில் உரையாற்றும் போது கூறினார்.

கிருசாந்தி கொல்லப்பட்டு 29 ஆண்டுகளின் பின் அவருடைய சகோதரியின் மனோநிலை அவ்வாறு காணப்படுகிறது. கிரிசாந்தியின் நினைவு நாளுக்கு அடுத்த நாள் அதாவது எட்டாம் திகதி ஜெனிவாவில் ஐநா மனித உரிமைகள் பேரவையின் அறுபதாவது கூட்டத் தொடர் தொடங்கியது. இந்த கூட்டத்தொடர் ஒக்டோபர் மாதம் 08 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக அமைச்சர் விஜித ஹேரத் விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார்.

இந்த 60வது கூட்டத் தொடர் இலங்கைக்கு மிகவும் முக்கியமான ஒன்றாக இருக்கும் என்று இலங்கையின் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளரான சட்டத்தரணி பிரதிபா மஹாநாம ஹேவா கூறியுள்ளார்.

அண்மையில் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். அதன்பின் நிகழும் இந்த ஐநா கூட்டத் தொடரில் அவர் வாசித்தளித்த அறிக்கையில் பிவருமாறு கூறப்பட்டுள்ளது .பல தசாப்தங்களாக ஆதிக்கம் செலுத்தி வந்த வன்முறை மற்றும் தண்டனையின்மை சுழற்சிகளிலிருந்து மீள்வதற்கான வரலாற்றுச் சிறப்பு மிக்க வாய்ப்பை இலங்கை தற்போது பெற்றுள்ளது இந்த அறிக்கைக்கு இலங்கை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ பதில் பின்வருமாறு அமைகிறது.

வெளிப்புற தலையீடுகள், தேசிய ரீதியான முயற்சிகளைத் தடுக்கவும் மக்களை துருவப்படுத்தவும் மட்டுமே உதவும் என்று இலங்கை அவதானித்துள்ளது. எனவே, சர்வதேச நடவடிக்கை தொடர்பாக அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள முடிவுகள் மற்றும் பரிந்துரைகளுடன் இலங்கை அரசாங்கம் உடன்படவில்லை….. இனம், மதம், வர்க்கம் மற்றும் சாதி அடிப்படையில் எந்தப் பிரிவினையோ அல்லது பாகுபாடோ இல்லாமல் அதன் மக்களின் பன்முகத்தன்மையை மதிக்கும் மற்றும் அனுபவிக்கும் ஒரு நாட்டை நோக்கிச் செயல்படுவதற்கான ஆணையை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், அந்த நோக்கத்திற்காக அரசாங்கம் வலுவாகவும் உண்மையாகவும் உறுதி பூண்டுள்ளது…..

இலங்கையில் இனவெறி அல்லது தீவிரவாதம் மீண்டும் எழுவதைத் தடுப்பது அரசாங்கத்தின் முழுமையான உறுதிப்பாடாகும். எனவே, இலங்கை ஒரு உள்நாட்டு பொறிமுறை மூலம் முன்னேறும் போது, சர்வதேச சமூகத்தின் புரிதல் மற்றும் ஆதரவை இலங்கை வரவேற்கின்றது இது தான் அந்த பதிலின் சாராம்சம்.

இலங்கை அரசாங்கத்தின் மேற்கண்ட உத்தியோகபூர்வ பதிலின்படி, வெளிநாட்டு விசாரணையானது நாட்டை துருவமயப்படுத்த உதவும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் நாடு ஏற்கனவே துருவமயப்பட்டுத் தான் உள்ளது.உள்நாட்டு விசாரணையில் நம்பிக்கை இழந்த காரணத்தால்தான் தமிழ் மக்கள் வெளிநாட்டு விசாரணையைக் கேட்கின்றார்கள்.

குறிப்பாக கிருசாந்தி தொடர்பில் ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய அறிக்கையில் இருந்த ஒரு விடயத்தை இங்கு சுட்டிக்காட்டலாம். இலங்கைத் தீவின் வரலாற்றில் கடந்த மூன்று தசாப்த காலத்துக்குள் பாலியல் வன்முறை தொடர்பாக நீதிமன்ற விசாரணைகளின் பின் தண்டனை வழங்கப்பட்ட ஒரு வழக்காக அது குறிப்பிடப்படுகிறது.

அப்பொழுது ஜனாதிபதியாக இருந்த திருமதி சந்திரிகா தன்னை போரால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணாகவும் போரினால் பாதிக்கப்பட்ட எல்லாருடைய பிரதிநிதியாகவும் தன்னை முன்னிறுத்தி ஆட்சிக்கு வந்தார். இப்போது உள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைப் போலவே அப்பொழுதும் சந்திரிகா ஆட்சிக்கு வந்த பொழுது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பகுதியினர் அவரை ஆர்வத்தோடும் எதிர்பார்ப்போடும் பார்த்தார்கள். அந்த ஆர்வம், எதிர்பார்ப்புக் காரணமாக தமிழ்ப் பகுதிகளில் சந்திரிக்கா சீலை சந்திரிக்கா காப்பு என்று சந்திரிகாவின் பேரில் பொருட்கள் விற்கப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதி என்ற தன்னுடைய இமேஜைப் பாதுகாப்பதற்காக சந்திரிக்கா கிருசாந்தியின் வழக்கை அரசியல் தலையீடின்றி முன்னெடுக்க அனுமதித்தார்.

அதேசமயம் கிருசாந்தி யாழ்பாணத்தின் படித்த ஆங்கிலம் பேசும் நடுத்தர வர்க்கக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் கல்வி கற்றது யாழ்ப்பாணத்தின் முன்னணி புரட்டஸ்தாந்து மகளிர் பள்ளிக்கூடம் சமூகப் பலம் மிக்க அவருடைய உறவினர்களும் அவருக்கு தெரிந்தவர்களும் சம்பந்தப்பட்ட சட்டச் செயற்பாட்டாளர்களும் துணிந்து நீதிக்காகப் போராடினார்கள். விளைவாக குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டார்கள். எனினும் தப்பிச்சென்ற ஒரு குற்றவாளி இன்றுவரை தலைமறைவாக உள்ளார்.

இவ்வாறு சந்திரிகா கிருசாந்தியின் வழக்கில் தனது நீதியை நிரூபிக்க முற்பட்டு அதன் விளைவாக கிணறு வெட்டப் பூ தம் கிளம்பியதுபோல அந்த வழக்கில் தண்டிக்கப்பட்ட சோமரட்ன ராஜபக்ஷ என்ற ஒரு ராணுவ லான்ஸ் கோப்ரல் தனது மேலதிகாரிகளுக்கு எதிராக வாக்கு மூலம் வழங்கினார். அந்த வாக்கு மூலம் தான் செம்மணி மனிதப் புதை குழியை வெளியே கொண்டு வந்தது. இப்பொழுதும் அவர் தன் மனைவிக்கூடாக உண்மைகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.அ தில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற விசுவாசமான விருப்பம் இருக்கிறதா? அல்லது தன்னைப் பலியாடாக்கிய உயரதிகாரிகளைப் பழிவாங்க வேண்டும் என்ற விருப்பம் இருக்கிறதா?

ஒரு இராணுவ லான்ஸ் கோப்ரல் இவ்வாறு வெளிப்படுத்தல்களைச் செய்வது சிறீலங்காவில் இதுதான் முதற்தடவை. அவர் வெளிப்படுத்தும் உண்மைகளை உள்நாட்டு நீதியின் மூலம் விசாரித்து, அவர் குறிப்பிடும் படை அதிகாரிகளை நீதியின் முன் நிறுத்தித் தண்டிப்பதற்கு அனுர அரசாங்கம் தயாராக இருக்கிறதா? அல்லது இந்த நாட்டில் இரண்டு நீதிகள் உண்டு என்ற அதே பழைய கசப்பான அனுபவம் தான் தமிழ் மக்களுக்கு மீண்டும் ஒரு தடவை கிடைக்கப் போகிறதா? சந்திரிகா ஆட்சிக்கு வந்த போது அவருடைய பெயரில் சேலை விற்றவர்கள்,காப்பு விற்றவர்களைப் (20ம் பக்கம் பார்க்க)

# ட்ரம்பின் உத்தியை இப்போது மோடி கையில் எடுத்துள்ளாரா?

(16ம் பககத் தொடர்ச்சி) இந்தியாவின் தன்னாதிக்கத்துக்கும் மோடியின் உள்நாட்டு அரசியல் நன்மதிப்புக்கும் ட்ரம்ப் பாதிப்பை ஏற்படுத்தியபோதும் பொறுமையுடன் மோடி நடந்து கொண்டமை இதற்காகத் தான். ஆனால் ரஷ்யாவிடமிருந்து மசகு எண்ணெய் வாங்குவதை நிறுத்துவதற்கான நிபந்தனையே அமெரிக்காவை விட்டு இந்தியாவைத் தூரவிலக வைத்தது எனலாம். ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலையில் மசகு எண்ணெய் வாங்கும் முறை தொடர்பாக உள்நாட்டில் எதிர்க்கட்சிகளால் எதிர்மறையான சில விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் உள்நாட்டு விலையின் உறுதித் தன்மை மற்றும் மீள் ஏற்றுமதி வருமானம் போன்றவற்றால் இந்திய பொருளாதாரம் அதிக நன்மைகளை அதன் மூலம் பெற்று வருகிறது.

ட்ரம்பின் நிபந்தனையை ஏற்று அந்த இறக்குமதியை நிறுத்துவது என்பது பொருளாதாரத்துக்கு மட்டுமன்றி இந்தியாவின் இறையாண்மைக்கும் அது பாதிப்பை ஏற்படுத்தும். இதனைக் கருத்திற் கொண்டது மட்டுமன்றி மாறிவரும் உலகப் பொருளாதார ஒழுங்கும் இந்தியாவின் தற்போதைய உறுதியான எதிர்நிலைப்பாட்டை ஊக்குவித்தது எனலாம்.

இந்தியாவின் இந்த நிலைப்பாடும், அதனை வலுவாக்கும் மோடியின் முன்னெடுப்புகளும், அதற்கு ஆதரவான உலக அபிப்பிராயங்களும் ட்ரம்பை ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளி விட்டதாகவே செய்திகள் தெரிவிக்கின்றன. அது மட்டுமன்றி ட்ரம்பின் வர்த்தக ஆலோசகர் பீற்றர் நவ்றோ உட்பட ட்ரம்ப் தரப்பினர் இந்தியா தொடர்பாகத் தெரிவித்து வரும் தர்க்க ரீதியற்ற மற்றும் தரக் குறைவான கருத்துக்களும் டரம்பின் 'எக்ஸ்' தளப் பதிவுகளும் அத்தரப்பினரின் பதட்ட நிலையைப் பிரதிபலிப்பதாகவே கருத வேண்டியுள்ளது. ட்ரம்பின் இந்தியா தொடர்பான தற்போதைய அணுகுமுறையை அமெரிக்காவின் அரசியல் தலைவர்களும் அரசியல் பொருளாதார ஆய்வாளர்களும் கடுமையாக விமர்சித்து வருவதை அவதானிக்க முடிகிறது. முன்னாள் அமெரிக்க அதிபர் பராக் ஒமாபா, முன்னாள் அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜாக் சுலிவன் போன்றோர் படிப்படியாகக் கட்டி வளர்க்கப்பட்ட அமெரிக்க இந்திய உறவை ட்ரம்ப் தகர்த்து விட்டதாகக் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

குறிப்பாக தமக்கு எதிரான சீனா மற்றும் ரஷ்யாவுடன் அணி சேர்வதைத் தடுத்து அமெரிக்க சார்புநிலையில் வைத்திருப்பதற்கு இதுவரை மேற்கொண்ட அத்தனை முயற்சிகளையும் ட்ரம்ப் ஒரே வார்த்தையில் அழித்து விட்டார் என்று குற்றஞ் சுமத்தப்படுகிறது.

அதேநேரம் உள்நாட்டு வர்த்தக நிறுவனங்கள் சிலவும் உற்பத்தியாளர்களும் கூட ட்ரம்ப்பின் இந்த நடவடிக்கையை எதிர்க்கத் தொடங்கியுள்ளனர். மறுபுறத்தில் அமெரிக்காவின் ஆதரவு அணியான ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் ஐக்கிய இராச்சியம், ஜப்பான் போன்றனவும் இந்தவிடயத்தில் ட்ரம்பிற்கு ஆதரவளிக்காது இந்தியாவுடன் கைகோர்க்கத் தொடங்கி விட்டன.

இந்தியாவுக்கு எதிராக நேட்டோவில் ட்ரம்பினால் முன் வைக்கப்பட்ட முன்மொழிவுகளையும் அதன் உறுப்பு நாடுகள் பலவும் நிராகரித்து விட்டன. டரம்பின் சுங்கத்தீர்வை பலவற்றை சட்டரீதியற்றவை என அமெரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏலவே நிராகரித்த நிலையில் அது உச்ச நீதிமன்றின் முடிவுக்காகக் காத்திருக்கிறது. இந்நிலையில் சுங்கத்தீர்வை, இந்தியாவுடனான நிலைப்பாடு போன்றவற்றில் ட்ரம்ப் தனித்து விடப்பட்ட ஒருவராகவே தென்படுகிறார்.

இந்தியா தொடர்பிலான ட்ரம்பின் நடவடிக்கைக்கு எதிராக மோடியினால் எடுக்கப்பட்ட உறுதியான பதில் நடவடிக்கைகள் ட்ரம்பை கீழிறங்கச் செய்வதற்கான வாய்ப்புகளே தென்படுகின்றன. இந்தியாவையும் அமெரிக்காவையும் சமரசம் செய்யும் நடவடிக்கைகளில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஈடுபட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ட்ரம்ப் தரப்பும் அதற்குப் பச்சைக் கொடி காட்டியுள்ளாகச் சொல்லப்படுகிறது. தற்போதைய நிலையில் ட்ரம்புக்கு வெறுவழி இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாண்டு இறுதிக்குள் இருநாடுகளுகளுக்கும் இடையில் முன்னரைப் போன்று சுமுகமான வர்த்தகப் பரிமாற்றங்கள் இடம்பெறத் தொடங்கும் என எதிர்பார்க்கலாம். ஆனால் இந்நிகழ்வு அமெரிக்காவுக்கு எதிரான அணியை மேலும் வலுப்படுத்தவும், உலக அதிகார மையம் தனியொரு நாட்டிடமிருந்து பல நாடுகளுக்கு (Multipolar) பகிரப்படுவதற்கான புதிய உலக ஒழுங்குமுறையை விரைவு படுத்தவும் வழிவகுக்கும் என்பதை மறுக்க முடியாது.

## மூன்று வருட இடைவெளியில் மூன்று ஆட்சியாளர்களை விரட்டிய தெற்காசிய மக்கள்

(17ம் பக்கத் தொடர்ச்சி) ஆட்சிகளினால் நேபாள மக்களின் அபிலாசைகளை நிறை வேற்ற முடியாமல் போனமையையும் இறுதியில் அவர்களுக்கு எதிராகவே மக்கள் கிளர்ந்தெழுந்து அதிகாரத்தில் இருந்து அவர்களை விரட்டியிருப்பதையும் 'அறகலய' மக்கள் கிளர்ச் சியை தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை மாற்றங்களின் விளைவாக தேர்தல்களில் வெற்றி பெற்று பதவிக்கு வந்த இடதுசாரி இயக்கமான ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கவனத்தில் எடுப்பது அவசியம்.

பங்களாதேஷைப் போன்றே அடுத்த கட்ட அரசியல் செயன் முறைகளை தீர்மானிப்பதில் நேபாளத்தில் இராணுவம் தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கிறது. இளைய தலைமுறையினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இயக்கங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் இராணுவத்துடன் ஜனாதிபதி ராம் சந்திர பவுடேல் நடத்திய நீண்ட பேச்சுவார்த்தைகளுக்கு பிறகு நேபாளத்தின் முன்னாள் பிரதம நீதியரசரான 73 வயதான சுசீலா கார்கி இடைக்கால அரசாங்கத்தின் தலைவராக வெள்ளிக்கிழமை (செப்டெம்பர் 12) பதவியேற்றிருக்கிறார்.

நேபாளத்தின் முதல் பெண் பிரதம நீதியரசரான கார்கி (2016 – 2017) அந்த நாட்டின் நிருவாகத்துக்கு தலைமை தாங்கும் முதல் பெண் என்பதும் குறிப்பிடத்தக்கது. பாராளுமன்றம் உடனடியாக கலைக்கப்பட வேண்டும் என்ற இளைய தலைமுறை இயக்கத்தின் கோரிக்கைக்கு ஜனாதிபதி இணங்கிக் கொண்டதன் பின்னரே கார்கியின் நியமனம் சாத்தியமாகியது. இடைக்கால நிருவாகத்தில் 'ஹமி நேபாள்' இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பங்கேற்க மாட்டார்கள் என்று அறி விக்கப்பட்டிருக்கிறது. இடைக்கால அரசாங்கம் ஆறு மாத காலத்திற்குள் பாராளுமன்ற தேர்தலை நடத்த வேண்டியிருக்கிறது.

முடியாட்சியின் முடிவுக்கு பின்னரான கடந்த சுமார் 20 வருடகால ஜனநாயக பரீட்சார்த்தம் கண்டிருக்கும் தோல்வி நேபாளத்தின் அரசியல் எதிர்காலம் குறித்து குழப்பம் தரும் கேள்விகளை எழுப்புகிறது. தற்போதைய நெருக்கடியை நேபாளத்தின் குழப்பகரமான ஜனநாயக மாற்றத்தின் பரந்த பின்புலத்திலேயே விளங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இரண்டு வெற்றிகரமான மக்கள் போராட்ட இயக்கங்கள் (1990 - 2006) விரிவான அரசியலமைப்பு வரைவுச் செயன்முறை மற்றும் கூட்டாட்சி குடியரசு ஆட்சி. முறை ஆகியவற்றுக்கு பின்னரும் கூட சாதாரண மக்களுக்கு அர்த்தபுஷ்டியான மாற்றத்தை நேபாளம் கொண்டவரவில்லை. இத்தகைய சூழ்நிலையை தங்களுக்கு அனுகூலமாகப் பயன்படுத்துவதற்கு முயற்சிக்கின்ற முடியாட்சிக்கு ஆதரவான சக்திகளும் இருக்கின்றன.


தெற்காசியாவின் மூன்று மக்கள் கிளர்ச்சிகளையும் பொறுத்தவரை, இலங்கையில் மாத்திரமே இடைக்கால அரசாங்கங்கள் நியமிக்கப்படவில்லை. கோட்டாபய நாட்டை விட்டு வெளியேறி சிங்கப்பூரில் இருந்து ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிய பிறகு அரசியலமைப்பு ஏற்பாடுகளின் பிரகாரம் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தினால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். பிறகு 2024 செப்டெம்பரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுராகுமார திசநாயக்க ஜனாதிபதியாக தெரிவானார். 2024 பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டுக்கும் அதிகமான ஆசனங்களை கைப்பற்றியது. ஜனாதிபதியாக திசநாயக்க பதவியேற்று இன்னமும் ஒன்பது நாட்களில் ஒரு வருடம் நிறைவடையப் போகிறது.

பங்களாதேஷில் அடுத்த வருட முற்பகுதியில் பாராளுமன்ற தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. அந்த தேர்தல்கள் அமைதியான அதிகார மாற்றத்துக்கு வழி வகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நேபாளத்தில் தற்போது வெளிக்கிளம்புகின்ற அரசியல் மாற்றுச் சக்திகள் புதிய நெருக்கடியை கையாளுவதற்கு கடைப்பிடிக்கக்கூடிய அணுகுமுறைகளிலேயே அந்த நாட்டின் எதிர்கால அரசியல் திசை மார்க்கம் தங்கியிருக்கிறது. பொதுவில் மக்கள் அரசியல் வர்க்கத்தின் மீது கடுமையான வெறுப்படைந்திருக்கிறார்கள் என்பதையே இந்த தெற்காசியக் கிளர்ச்சிகள் பிரகாசமாக வெளிக்காட்டுகின்றன.

## நிஷ்டையில் இருக்கும் புத்தரும் நிஷ்டையில் இருக்காத எலும்புக்கூடும்

(19ம் பக்கத் தொடர்ச்சி) போலவே இப்பொழுது அனுரவின் காலத்தில் அவரை மாற்றத்தின் குறியீடாகக் காட்டும் தமிழர்கள் உண்டு. அதிலும் யாழ் பல்கலைக் கழகத்தின் அறிவுஜீவிகள் உண்டு. இவர்கள் அனைவரும் அரசாங்கம் மனித உரிமைகள் ஆணையத்துக்கு வழங்கிய பதிலில் கூறப்படுவது போல உள்நாட்டு நீதியானது இனங்களை துருவ மயப்படுத்தாது என்பதனை நிரூபிப்பதற்காக உழைப்பார்களா?


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# இலங்கைப் போரில் பல லட்சம் தமிழர்களைக் காப்பாற்றிய வட்டுவாகல் பாலம் அழிக்கப்படுமா?

இலங்கைத் தமிழர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் அடையாள சின்னமாக காணப்படும் முல்லைத்தீவு - வட்டுவாகல் பாலம் புனரமைக்கப்படுவது தற்போது பேசுப் பொருளாகியுள்ளது.

இறுதிக் கட்ட போரின் போது பல லட்சக்கணக்கான தமிழர்களின் உயிர்களை இந்த பாலம் பாதுகாத்ததாக ஈழத் தமிழர்கள் கூறி வருகின்றனர்.

இன்றைய சூழ்நிலையில் இந்த பாலத்தை திருத்தியமைக்க வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டுள்ளது. ஒரு புறத்திலிருந்து மறுபுறத்திற்கு செல்லும் போது ஒரு வாகனம் மாத்திரமே ஒரு சந்தர்ப்பத்தில் இந்த பாலத்தை கடக்க முடியும்.

அவ்வளவு குறுகிய நிலையில் இந்த பாலம் அமைந்துள்ளதுடன், கடந்த சில வருடங்களாக பாலத்தின் பல இடங்களில் உடைப்புக்களை அவதானிக்க முடிந்தது.

நாளொன்றிற்கு சுமார் 3000 வரையான வாகனங்கள் இந்த பாலத்தை கடந்து செல்கின்றமையினால், இந்த பாலத்தில் புனரமைப்பானது இன்றைய சூழ்நிலையில் அத்தியாவசியமானதாக காணப்படுகின்றது.

இதனை கருத்திற் கொண்டு அரசாங்கத்தினால் இந்த பாலத்தை புதுப்பித்து நிர்மாணிக்க திட்டமிடப்பட்ட பின்னணியில், தமது வரலாற்று சான்றை இல்லாதொழிக்க வேண்டாம் என தமிழர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு நோக்கி செல்லும் பிரதான வீதியில் நந்தி கடலை ஊடறுத்து இந்த வட்டுவாகல் பாலம் அமையப் பெற்றுள்ளது. சுமார் 410 மீட்டர் தூரத்தை இந்த பாலம் கொண்டமைந்துள்ளது.

முல்லைத்தீவு நகரம் மற்றும் புதுகுடியிருப்பு நகரம் ஆகியவற்றை இணைக்கும் பிரதான பாலமாக வட்டுவாகல் பாலம் அமைந்துள்ளது.

மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலம் நீடித்த உள்நாட்டு போர், 2009-ஆம் ஆண்டு மே மாதம் 18-ஆம் தேதி மௌனிக்கப்பட்டது. இறுதி போர் முடிவடைந்த இடமாக இந்த பாலம் அமைந்துள்ள பகுதி வரலாற்றில் இடம்பிடித்துள்ளது.

முல்லைத்தீவு நகர் பகுதி பக்கத்தில் இலங்கை இராணுவத்தினரும், மறுபுறமான புதுகுடியிருப்பு பகுதி பக்கத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளும் நிலைக் கொண்டு இறுதி போரை எதிர்நோக்கியிருந்தனர்.

இந்த நிலையில், புதுகுடியிருப்பு பக்கத்திலேயே தமிழர்கள் நிலைத்திருந்ததுடன், புதுக்குடியிருப்பை அண்மித்துள்ள முள்ளிவாய்க்கால் பகுதியிலேயே இலட்சக்கணக்கான தமிழர்கள் உயிரிழந்தனர் என தமிழர்கள் கூறிவருகின்றனர்.

புதுகுடியிருப்பு மற்றும் முள்ளிவாய்க்கால் பகுதிகளில் விடுதலைப் புலிகள் அமைப்பின் கட்டுப்பாட்டு பகுதியிலிருந்த பொதுமக்கள், தமது உயிரை காப்பாற்றிக் கொள்ளும் நோக்குடன் இந்த வட்டுவாகல் பாலத்தை பயன்படுத்தியே ராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் பிரவேசித்திருந்தனர்.

இவ்வாறு இறுதிப் போரில் பல லட்சக்கணக்கான தமிழர்களின் உயிரை காப்பாற்றுவதற்கு வட்டுவாகல் பாலம் பாரிய உதவிகளை வழங்கியதாக கூறப்படுகின்றது.

உள்நாட்டு போரில் இந்த வட்டுவாகல் பாலம் சேதமடைந்திருந்ததாக அந்த காலப் பகுதியில் அங்கு வாழ்ந்த மக்கள் பிபிசி தமிழிடம் கூறியிருந்தனர். அதேபோன்று, சுனாமியின் போதும் இந்த பாலம் சேதமடைந்திருந்ததாக அவர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உடல், இந்த பாலத்தை அண்மித்த ஒரு பகுதியிலிருந்தே மீட்கப்பட்டிருந்ததாக இராணுவம் அந்த சந்தர்ப்பத்தில் அறிவித்திருந்தது.

தமிழர்களுக்கு இவ்வாறு பல வரலாறுகளை கூறும் பாலம் இந்த உடைக்கப்பட்டு, புது பாலம் அமைக்கப்படும் தருவாயில் உள்ளமை பேசுப் பொருளாக மாறியுள்ளது.



முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு தெரிவான துரைராசா ரவிகரன் நாடாளுமன்றத்தில் விடுத்த கோரிக்கைக்கு அமைய, இந்த பாலம் தொடர்பான அரசாங்கத்தின் கவனம் மீளத் திரும்பியிருந்தது.

இந்த வட்டுவாகல் பாலத்தை நிர்மாணிப்பதற்கு கடந்த அரசாங்கங்கள் நடவடிக்கைகளை எடுத்திருந்த போதிலும், அந்த நடவடிக்கைகள் செயற்பாட்டு ரீதியில் முன்னெடுக்கப்படவில்லை. இந்த நிலையிலேயே, புதிய அரசாங்கத்தின் முயற்சியுடன் வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகளை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கடந்த 2-ஆம் தேதி ஆரம்பித்து வைத்தார்.


வடக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்திருந்த நிலையில், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் விஜயம் மேற்கொண்டு இந்த பாலத்தில் நிர்மாணிப் பணிகளை ஆரம்பித்து வைத்திருந்தார். இந்த பாலத்தின் அபிவிருத்தி பணிகளுக்காக 1.4 பில்லியன் ரூபா அரச நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த திட்டமானது 2027ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2-ஆம் தேதி நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலத்தில் நிர்மாணப் பணிகளுக்கான ஆரம்பகட்ட வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வட்டுவாகல் பழைய பாலத்தை அழிக்காது புதிய பாலம் அமைத்து தரப்படும் என அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிக்கு அமையவே புதிய பாலம் அமைக்கப்பட வேண்டும் என முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியைச் சேர்ந்த நடனலிங்கம் கோரிக்கை விடுக்கின்றார். புதிய பாலம் அமைப்பதற்கு நாங்கள் பல வருடங்கள் முயற்சி செய்தோம். முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றம் சென்ற துரைராசா ரவிகரன் நாடாளுமன்றத்தின் முன்வைத்த கேரிக்கைக்கு அமைய ஜனாதிபதி இந்த வருடம் அந்த நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார். இந்த பாலம் அவ்வாறே நிரந்தரமாக இருக்க வேண்டும். எமது அடையாளத்தை அவ்வாறே விட்டு விட்டு தான், புதிய பாலம் அமைக்க வேண்டும். 300 மீட்டர் தூரத்தில் குறுக்கே ஒரு பாலம் செல்லும் என்றும், பழைய பாலம் அவ்வாறே இருக்கும் என்றும் தான் எங்களுக்கு சொல்லப் பட்டது.

மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்திலும் பழைய பாலம் அழிக்கப்படாது என கூறினார்கள். பாலத்தை உடைக்காது பார்த்துக் கொள்ள வேண்டும். எங்களுக்கு சொன்ன வாக்குறுதிகளை அவர்கள் நிறைவேற்ற வேண்டும். எமக்கு சொன்ன உறுதிமொழிக்கு அமைய தான் அவர்கள் செய்வார்கள் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.'' என அன்னலிங்கம் நடனலிங்கம் தெரிவிக்கின்றார்.



புதிய பாலம் அமைப்பதற்கு எதிர்ப்பு இல்லை என்ற போதிலும், வரலாற்றை அழிக்காத வகையில் பழைய பாலம் பாதுகாக்கப்பட வேண்டும் என முல்லைத்தீவைச் சேர்ந்த செல்லையா யோகேந்திரராசா பிபிசி தமிழுக்கு தெரிவிக்கின்றார்.

'வட்டுவாகல் பாலத்தை நிர்மாணிப்பதை நாங்கள் நூறு வீதம் வரவேற்கின்றோம். அது எங்களுக்கு தேவையான ஒரு பாலம். பல ஆயிரக்கணக்கான மக்கள் நாளாந்தம் பயணம் செய்கின்றார்கள். இந்த பாலத்தில் நிறைய வரலாறு பொறிக்கப்பட்டிருக்கின்றது. பாலத்தை முழுமையாக உடைப்பதற்கு எங்களுடைய மக்களுக்கு விருப்பம் இல்லை. புதிய பாலம் செய்வதற்கு எதிர்ப்பு இல்லை. ஆனால், பழைய பாலம் பாதுகாக்கப்பட வேண்டும் என குறிப்பிடுகின்றார்.

தமிழர்களின் அடையாளமாக விளங்கும் வட்டுவாகல் பாலத்தை இல்லாது செய்து, புதிய பாலத்தை அமைக்க இடமளிக்க மாட்டோம் என இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழு உறுப்பினர் அன்டனி ஜெகநாதன் பீட்டர் இளஞ்செழியன் தெரிவிக்கின்றார்.

பழைய பாலம் அவ்வாறே பாதுகாக்கப்பட்டு, அதனை அண்மித்து புதிய பாலம் அமைக்கப்பட வேண்டும் எனவும், தமிழர்களின் வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

வட்டுவாகல் பாலம் என்பது 75 வருடங்களுக்கு மேலாக வரலாற்றை கொண்ட பாலம். இறுதி போரில் எல்லா மக்களும் அதனூடாக சென்ற பாலம். இறுதி போருக்கு அடையாளமாக, எச்சமாக இருக்கும் ஒரே ஒரு இடம் அந்தபாலம் மட்டும் தான்.


அபிவிருத்தி என்ற போர்வையில் அடையாளங்கள் இல்லாது செய்யப் பட்டுள்ளது. இந்த வட்டுவாகல் பாலம் கடைசி போரில் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையின் ஆதாரமாக பார்க்கின்றோம்.

இப்போதுள்ள பாலத்தை பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல வேண்டிய கட்டாயம் எமக்கு இருக்கின்றது. பழைய பாலம் உடைக்கப்பட்டு, புதிய பாலம் அமைக்கப்பட்டால் தமிழ் மக்களுக்கு நடந்தேறிய அநீதிகளுக்கு அடையாளம் இல்லாது போய்விடும். இருக்கின்ற பாலத்தை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்கப்படுமாயின், அதனை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம். அதை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம்.'' என இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழு உறுப்பினர் அன்டனி ஜெகநாதன் பீட்டர் இளஞ்செழியன் கூறுகின்றார்.


ஈழத் தமிழர்களின் அடையாளமாக விளங்கும் வட்டுவாகல் பாலம் முழுமையாக உடைத்து அகற்றப்படாது என நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பிபிசி தமிழுக்கு தெரிவித்தார். புதிய பாலம் நிர்மாணிக்கப்படும் சந்தர்ப்பத்தில், பழைய பாலத்தின் ஒரு பகுதி மாத்திரம்

(22ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! சுப நிகழ்ச்சிகளில் இருந்து வந்த தடை நீங்கும். மனசோர்வு அகலும். மன அமைதி பாதிக்கும் படியான சூழ்நிலை ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் அதிக லாபம் பெறுவர். அலுவலக வேலைகளால் அலைச்சல் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்களால் வீண் டென்ஷன் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி செயல்படுவது நன்மை தரும்.





ரிஸபராசி அன்பர்களே! மனத் துணிவு உண்டாகும். எந்த ஒரு காரியத்தையும் துணிவுடன் செய்து அதிக நன்மை அடைவீர்கள். போட்டி பந்தயங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். உறவினர்களுடன் பேசும் போது நிதானத்தை கடைப் பிடிப்பது நல்லது. புரட்டாதி சனிக்கிழமைகளில் சனிபகவானுக்கு தீபம் ஏற்றி வழிபடவும்.





மிதுனராசி அன்பர்களே! முன்பு தடைபட்ட காரியங்கள் எவ்வித இடையூறுமின்றி நடந்து முடியும். வெளியூர் பயணங்கள் உண்டாகும். அதனால் நன்மையும் ஏற்படும். வழக்குகளில் இருந்து வந்த சோதனைகள் மாறும். சொத்து சம்பந்தமான விஷயங்களில் இருந்து வந்த தடைகள் அகலும். நண்பர்கள் பல விதங்களிலும் ஆதரவாக இருப்பர். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் குறையும். கணவன் மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும்.





கடகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக நடந்து முடியும்.தொழில் வியாபாரத்தில் கூடுதல் அலைச்சல் இருந்தாலும் முடிவில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். கணவன், மனைவி பிரச்னைகளை நிதானமாக பேசுவது நல்லது.





சிம்மராசி அன்பர்களே! எதிர்பாராத நல்ல திருப்பம் உண்டாகும். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காணபர்.




கன்னிராசி அன்பர்களே! எதிர்பாராத நல்ல திருப்பம் உண்டாகும். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர். நிலுவையில் உள்ள தொகை வந்து சேரும். கணவன், மனைவி உறவு மகிழ்ச்சிகரமாக இருக்கும்.




துலாம்ராசி அன்பர்களே! நினைத்த காரியத்தை செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள். தொழில் வியாபாரத்தில் ஏற்படும் பணதேவையை சரிகட்ட நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான வேலைகளில் அலைச்சல் இருக்கும். மேலிடத்திலிருந்து கனிவான உபசரிப்பு கிடைக்கும். குடும்பத்தில் அனுகூலமான பலன்கள் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே பழைய விஷயங்களை பேசாமல் இருப்பதன் மூலம் ஒற்றுமை இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கி எதிலும் உற்சாகம் உண்டாகும். மனமகிழ்ச்சிக்காக பணம் செலவு செய்ய தயங்க மாட்டீர்கள். நண்பர்கள் சேர்க்கையும் அவர்களால் உதவியும் கிடைக்கும். வாக்கு வன்மை அதிகரிக்கும். வியாபாரம் தொடர்பான வெளியூர் பயணங்கள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் பொறுப்புகள் கூடும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வும் கிடைக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.








தனுசுராசி அன்பர்களே! எந்த ஒரு காரியம் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுப்பீர்கள். வெளியூரில் இருந்து வரும் கடிதங்கள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். தொழில், வியாபாரத்தில் புதிய உத்வேகம் பிறக்கும். தொழில் தொடர்பான விவகாரங்களில் இருந்து வந்த வீண் இடையூறுகள் ஏற்பட்டு நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் மூலம் அனுகூலம் ஏற்படும். புதிய வேலையில் சேர்ந்தவர்களுக்கு பதவி உயர்வு வரும்.




மகரராசி அன்பர்களே! எடுத்த காரியம் கைகூடும். கடன் விவகாரங்களில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். வழக்குகளில் இருந்து வந்த தொய்வு நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். பயணங்கள் மூலம் லாபம் கிடைக்கலாம். மேலதிகாரிகளால் உத்யோகஸ்தர்களுக்கு நன்மை உண்டாகும். சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பர். வாழ்க்கை துணை மூலம் ஆதாயம் கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எதிர்பாராத சுபச்செலவுகள் ஏற்படும். எதிர்ப்புகள் நீங்கும். கவலையை விட்டு விட்டு தொழில் வியாபாரத்தில் கவனம் செலுத்துவது நல்லது. உத்யோகஸ்தர்களுக்கு வெளியூர் மாற்றங்கள் உண்டாகலாம். சக ஊழியர்களிடம் பேசும் போது கோபப்படாமல் இருப்பது நன்மை தரும். குடும்ப உறுப்பினர்களிடம் இருந்த மனத்தாங்கல் நீங்கி மகிழ்ச்சியும், சகஜ நிலையும் காணப்படும்.




மீனராசி அன்பர்களே! வரவை போலவே செலவும் இருக்கும். பயணங்களால் அலைச்சலும், எதிர்பாராத பொருள் இழப்பும் இருக்கும். எனவே கவனமாக இருப்பது நல்லது. திடீர் கவலை ஏற்பட்டு நீங்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் முன்னேற்றம் காண்பர். வியாபாரம் தொடர்பான முயற்சி வீண் முயற்சியாக இருந்தாலும் பின்னாளில் அதற்கான பலன் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் வேலை சுமை இருக்கும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# இலங்கைப் போரில் பல லட்சம்....

(21ம் பக்கத் தொடர்ச்சி) சேதப்படுத்தப்படும் எனவும், பழைய வட்டுவாகல் பாலம் தமிழர்களின் அடையாள சின்னமாக பாதுகாக்கப்படும் எனவும் அரசாங்கம் உறுதி வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

"பழைய பாலத்தை முற்று முழுதாக உடைத்து விட்டு புதிய பாலம் நிர்மாணிக்கப்படவுள்ளதாக ஒரு கருத்து நிலவியது. முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் இந்த புதிய பாலம் இவ்வாறு தான் நிர்மாணிக்கப்படுகின்றது என வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நேரடியாக விளக்கங்கள் வழங்கப்பட்டன. அந்த கூட்டத்திலேயே நான் மறுத்திருந்தேன். பழைய யாழ்ப்பாண நூலகம் இப்படி தான் இருந்தது என்பதை எமது புதிய சந்ததியினருக்கு காட்டக் கூடியதாக இல்லை' என்று அவர் கூறினார்.

மேலும், புதிய நூலகம் தான் இருக்கின்றது. பழைய நூலகத்தின் அடையாளங்களோ எச்சங்களோ இல்லாது போயுள்ளன. இப்படியான உதாரணங்களை சொல்லி காட்டி வட்டுவாகல் பாலம் பாதுகாக்கப்பட வேண்டும் என கூறியிருந்தேன். வட்டுவாகல் பாலத்தின் ஒரு பகுதியாவது இருக்க வேண்டும் என்பதை ஆணித்தனமாக அன்றைய தினமே கூறியிருந்தேன். அதை ஏற்றுக் கொண்டார்கள். ஒரு பகுதி மாத்திரம் இந்த பாலத்தில் இருக்கும். குறிப்பிட்ட சில இடங்களில் புதிய பாலம் அமைக்கும் போது இடையில் அழிக்க வேண்டி வரும். அந்த பாலம் நிச்சயம் இருக்கும் என்பதை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் குறிப்பிட்டனர். பிரதி அமைச்சர், மாவட்ட செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் போது விளக்க படங்களும் காண்பித்து இந்த கருத்து சொல்லப்பட்டது. தனிப்பட்ட ரீதியிலும் என்னிடம் உறுதி வழங்கப்பட்டது. சபையிலும் உறுதி வழங்கப்பட்டது" என நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவிக்கின்றார்.

இந்த விடயம் தொடர்பில் பிபிசி தமிழ், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரை தொடர்புக் கொள்ள பல முறை முயற்சி செய்த போதிலும், அவரிடம் இருந்து பதில் பெற முடியவில்லை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளிடம் விடயம் தொடர்பில் வினவிய போது, அது குறித்து தலைவருடன் பேச வேண்டும் என பதில் வழங்கி இருந்தார்கள். நன்றி:- பிபிசி

# ஜனாதிபதிகள் சலுகை நீக்கம்...

(9ம் பக்கத் தொடர்ச்சி) உறுப்பினர்களோடு தாம் அமைச்சராகவிருந்த காலத்தை நினைவிருத்தி சிலவேளை கருணை அடிப்படையில் சந்திரிகாவுக்கு தவணை வழங்க அநுர குமர விரும்பலாம். அரசியல் என்றால் இது தானே.

மற்றைய முன்னாள் ஜனாதிபதிகள் புதிய சலுகைகள் நீக்க சட்டத்தை ஏற்று தங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டாலும், மகிந்தவால் மட்டும் அது முடியவில்லை. தமது மகன் நாமலுக்கு ஜனாதிபதி மகுடம் சூட்டுவதையே இலக்காகக் கொண்டு தமது இயலாமையையும் மறந்து அரசியலில் தொடர விரும்புகிறார். இதன் முதல் அங்கமாக தமக்கு இழைக்கப்பட்டதை அரசியல் பயங்கரவாதம் என்று நாமம் சூட்டியுள்ளார்.

புலிப் பயங்கரவாதத்தை முடித்து வைத்த தங்கள் தலைவர் மீது அரசியல் பயங்கரவாதம் ஏவப்பட்டுள்ளது என்று இவரது பெரமுனகாரர்கள் கோசம் எழுப்பத் தொடங்கியுள்ளனர். இதற்குப் பதிலளித்துள்ள பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால அரசாங்கத்தின் செயற்பாட்டினை அரசியல் கலாசார மாற்றம் என்று விளக்கமளித்துள்ளார்.

நாமல் ராஜபக்சவின் எதிர்கால உயர்ச்சியை மையப்படுத்தி மகிந்த ராஜபக்ச அறிவித்துள்ள அரசியல் பயங்கரவாதமும், இதனை மறுதலிக்கும் வகையிலான அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ள அரசியல் கலாசார மாற்றமும், சில வருடங்களுக்கு தொடரப்பே பாவதாக எதிர்பார்க்கப்படும் ஒற்றை ஆட்சி முறையைத் தீர்மானிக்கும் கருக்களாக அமையக்கூடும்.

# பூகோள அரசியல் வலையில் இலங்கை....

(14ம் க்கத் தொடர்ச்சி) படத்தை வைத்திருப்பவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இத்தனைக்கு மத்தியிலும் பிரதமர் ஒருவரை கடுமையாக சாடியுள்ள ஒருவர் எப்படி தனி நபராக இருக்கமுடியும். அவருக்கு பின்னால் ஒரு மறைகரம் இருக்கிறது என்றே கொள்ளவேண்டும்.

பிரதமர் சுதந்திரமாக தனது கருத்தை சொல்ல முடியாத நிலையில் இருக்கிறார். அண்மையில் அரசாங்க தரப்பு பெண் உறுப்பினர் ஒருவரை எதிர்க்கட்சி ஆண் உறுப்பினர் ஒருவர் அவமானப் படுத்தியதாக பாராளுமன்றத்தில் பெண்களுக்காக குரல் கொடுத்த ஹருணி. எதிர்க்கட்சி பெண் உறுப்பினர் ஒருவருக்கு எதிராக அரசாங்க ஆண் உறுப்பினர் ஒருவர் அவமானப்படுத்தி பேசிய போதும், சபையில் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார். இங்கு அரசாங்க தரப்பு பெண்ணை பெண்ணாகவும், எதிர்தரப்பு பெண்ணை ஆணாகவும் பார்க்கிறாரா அவர்?

ஜே.வி.யை. விடவும் ஹருணியிடம் மக்கள் மத்தியில் நிறைய எதிர்பார்ப்புகள் உண்டு. அவர் விவகாரங்களை ஒரு கட்சி அரசியல்வாதிக்கு அப்பால் நேர்மையாக கையாள்வார் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஆனால் அதை செய்தால் அவரின் பதவி நாட்கள் விரைவாக எண்ணப்படும். அதற்காக ஜே.வி.பி. அரசியலை மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் அவர் கடந்து சென்று ரில்வின் சில்வா அதிகார மையத்தை திருப்திப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

இந்திய உளவாளியாகவும், அரசியல் நிர்வாக இயலாமையாகவும் அவரை காட்டும் முயற்சி என்.பி.பி. அரசாங்கத்திற்கு பின்னடைவுகளையே ஏற்படுத்தும். இது ஜே.வி.பி. பலப்படுத்தாது. இந்த இரு தரப்பு இடைவெளி வெளிச்சக்திகள் இலகுவாக உள்நுழையவே வழிவகுக்கும். அது இப்போதே ஆரம்பித்து விட்டது. காலம் பதில் சொல்லும்....

என்றும் நினைவில் கொள்!

மனிதனாகப் பிறந்தவன் பயனின்றி அழியக் கூடாது

- காரல் மார்க்ஸ் -


THIRUKKURAL INTERNATIONAL CONFERENCE
6வது அனைத்துலகத் திருக்குறள் மாநாடு
INTERNATIONAL THIRUKKURAL CONFERENCE
கனடாவின் பிரபல இசை ஆசிரியர்களின்
நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள்
இணைந்து வழங்கும்
இசைத் தமிழ்
01. Sangeetha Poosanam Pon Sundaralingam
02. Sangeetha Vidwan Smt.Parasakthy Vinayagathevarajah
03. Sangeetha Kalavithahar Smt. Lasanthi Rajkumar
04. Smt .Aathirai Sivapalan Roshan
05. Isaikalaimani Smt. Tharmini Thishyan
06. Isai Muthukalamani Smt. Mathumathy Sivakumaran
07. Isai Muthukalaimaani Smt Jeyanthy Lepagaran
08. Yuva Kala Vipanchee Vaaraki Wijayaraj
09. Isai muthukalaimaani Smt Ratneswary kunapalan
10. Shri Vasuthevan Rajalingam
Saturday
20 SEPT
@
6.30PM
UNIVERSITY OF TORONTO
HIGHLAND HALL
1265 MILITARY TRAIL
SCARBOROUGH
ENTRANCE FREE
EEKAI
UNIVERSITY OF TORONTO
for more information
+1 (416) 707 9104
https://internationalthirukkuralconference.org







# தெருச்சண்டியர் போல் நடக்கும் கஜேந்திரகுமாரின் தமிழ்க்காங்கிரஸ்! விடுதலைப்புலிகளின் அதிமூத்த முன்னாள் தளபதி மனோகர் வேதனை

தியாக தீபம் திலீபனின் ஈகத்தின் பெறுமதியினையோ தமிழ்த் தேசியம் என்ற விடயத்தினையோ விளங்கிக் கொள்ளாமல் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் கோமாளிக் கூத்துகளை நடாத்துவதையும் எமது போராட்டத்தினை புரிந்து கொள்ளாமல் ஒட்டுமொத்த தமிழினத்தையும் தலை குனியும் வகையில் தெருச் சண்டியர்கள் போல் நடந்து கொள்வதையும் சகிக்க முடியாமலுள்ளது என முன்னாள் மூத்த போராளி மு.மனோகர் (காக்கா)தெரிவித்துள்ளார்.

18 செப்டம்பர் 2025 யாழ்.ஊடக அமையத்தில் நடாத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாற்றுக் கருத்துடையோருக்கு அஞ்சலி செலுத்துவதும் இறுதிச் சடங்கு போன்றவற்றில் கலந்துகொள்வதும் ஒரு நாகரிக சமூகத்தில் நடக்கும் விடயங்களே. எல்லாவற்றையும் 13ஆவது திருத்தத்தை ஏற்றோர் – எதிர்ப்போர் என்ற வாய்ப்பாட்டில் துரோகி — தியாகி என வகைப்படுத்தும் புதியதோர் ஒழுங்கைக் கொண்டு வரத் துடிக்கின்றனர். வடக ிழக்குக்கு அப்பாலுள்ள எமது உறவுகள், தென்னிலங்கையிலுள்ள நடுநிலையானோர் எமது போராட்டத்தினையும், திலீபனின் தியாக வரலாற்றையும் அறிய விடாமல் திரைபோட முனைவது சிறுபிள்ளைத்தனமானது.

நினைவேந்தல் நிகழ்வுகளை உங்களது அரசியல் எதிரிகளைச் சாடும் களங்களாக மாற்றும் நடைமுறைகளைக் கைவிடுங்கள் என ஏற்கனவே கஜேந்திரகுமாரிடம் நான் நேரில் வேண்டுகோள் விடுத்திருந்தேன். எனது வேண்டுகோளை ஏற்பதாக எனக்கு உறுதிமொழி வழங்கிய அவர் கிளிநொச்சியில் நடைபெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரைச் சாடி வெளியிட்ட கருத்துகளை வலம்புரி பத்திரிகை வெளியிட்டிருந்தது. தொடர்ந்து திலீபனின் நினைவேந்தலில் தமது அரசியல் எதிரிகளான முன்னாள் சகாக்களைச் சாடும் வகையில் சட்டத்தரணி சுகாஸ் கருத்துகளை வெளியிட்டபோது நிகழ்வின் ஏற்பாட்டாளரான பொன் மாஸ்டரிடம் எனது ஆட்சேபனையைத் தெரிவித்திருந்தேன். சுகாஸை நியாயப்படுத்தும் கருத்துகளைத் தான் பொன் மாஸ்டர் தெரிவித்தார்.

நிகழ்ச்சி ஒழுங்கின்படி மலர் வணக்கம் தொடங்கிய வேளை திலீபனுக்கு மாலை சூட்ட வரிசையில் நின்றேன். நீங்கள் பிறகு கலந்து மாலை போடுங்கள் என உத்தரவிட்டார் ஒருவர். நான் திரும்பிச் சென்றேன். உடனே அங்கே வந்த ஜனநாயகப் போராளிகள் அமைப்பினர் என்னைக் கூட்டிக் கொண்டுபோய் மாலை சூட்ட வைத்தனர்.அன்று என்னைத் தடுத்தவர் தான் திலீபனுக்கு அஞ்சலி செலுத்த வந்த அமைச்சர் சந்திரசேகரிடம் தமது எதிர்ப்பை வெளியிட ஆரம்பித்து எங்களை நாகரிகமற்ற மக்கள் கூட்டமாக வெளிப்படுத்த முனைந்துள்ளனர். தொடர்ந்து நடந்த நிகழ்வுகள் அரசியல் அறமற்றவை.

எதிர்காலத்தில் பொது நிகழ்வுகளை நடத்த முனைவோர் நிகழ்வின் நோக்கத்தைத் திசை திருப்புவோர் விடயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென வேண்டுகிறேன். மக்களின் மனநிலையை உணர்வுகளை விளங்கிக் கொண்டு கண்ணியமான முறையில் நடந்து கொண்டால் தான் அடுத்த சந்ததியினர் அரசியல் கண்ணியத்தைக் கற்றுக் கொள்வர். கடந்த சில வருடங்களாக ஒரு அணியினர் மாநகரசபைக்குச் சொந்தமான இடத்தில் உரிய கட்டணம் செலுத்தி திலீபனின் வரலாறு – ஈகம் தொடர்பாக விடயங்களை அடுத்த சந்ததிக்கு கடத்தவும், மூத்த சந்ததிக்கு நினை



வுட்டவும் முயன்றனர். அவர்களது அரசியல் எப்படியாவது இருந்து விட்டுப் போகட்டும். அவர்கள் செய்தது காத்திரமான பணி. இதனைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் இந் நிலத்துக்குரிய வாடகைப் பணத்தை முன்னரே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் யாழ். மாநகர சபையில் கட்டி விட்டனர்.

கஜேந்திரகுமார் மூன்றாவது தலைமுறைப் பணக்காரர் என்ற வகையில் பணத்தால் எதையும் தடுத்து நிறுத்த முடியும் என்று நினைத்திருக்கிறார் போல் உள்ளது. மாநகரசபை நிலத்துக்கே இவ்வளவு கோளாறு பண்ண முனைந்த கஜேந்திரகுமார் தமது குடும்பத்தினருக்குச் சொந்தக்காணிகள் விடயத்தில் பெருந்தன்மையைக் காட்ட முனைவாரா? அது சூரியன் மேற்கே உதித்தாலும் சரிவராத விடயம். ஒரு தேசியவாதியாகவோ, மனிதாபிமானியாகவோ அவர் நடக்க முயற்சிக்கவில்லை என்பது வருத்தமளிக்கும் விடயம். இதில் முதலாவது விடயம் பளை வைத்தியசாலை தொடர்பானது, இரண்டாவது பச்சிலைப்பள்ளி பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்தால் நிர்வகிக்கப்பட்டு வந்த எரிபொருள் நிலையம் தொடர்பானது. பளை பிரதேச வைத்தியசாலையின் விரிவாக்கத்துக்கான காணி போதாமல் இருந்தது. ஆகவே வைத்தியசாலைக்கு அருகில் உள்ள ஜீ.ஜீ. பொன்னம்பலம் குடும்பத்தின் காணியினைப் பெற்றுக் கொள்வதற்காக வைத்தியசாலையினர் (அபிவிருத்திச் சங்கம் உள்பட) ஒரு முயற்சியை மேற்கொண்டனர்.

அதற்காகத் தொடர்பு கொண்டபோது அந்தக் காணி DRO முருகேசம்பிள்ளையின் மாமனார் முத்தையாவின் காணி என்று கூறப்பட்டது. முருகேசம்பிள்ளை, முத்தையா, ஜீ.ஜீ.பொன்னம்பலம், குமார் பொன்னம்பலம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எல்லாம் வேறு வேறு ஆட்களல்ல. ஒரே குடும்பத்தினர். வாரிசுகள். ஆகவே பொதுமக்கள் நலன்கருதி ஒரு சிறு காணித்துண்டை அன்பளிப்பாக வழங்குமாறு உரியவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கு அவர்கள் சொன்ன பதில், இந்த (பளை) மருத்துவமனை இருக்கின்ற காணியே தங்களுடையது தான் என்றார்கள்.

